# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 260 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆடி 28, வெள்ளிக்கிழமை 12.08.2016


முச்சந்தி முரளி



சட்டம் நிறைவேறிற்று அடுத்தது என்ன ... ?

## உண்மையைக் கண்டறிய மட்டுமே காணாமற்போனோரின் அலுவலகம்

### நீதிமன்ற அதிகாரம் அதற்குக் கிடையாது

கொழும்பு, ஓக. 12

காணாமற்போனோர் அலுவலகத்தால் உண்மையைக் கண்டறிய முடியுமே தவிர, எவரையும் விசாரணைக்கு உட்படுத்தவோ, தண்டிக்கவோ முடியாது. இந்த அலுவலகத்துக்கு நீதிமன்ற அதிகாரம் கிடையாது.

இவ்வாறு சபையில் அறிவித்தார் அயலுறவு அமைச்சர் மங்கள சமரவீர.

காணாமற்போனோர் குறித்து ஆராய்ந்து ஆவணப்படுத்தல், அவர்களின் குடும்பங்களுக்கு உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான யோசனைகளை முன்வைத்தல் உள்ளிட்ட விடயங்களே இந்த அலுவலகத்தின் ஊடாக இடம்பெறும் என்றும் அவர் விளக்கமளித்தார்.

காணாமற்போனோர் அலுவலகம் (தாபித்தலும், நிர்வகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டவரைவு நேற்று நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டதன் பின்னர்

>> 05ஆம் பக்கம்

## உடனே தேவை

யாழ்ப்பாணம், ஓக. 12

புனர்வாழ்வு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகளில் சந்தேகத்து இடமாக உயிரிழந்தவர்களுடைய விவரங்களை உடனடியாக வழங்குமாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் கேட்டுள்ளார். உயிரிழந்த முன்னாள் போராளியின் பெயர், சிகிச்சை பெற்ற வைத்தியசாலை, உயிரிழந்த திகதி இந்தத் தகவலை வழங்குபவரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை உடனடியாக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அல்லது பிராந்திய சுகாதார சேவைகள் நிலையத்தில் எழுத்து மூலம் கையளிக்கு

>> 24ஆம் பக்கம்



### வெறும் பொருளாதார நன்மைகள்

## தமிழரை விலைக்கு வாங்கும் செயல்

*சந்திரிகா முன்பாக எடுத்துரைத்தார் முதலமைச்சர்*

வேலணை, ஓக.12

நீதியான போர்க்குற்ற விசாரணையை உறுதி செய்யாது, வெறும் பொருளாதார நன்மைகளைத் தமிழ் மக்களுக்கு அளிப்பது அவர்களை விலைக்கு வாங்குவதாக அமையும். எமது பிரதேசங்களில் தமிழர்கள் 2000 ஆண்டுகளுக்கு மேலான பாரம்பரியத்தைக் கொண்ட பெரும்பான்மையினராக இதுகாறும் வாழ்ந்து வந்தவர்கள். போர்க்குற்றங்கள் யார் இழைத்திருந்தாலும் அவற்றைக் கண்டு பிடித்து நியாயம் வழங்கி நீதியை நிலை நாட்டவேண்டும் என்ற குறிக்கோள் உடையவர்கள்.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் நல்லிணக்க செயலகத்தின் தலைவருமான சந்திரிகா குமாரதுங்க முன்னிலையில் எடுத்துரைத்தார் வடக்கு முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன்.

வேலணைப் பிரதேசத்தில் இடம்

>> 05ஆம் பக்கம்

- நேரில் களமிறங்கி வழிநடத்தினார் ரணில்
- தமிழ்க் கூட்டமைப்பு, ஜே.வி.பியின் ஆதரவு
- கறுப்புப்பட்டியுடன் குதித்தது மகிந்த அணி
- அமைச்சர் மங்களவுக்குப் பாதுகாப்பு அரண்
- அமளிதுமளியால் சபை ஒத்திவைப்பு

### காணாமற்போனோரின் அலுவலகச் சட்டம் நேற்று நிறைவேறியது

## மகிந்த அணியின் எதிர்ப்பு முறியடிப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 12

காணாமற்போனோர் தொடர்பிலான விவகாரங்களைக் கையாள்வதற்கான அலுவலகத்தை அமைப்பதற்குரிய சட்டம் நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேறியது. சட்ட வரைவு மீதான விவாதத்தைக் குழப்பியடிப்பதற்கு மகிந்த அணியினர் வகுத்த அனைத்து வியூகங்களையும் முறியடித்து வெற்றி பெற்றது அரசு.

மகிந்த அணி சபைக்கு நடுவில் களமிறங்கி கூச்சல், குழப்பத்தில் ஈடுபட்டது. எனினும் தமிழ்த் தேசியக் கூட்ட

>> 08ஆம் பக்கம்

### நீள்கிறது அமெரிக்க ஆதிக்கம்

றியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று இரவு வரை (இலங்கை நேரப்படி) பதக்கப் பட்டியலில் அமெரிக்காவின் ஆதிக்கம் நீண்டு செல்கிறது. அதேநேரத்தில் ஜப்பான் முதல் மூன்று நாடுகளுக்கான போட்டியில் இணைந்தது.

11 தங்கம், 11 வெள்ளி, 10 வெண்கலம் என மொத்தம் 32 பதக்கங்களுடன் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. 10 தங்கம், 5 வெள்ளி, 8 வெண்கலம் என 23 பதக்கங்களுடன் சீனா இரண்டாவது இடத்திலும், 6 தங்கம், 11 வெள்ளி ஒரு வெண்கலம் என 18 பதக்கங்களுடன் ஜப்பான் மூன்றாவது இடத்திலும் உள்ளன. முதல் மூன்று நாடுகளுக்கு இடையிலான போட்டியில் நின்ற ஆஸ்திரேலியா பின் தள்ளப்பட்டது. (ம-23)

### அமளிதுமளிக்கிடையே 'செல்பி'யும் கலக்கல்



காணாமற்போனோர் தொடர்பான சட்டவரைவை நிறைவேற்றுவதைத் தடுப்பதற்காக நாடாளுமன்றத்தில் குழப்பத்தை ஏற்படுத்திய மகிந்த அணியினர், அதில் தங்கள் பங்களிப்பை 'செல்பி' எடுக்கவும் தவறவில்லை. நாடாளுமன்ற சபா மண்டபத்துக்

>> 24ஆம் பக்கம்

### ஊசி ஏற்றப்பட்ட விவகாரம்:



## மருத்துவச் சோதனைக்காக அ'புர அரசியல் கைதி யாழ். மருத்துவமனைக்கு

யாழ்ப்பாணம், ஓக.12

அநுராதபுரம் சிறைச்சாலையில் வைத்து ஊசி ஏற்றப்பட்டதால் மனநிலை பாதிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படும் இராசையா ஆனந்தராசா என்ற அரசியல் கைதி மருத்துவப் பரிசோதனைக்காக இன்று யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்படுகிறார்.

கிளிநொச்சி நீதிவான் மன்றின் கட்டளையின்படியே இந்த மருத்

>> 04ஆம் பக்கம்

## பாடசாலை அதிபருக்கு 20 வருட கடூழியச் சிறை

*6 வயது மாணவி மீது பாலியல் வதை புரிந்தார்*

வவுனியா, ஓக. 12

பாடசாலை மாணவியான 6 வயதுச் சிறுமியை பாலியல் ரீதியில் உட்படுத்திய வவுனியாவைச் சேர்ந்த பாடசாலை அதிபருக்கு 5 வருடங்களின் பின் '20 வருட கடூழியச் சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது வவுனியா மேல் நீதிமன்று.

வவுனியாவில் உள்ள பாடசாலை ஒன்றில் முத லாம் தரத்தில் கல்வி பயின்ற சிறுமியைப் பாலியல் துர்நடத்தைக்குட்படுத்தினார் என்ற அவர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டது. 51 வயதான பாடசாலை அதிபர் ஆனந்தன் தர்மசீலன் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டார்.

2011ஆம் ஆண்டு குறித்த பாட

>> 04ஆம் பக்கம்

## சுதந்திரத்தின் பின் எந்த அரசுமே தமிழருக்காக பணியாற்றவில்லை

### வேலணையில் ஒப்புக்கொண்டார் சந்திரிகா

வேலணை, ஓக. 12

சுதந்திரத்துக்குப் பின்பு உருவான எந்த அரசுமே தமிழருக்கான பணியை ஆற்றவில்லை. எனவேதான் தமிழ் மக்களின் மனதில் விரக்தி, கோபம் என்பன ஏற்பட்டன. அது ஆயுத வடிவமாக மாறிய போது போர் ஏற்பட்டது எனக் கருதுகின்றேன்.

இவ்வாறு வேலணையில் தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க.

வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவில் பன்னாட்டு நிறுவனம் ஒன்று அமைத்த மழைநீர்த் தொட்டியைப் பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு நல்லிணக்கச்

>> 23ஆம் பக்கம்


உங்கள் சேமிப்பிற்கு கவர்ச்சிகரமான வட்டி வீதம்

வர்தன எக்ஸ்றீம் சேவர்

ரூ.1000 தொடக்கம் ரூ.50 மில்லியனுக்கு மேல் நீங்கள் தொடர்ச்சியாக சேமிக்கும் எந்தவொரு தொகைக்கும் அதிகபட்ச வட்டி வருமானமாக 6.75% (AER 6.96%) முதல் 9.25% (AER 9.65%) வரை கவர்ச்சிகரமான வருடாந்த வட்டி வீதத்தினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

24 மணிநேர அழைப்பு மையம்: 0112350000

www.dfcc.lk

DFCC வங்கி

உங்கள் வளர்ச்சிக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிலங்கையருக்கு வடக்கில் அரச பணி வழங்குவது நல்லிணக்கத்தைப் பாதிக்கும்

### *முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிடம் எடுத்துரைத்தார் சரவணபவன் எம்.பி.*

வடக்கு மாகாணத்தில் பல ஆயிரம் பட்டதாரிகள் மற்றும் இளையோர் வேலையற்று உள்ள போதும் வடக்கு அரச அலுவலகங்களில் நிலவும் ஆளணி வெற்றிடங்களுக்குத் தென்னிலங்கையில் இருந்து ஊழியர்கள் நியமிக்கப்படுவதனால் நல்லிணக்கம் பாதிக்கப்படுமே அன்றி, வலுப்பெறும் சூழல் ஏற்படாது.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவிடம் சுட்டிக்காட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், அது பற்றிய விவரங்களையும் அவரிடம் கையளித்தார்.

வேலணைப் பிரதேசத்தில் இடம்பெற்ற மழை நீரைச் சேகரிப்பதற்கான நீர்த்தாங்கிகளைப் பொது மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அதில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா, நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் பல ஆயிரம் பட்டதாரிகள் நீண்டகாலமாக வேலைவாய்ப்பின்றி உள்ளனர். அதேபோல் ஜீ.சி.ஈ. உயர்தர சித்தியுடன் பல்லாயிரக்கணக்கானோர் உள்ளபோதும், வடக்கு அரச அலுவலகங்களில் நிலவும் பல ஆளணி வெற்றிடங்களுக்கு தென்னிலங்கையில் இருந்து ஊழியர்கள் நியமிக்கப்படுகின்றனர். இதனால் நல்லிணக்கம் பாதிக்கப்படுமே அன்றி வலுப்பெறும் சூழல் ஏற்படாது .

அண்மையில்கூட வடக்கின் ஓர் அலுவலகத்தில் நிலவும் அலுவலக உதவியாளர் பணிக்கு சாதாரண தகைமையுடன் விண்ணப்பம் கோரப்பட்டபோதும், பட்டதாரிகளில் மட்டும் 17 பேர் விண்ணப்பித்திருந்தனர். இவ்வாறு இங்கு வேலையில்லாப் பிரச்சனையுள்ளது. (வ-4,101)

## 5 பிள்ளைகளின் தாயை 4 மாதங்களாகக் காணவில்லை

முல்லைத்தீவு, ஓக. 12

2 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பணத்துடன் 5 பிள்ளைகளின் தாய் கடந்த 4 மாதங்களாகக் காணாமற் போயுள்ளதாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

ஒட்டுசுட்டான்தட்டையர்மலை கிராமத்தில் வசிக்கும் அவர், கடந்த ஏப்ரல் மாதம் கறி வாங்கிவருவதாகக் கூறிச் சென்றவர் பின்னர் வீடு திரும்பவில்லை.

ஒட்டுசுட்டான் பொலிஸில் சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று முறைப்பாடு செய்திருந்தபோதும் இன்றுவரை எந்தவித தகவலும் இல்லை. இதுபற்றிப் பொலிஸாரிடம் கேட்டபோது, அவருடைய அலைபேசியுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை எனவும் அவரைத் தேடிக் கொண்டு இருக்கிறோம் எனவும் கூறினர் என உறவினர்கள் தெரிவித்தனர்.

(வ-4,500)

## மர நடுகைப் பரப்புரை

மர நடுகைப் பரப்புரை நிகழ்வு இன்று முற்பகல் 10.30 மணிக்கு யாழ்ப்பாணம் முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

(ந-ரி4)

## பொலிஸார் வசமுள்ள காணிகள் உடனே விடுவிக்கப்பட வேண்டும்

### *சரவணபவன் எம்.பி. வலியுறுத்து*

யாழ்ப்பாணம், ஓக. 12

வலி. வடக்கில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் 63 ஏக்கர் காணியைப் பொலிஸார் கையகப்படுத்தி வைத்துள்ளனர். அவற்றை இரண்டு வாரங்களுக்குள் விடுவிப்பதாக பொலிஸ்மா அதிபர் உறுதியளித்திருந்தார். எனினும் ஒரு மாதத்துக்கு மேலாகியும் இதுவரை அந்தக் காணிகள் விடுவிக்கப்படவில்லை. அவற்றை உரியவர்களிடம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் நல்லிணக்க செயலகத்தின் தலைவியுமான சந்திரிகா குமாரதுங்கவிடம் நேரில் வலியுறுத்தினார் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

இதன்போது அவர் தெரிவித்ததாவது:

"வலி.வடக்கில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் பல கோரிக்கைகள் நீண்டபோராட்டங்களின் பயனாக சொற்ப நிலங்களை மீளப்பெற்றனர். அவ்வாறு பாதுகாப்பு அமைச்சு விடுவித்த இடத்தில் தற்போது பொலிசார் 63 ஏக்கர் காணிகளை தமது பயன்பாட்டுக்கு வேண்டுமென எவரது அனுமதியும் இன்றி ஆக்கிரமித்துள்ளனர். இது வெந்த புண்ணில் வேல் பாச்சும் செயலாக அமையுமே அன்றி, நல்லிணக்க செயற்பாடுகளுக்கு உதவி புரியாது.



இந்தக் காணிகளை விடுவிப்பது தொடர்பில் இரண்டு வாரங்களுக்குள் முடிவைத் தருவேன் என பொலிஸ்மா அதிபர், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனிடம் உறுதியளித்திருந்தார். எனினும் ஒரு மாதத்துக்கு மேலாகியும் பொலிஸார் அதனை விடுவிக்கவில்லை. இவை தொடர்பில் ஆவன செய்ய வேண்டும்" – என்றார்.

அத்துடன், இது தொடர்பில் எழுத்து மூல கோரிக்கையையும் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சந்திரிகா குமாரதுங்கவிடம் வழங்கினார். ஆவணங்களைப் பெற்றுக் கொண்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா, பொலிஸார் பிடித்த நிலம் தொடர்பில் உடன் ஆராய்ந்து ஆவன செய்யப்படும். குறித்த நில உரிமையாளரின் சம்மதமின்றி ஏதும் மேற்கொள்ளலாகாது. வேலை வாய்ப்புக்களில் பாகுபாடு இடம்பெறாது இருக்க இனி வரும் காலத்தில் ஆவன செய்யப்படும் என்று உறுதியளித்தார்.

(வ)

## மாணவர்கள் புரிந்துணர்வின்றி இருப்பதற்கு இடமளியாதீர்கள்

### *யாழ். பல்கலை. நிர்வாகத்திடம் வலியுறுத்தினார் சந்திரிகா*

யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் மத்தியில் புரிந்துணர்வு ஏற்படுத்தக் காத்திரமான திட்டங்களை சமர்ப்பித்தால், அதற்குத் தேவையான உதவி களை வழங்கத் தயார். மாண வர்கள் புரிந்துணர்வின்றி இருக்க இடமளியாதீர்.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் மற்றும் பீடாதிபதிகளிடம் தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, உயர் கல்வி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட குழுவினர் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நேற்று சந்திப்பு ஒன்றை நடத்தினர். அதில் விரிவுரையாளர்களும், மாணவர்களும் கலந்துகொண்டனர். அங்கு பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

கடந்த மாதம் 16ஆம் திகதி இடம்பெற்ற அசம்பாவிதங்களின் பின்னர் உள்ள நிலமை தொடர்பிலும் யாழ். மாவட்ட கல்வி நிலமை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

குறித்த சந்திப்பில் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் இனிவரும் காலங்களில் தொடராது இருப்பதற்கான வழிமுறைகளுடன், யாழ். குடாநாட்டில் கடந்த காலத்தில் இருந்த கல்வி வளர்ச்சி தற்போதைய வீழ்ச்சிப் போக்கிற்கான காரணமும் கேட்டறியப்பட்டது.

இதில் குறிப்பாக பல்கலைக்கழக அசம்பாவிதம் தொடர்பில் சிங்கள மாணவர்கள் பலரையும் சந்தித்துக் கலந்துரையாடியபோது, அவர்களும் தமது தரப்பில் உள்ள ஆதங்கத்தை வெளியிட்டனர். குறிப்பாக யாழ். பல்கலைக்கழகத்தில் அதிக சிங்கள மாணவர்கள் உள்ள போதிலும், ஒருவர் கூட மாணவர் மன்றத்தில் இல்லை என்பது உள்ளிட்ட விடயத்தைத் தெரிவித்ததாகக் கூறப்பட்டது.

இதனை அடுத்து யாழ். பல்கலைக்கழகத்தில் கடந்த காலத்திலும் இந்த ஆண்டிலும் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையை இன ரீதியில் சுட்டிக்காட்டி நிர்வாக ரீதியில் எந்த முரணும் இன்றிக் கொண்டு செல்வதையும் சந்திரிகா சுட்டிக்காட்டினார்.

இதன்போது கருத்து வெளியிட்ட பீடாதிபதி ஒருவர், பல்கலைக்கழக விடுதியில் உள்ள சிங்கள மாணவர்களைப் போன்று, அயலில் உள்ள தமிழ் மக்களின் வீடுகளிலும் சிங்கள மாணவர்கள் தங்கியிருந்து கல்வி கற்கின்றனர். யாழ்ப்பாணத்தில் இன முரண்பாடாக நோக்கியிருப்பின் தமது வீடுகளில் இடத்தை வழங்க முன்வரமாட்டார்கள் என்பதைச் சுட்டிக்காட்டினார்.

இதேபோன்று இங்கு இடம்பெற்ற அசம்பாவிதத்தின் பின்னணியில் ஒரு சில அப்பாவி மாணவர்களைத் தமது இலாபத்திற்காக ஓர் அரசியல் கட்சி செயற்பட்டதான தமது வலுவான சந்தேகத்தையும் விரிவுரையாளர் ஒருவர் சுட்டிக்காட்டினார்.

குடாநாட்டு மாணவர்களின் கல்வி, ஒருபுறத்தில் போதிய துறைசார் ஆசிரியர்கள் இன்றி நலிவடைந்து செல்லும் அதே நேரம், பிறிதொரு வகையால் திட்டமிட்ட வகையில் மாணவர்கள் இலக்கு வைக்கப்பட்டு தவறான வழிக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். இதுவே யாழ். மாவட்டக் கல்வி வீழ்ச்சிக்கான காரணங்களாகவும் உள்ளன எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

(வ-4,101)

## கல்வியியல் முதுமாணி வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், ஓக.12

கல்வியியல் முது மாணி மற்றும் தமிழில் நடத்தப்படும் கற்கை நெறிகளுக்கான வகுப்புக்கள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு உயர்பட்டப் படிப்புகள் பீடத்தில் நடைபெறும் என உயர்பட்டப் படிப்புகள் பீடப் பீடாதிபதி கு.மிகுந்தன் தெரிவித்தார்.

உயர்பட்டப் படிப்புகள் பீடத்தால் யாழ்ப் பாண நிலையத்தில் நடத்தப்படும் கல்வியியல் முது மாணியின் 12 ஆவது அணியின் ஆரம்ப நிகழ்வும், வகுப்புக்களும் நடைபெறும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

(ந-ரி)

## வெடிச் சத்தங்களால் அதிர்ந்தது முல்லை.

முல்லைத்தீவு, ஓக 12

2009ஆம் ஆண்டு இறுதி போர் நடைபெற்ற காலத்தில் அதிர்ந்தது போன்று, நேற்றும் புதுமாத்தளன், அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம், இரட்டைவாய்க்கால், முள்ளிவாய்க்கால் ஆகிய பகுதிகள் குண்டுச் சத்தங்களால் அதிர்ந்தன என முல்லைத்தீவு மக்கள் தெரிவித்தனர்.

அதிஉச்சக்கட்ட போர்நடவடிக்கை நடைபெற்ற குறித்த இடங்களில் வெடிக்காத நிலையில் இருந்த வெடி பொருள்கள் நேற்று நண்பகல் 12.00 மணியில் இருந்து மாலை 4.00 மணிவரை எச்டியு. எஸ்.எல்.ஏ என்ற படைப் பிரிவினரால் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டன.

பரந்தன் முல்லைத்தீவு பிரதான வீதிக்கு அருகே நிலை கொண்டுள்ள எச்டியு. எஸ்.எல்.ஏ இராணுவப் படையணியே இந்த வெடி பொருள்களை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டது.

"அதிஉச்சக்கட்ட போர்நடவடிக்கை நடைபெற்ற குறித்த இடங்களில் வெடிக்காத நிலையில் அதிகமான வெடிபொருள்கள் உள்ளன. அவற்றை அழிப்பதற்கான சிறப்பு நடவடிக்கையில் நாம் ஈடுபட்டுள்ளோம். அதற்காகவே அந்தப் பகுதிகளில் நிலை கொண்டுள்ளோம். எமது தேடுதலில் மீட்கப்பட்ட வெடிபொருள்களை மிகவும் பாதுகாப்பாகத் தாக்கி அழிக்கும் நடவடிக்கையை இன்று (நேற்று) மேற்கொண்டோம்.

அந்தப் பகுதிகளில் பொது மக்களின் நடமாட்டம் இருக்கின்றதா? என்று ஆராய்ந்தோம். பின்னர் மீட்கப்பட்ட வெடி பொருள்கள் சக்தி வாய்ந்தவையாகக் காணப்பட்டதால் கட்டம் கட்டமாகத் தகர்த்து அழித்துள்ளோம். பொது மக்களின் பாதுகாப்புக்காக இராணுவத்தினரை நிலைகொள்ளச் செய்துள்ளோம்" என்றார் அந்தப் பிரிவின் இராணுவ அதிகாரி ஒருவர்.

(வ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முதியவரின்**
போராட்டம் தொடர்கிறது

பொருளாதார வலயத்துக்கு ஓமந்தையே சிறந்த தெரிவு என வலியுறுத்தி வவுனியாவைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை மகேஸ்வரன் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நேற்றும் தொடர்ந்தார்.

நடுவண் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் வடக்கு மாகாணத்தில் அமைக்கப்பட உள்ள பொருளாதார வலயத்துக்கு கருத்துக்கணிப்புக்கள் தேவையில்லை, ஏற்கனவே திட்டமிட்டவாறு பொருளாதாத வலயம் ஓமந்தையில் அமைய வேண்டும் என்று வலியுறுத்தி குறித்த முதியவர் நேற்று முன்தினம் இந்த உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தார். நேற்று இரண்டாவது நாளாகவும் அதற்கான உறுதியான முடிவுகள் எட்டப்படாமையினால், இன்றும் 3 ஆவது நாளாகப் போராட்டத்தை தொடர்வதாக அவர் தெரிவித்தார். (வ-2)

அசத்தலான , ஆடிமாத ஆடைத்தள்ளுபடி

# த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ் ஸ்தாபனத்தின்

உங்கள் தெரிவுக்கு முந்துங்கள் இன்னும் 5 நாட்கள் மட்டுமே.



- சாறி (பட்டு கல்லுவைத்தது) 2500/=
- நெற்சாறிகள் 1000/=
- சாறிகள் 1500/=
- ஸ்கேட் வகைகள் 500/=
- பிளவுஸ் வகைகள் 250/=
- T. சேட் வகைகள் 250/=
- பஞ்சாபி வகைகள் 500/=
- ஜீன்ஸ்வகைகள் 500/=
- சேட் வகைகள் 500/=
- கொட்டன் சாறிவகைகள் 500/=
- 01 M சலஞ்சர்துணி 44" 100/=

மற்றும் அனைத்து ஆடை தினுசுகளுக்கும் விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படுகின்றன.

ஆடி மாதம் முடியும் வரை என்றும்
எங்கும் இல்லாதவாறு புதுப்புது டிசைன்களில்

44, 42, பெரியகடை , யாழ்ப்பாணம்.

## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் 2016 ஆம் ஆண்டு மஹோற்சவகால விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 14.08.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. அக்கூட்டத்திற்கு சகல அங்கத்தவர்களையும் தவறாது பங்குபற்றுமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**செயலாளர்**
**தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்**

(ச/ 21367)(12.18)

## இராமநாதன் நுண்கலைக்கழகம் கலைப்பீடம்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## கல்வியாண்டு 2014/2015
## முதலாம்வருட மாணவர்களுக்கான விரிவுரைகளை ஆரம்பித்தலும் அறிமுக நிகழ்வும்

முதலாம் வருட இசை மற்றும் நடனம், சித்தரமும் வடிவமைப்பும் ஆகிய கற்கைநெறி மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு (Orientation Programme) 15.08.2016 ஆம் திகதி மருதனார் மடத்திலுள்ள இராமநாதன் நுண்கலைக்கழக கலையுரங்கில் காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

இராமநாதன் நண்கலைக்கழகத்தில் முதலாம் வருட மாணவர் களுக்கான இசை மற்றும் நடனம், சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறிகளுக்கான விரிவுரை கள் 22.08.2016 ஆம் திகதி ஆரம்பமாகின்றன.

2ஆம்,3ஆம், 4ஆம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் 05.09.2016 ஆம் திகதி ஆரம்பமாகும்.

**பதிவாளர்**
**யாழ் பல்கலைக்கழகம்**
**08.08.2016**

# மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்
# கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச்செயலகம் சார்பாக அரசாங்க அதிபர் / மாவட்டச்செயலரால் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் நிதியுதவியுடன் தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பலாலி கிராம உள்ளக வீதிகள், கீரிமலை வீட்டுத்திட்ட உள்ளக வீதி மற்றும் கீரிமலையில் பிதிர்க்கடன் நிறைவேற்றும் கடற்கரை பகுதியில் கற்பாறை அகற்றலும் எல்லைச்சுவர் அமைத்தலுக்கான தகுதி மற்றும் தகைமை உடைய ஒப்பந்தகாரர்களிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

1. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்
2. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் மீள்குடியேற்ற பிரிவு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 15.08.2016 தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரை விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் மேலதிக மாவட்டச் செயலாளர்-காணி, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல:021 221 2631) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றினை மீள்குடியேற்ற பிரிவு மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 15.08.2016 முதல் 05.09.2016 வரை காலை 9.00 மணியிலிருந்து மாலை 2.00 மணிவரையான காலப்பகுதியில் கீழ்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்ட தொகையை கட்டணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
5. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச் செயலகம் ,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 06.09.2016ஆம்திகதியன்றுமு.ப 10.00மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் அரச அதிபர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் கையொப்பமிட்டு கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர், மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேற்குறிப்பிட்ட முகவரியில் 06.09.2016 ஆம் திகதிமு.ப 10.30 மணிக்கு நேரடியாக வருகை தர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது அவர்களில் எழுத்து மூலம் சமர்பிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். கேள்விகளின் மூலப்பிரதி தனியாகவும், நகல் தனியாகவும் இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச்சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.
7. முன் ஆயத்த கூட்டம் ( Prebid Meeting) 25.08.2016 காலை 10.00மணிக்கு அரசஅதிபர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

| இல | கேள்வி அடையாள இலக்கம் | வேலை விவரம் | மீளளிக்கப் படாத தொகை | மதிப்பீட்டுத் தொகை (Rs in mn) | தேவையான தராதரம் (CIDA) | கேள்விப்பிணை விவரம்/ செல்லுபடியாகும் காலம் | | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | JF/RES/Infras/ Road-10/IV/07/2016 | பலாலி கிராம உள்ளக வீதி திருத்தம் | 1500.00 | 7.8 | C7 and Above | 78,955.00 | 05.12.2016 | 120 நாள்கள் |
| 2 | JF/MR/RD/01/16 | கீரிமலையில் பிதிர்க்கடன் நிறைவேற்றும் கடற்கரை பகுதியில் கற்பாறை அகற்றலும் எல்லைச்சுவர் அமைத்தலும் | 1000.00 | 5.6 | C7 and Above | 56,500.00 | 05.12.2016 | 120 நாள்கள் |
| 3 | JF/RES/Infras/ Road-10/IV/07-1/2016 | கீரிமலை வீட்டுத்திட்ட உள்ளக வீதி திருத்தம் | 4000.00 | 26.7 | C5 and Above | 2676220.00 | 05.12.2016 | 120 நாள்கள் |

நா.வேதநாயகன்
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்
யாழ்ப்பாண மாவட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## FACULTY OF ARTS

University of Jaffna will entertain applications from the qualified persons for the under mention posts.

Senior Professor/Professor of **Education / Economics/ Geography/ Hindu Civilization / Fine Arts /Linguistics/ Tamil**

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in ***Education /History/Media Studies/ Law/ Geography/ Philosophy/ Translation Studies / Tamil / Dance (Bharathnatiyam/Drama & Theatre) /Music (Vocal/Violin/Mirudangam) / Art & Design (Computer Graphics)**

Note: For position in Education preference will be given to those who have relevant special degree with major component of study programme in Commerce/Management

### SALARY AND OTHER BENEFITS

| Post | Salary scale |
|---|---|
| Senior Professor | Rs. 67,100 – 11 x 1425 – 82,775/- p.m |
| Professor | Rs. 56,505 - 13 x 1310 – 73,535/- p.m |
| Senior Lecturer Grade I | Rs. 45,545 – 7 x 1050 – 52,895/- p.m. |
| Senior Lecturer Grade II | Rs. 39,755 – 11 x 790 – 48,445/-p.m |
| Lecturer (Probationary) | Rs. 27,775 – 10 x 645 - 34,225/-p.m. |

**Note**:

In addition to the above salary, the following allowances will be paid:
i. Special allowance – 20% of the basic salary
ii. Additional monthly allowance - 20% of the basic salary
iii. Interim Allowance Rs.10,000/=
iv. Cost of living allowance of Rs. 7,800/- p.m.

Further the following allowances will be paid only be paid to Academic Staffs:
i. Academic allowance on the basic Salary:

| | |
|---|---|
| Senior Professor | 152% |
| Professor | 147% |
| Senior Lecturer Grade I/Grade II | 136% |
| Lecturer (Probationary) | 100% |

ii. 35% Research allowance based on research activity

**Statutory benefits:**

(1) Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Grade II and above

(2) Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system.

(3) Gratuity payments

(4) Employees' Trust Fund benefits.

(5) Free Medical Services.

**Closing date:**

**Post of Senior Professor/Professor** - **15.10.2016**
**Other posts** - **15.09.2016**

Applications and other documents for the post of **Senior Professor/Professor** shall be sent to the Vice-Chancellor with covering letter. Applications for the **other posts** shall be sent to the Deputy Registrar/Academic Establishments Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form at People's Bank, University Branch or at the Shroffs counter of the University of Jaffna. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order for Rs.100/- drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self –addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- drawn in favour of the Bursar, University of Jaffna.

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA
**2016.08.11**

(c.24914) (13.18)


## பாடசாலை

சாலையில் அவர் அதிபராகக் கடமையாற்றியபோது பாலியல் வதை இடம்பெற்றது என வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இந்த முறைப்பாட்டையடுத்து 2011ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதி அதிபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வவுனியா நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டார். 2014ஆம் ஆண்டு அதிபருக்கு எதிரான குற்றப்பத்திரிகையை வவுனியா மேல் நீதிமன்றுக்கு சட்டமா அதிபர் பாரப்படுத்தினார். நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

இந்த வழக்கை அரச சட்டவாதி நிஷாந் நாகரட்ணம் நெறிப்படுத்தினார். பாதிக்கப்பட்ட சிறுமி வழங்கிய சாட்சியத்தின் அடிப்படையில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு சந்தேகத்துக்கு அப்பால் மன்றினால் நிரூபிக்கப்பட்டது என்று நீதிபதி அறிவித்தார்.

எதிரிக்கு 20 வருட கடூழியச் சிறைத் தண்டனையுடன் தண்டப் பணமாக 5 ஆயிரம் ரூபாவும் விதிக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஒரு இலட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்படவேண்டும் என்றும் நீதிமன்று உத்தரவிட்டது. இழப்பீட்டை வழங்கத் தவறினால் மேலும் இரண்டு வருடக் கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும்என்று வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தீர்ப்பளித்தார். (உ-வ-21)

## ஊசி ஏற்ற

துவசோதனை இடம்பெறுகிறது.

பட்டினிப் போராட்டம் நடத்திய ஆனந்தராசாவுக்கு அங்கு ஊசி ஏற்றப்பட்டது என்றும் அதன் பின்னர் அவர் இயல்பு நிலையைத் தொலைத்துவிட்டார் என்றும் சக கைதிகள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் தங்களைச் சந்திக்க வந்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனிடமும் தெரிவித்திருந்தனர்.

இதையடுத்து ஆனந்தராசாவை உடனடியாக மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், சிறைச்சாலைகள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதனிடம் கேட்டார். அதற்கமைய அமைச்சரால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் கிளிநொச்சி நீதிவானிடம் அனுமதி கேட்கப்பட்டது.

"அரசியல் கைதிக்கு அனுராதபுரம் சிறைச்சாலை வைத்தியசாலையில் இருந்து ஊசிகள் எதையும் ஏற்ற வேண்டாம். சிறப்பு மருத்துவ சிகிச்சைக்காக அவரை யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கவேண்டும் என சிறைச்சாலை அதிகாரிக்கு" கிளிநொச்சி நீதிவான் உத்தரவிட்டார்.

2006ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இராசையா ஆனந்தராசா, 2012ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டார். எனினும் 2012ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24ஆம் திகதி பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் அவர் மீண்டும் கைது செய்யப்பட்டார். அநுராதபுரம் சிறைச்சாலையில் அவர் தடுத்து வைக்கப்பட்டார்.

கடந்த ஜூன் மாதம் 5ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை தனது விடுதலையை வலியுறுத்தி ஆனந்தராசா தொடர்ச்சியான உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார். நோய் வாய்பப்ட்ட அவர், அனுராதபுரம் சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு ஊசி ஏற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதன் பின்னர் அவருடைய உடலில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன, உடல் மெலிந்து, முகம், நெஞ்சு பகுதிகள் கறுத்து அடையாளம் தெரியாத நிலையில் காணப்படார் எனச் சக கைதிகள் கூறுகின்றனர். இறுதியாக கடந்த மாதம் 18 ஆம் திகதி மீண்டும் ஊசி ஏற்றப்பட்டது. இதன் பின்னர் அவருக்கு மனநலம் பாதிக்கப்பட்டது எனச் சக அரசியல் கைதிகள் தெரிவித்தனர்.(வ-21)


**K.K ரவல்ஸ் இன் குளிரூட்டப்பட்ட சொகுசு வான் (HIACE) சேவை**

முதற் தடவையாக வவுனியாவில் இருந்து Staff Service தினமும் காலையும் மாலையும் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் நோக்கி ஆரம்பிக்கப்பட உள்ளது. வீட்டிலிருந்தே செல்லலாம். வங்கியாளர், அரச , தனியார் உத்தியோகத்தர்கள் முற்பதிவுகளை தனியாகவோ குழுவாகவோ மேற்கொள்ளலாம் இலங்கையின் எப்பாகத்திற்கும் சென்று வருவதற்கான வான் வசதி அனுபவமான சாரதிகளுடன் வழங்கப்படும்.

**077 604 0920 , 077 946 4287**



**மூத்த இதழியலாளர்**
**ஈ.ஆர்.திருச்செல்வம்** அவர்கள் எழுதிய
**"இதழியல் அடிப்படைகள்"**

**நூல் வெளியீட்டு விழா**

இடம்: **இலங்கைவேந்தன் கலைக் கல்லூரி**
நீராவியடி, யாழ்ப்பாணம்

காலம்: **14.08.2016 ஞாயிற்றுக்கிழமை**
**மாலை 4.30 மணி**

தலைமை : **வைத்தியர் வை.யோகேஸ்வரன்**
பிரதம விருந்தினர்: **கௌரவ ஈ.சரவணபவன் நா.உ.**
(நிர்வாக இயக்குநர் - 'உதயன்' நாளிதழ்)

**நிகழ்வு ஒழுங்கு**

மங்கல விளக்கேற்றல்
தமிழ்த்தாய் வாழ்த்து
வரவேற்புரை பேராசிரியர் **இரா.சிவசந்திரன்**
தலைமையுரை
பிரதம விருந்தினர் உரை
நூல் வெளியீடு
முதல் பிரதி பெறுபவர்: **திரு.க.சுசீந்திரன்**
(பிராந்திய முகாமையாளர் - மக்கள் வங்கி)
விசேட உரைகள்: **திரு.ந.விஜயசுந்தரம்**
(பிரதம ஆசிரியர் - 'வலம்புரி')
**திரு.வி.அற்புதானந்தன்**
(ஆசிரியர் - யாழ். தினக்குரல்)
மதிப்பீட்டு உரை: **தே.தேவானந்த்**
(இயக்குநர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம்)
ஏற்புரையும் நன்றியுரையும்: **நூலாசிரியர்**



*அனைவரும் வருக!*
**ஊடக நண்பர்கள்.**
(245775) (13.18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை கண்டறியப்பட்டாலேயே நல்லிணக்கம் ஏற்படும்

## நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் சுமந்திரன் எம்.பி

கொழும்பு,ஓக.12
நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமாயின் உண்மை கண்டறியப்பட வேண்டும். உண்மை ஏற்றுக் கொள்ளப்படாத பட்சத்தில் நல்லிணக்கம் ஏற்படாது.
இவ்வாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.
நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற காணாமற்போனோர் அலுவலகம் (தாபித்தலும் நிர்வகித்தலும் பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டவரைவின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் உரையாற்றினார்.
"1980 களின் இறுதிப்பகுதியில் காணாமற்போனோர் தொடர்பாக அப்போதைய அரசுக்கு எதிராக மகிந்த ராஜபக்ச மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் ஜெனிவா சென்றனர். மகிந்த ராஜபக்ச ஓர் உதாரணத்தை முன்வைத்துள்ளார். அவர் செய்தமை நாட்டில் ஆவணமாக்கப்பட்டுள்ளது.
காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு அறிக்கையிலும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையிலும் காணாமற்போனோரைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.
அவர் மீது(மகிந்த) எவரும் குற்றஞ்சாட்டவில்லை. அவராகவே ஆணைக்குழுவை நிறுவினார். அதனூடாக இந்தத் தகவல்கள் வெளிவந்தன".
என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன். (வ-4)

## தமிழுரை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பெற்ற மழை நீரைத் சேகரிப்பதற்கான நீர்த்தாங்கிகளை பொது மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.
இதன்போது வடக்கு முதலமைச்சர் தெரிவித்ததாவது:
மழை நீரைத் சேகரிப்பதற்கான நீர்த்தாங்கிகளை பொது மக்களிடம் கையளிக்கும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்து கொள்வதற்காக முன்னைநாள் ஜனாதிபதி நேரடியாக வேலணைப் பகுதிக்கு வருகை தந்திருப்பது வரவேற்கத்தக்கது. அம்மையார் இந்த நாட்டின் ஜனாதிபதியாக வீற்றிருந்த காலத்தில் இந்தப் பகுதிக்கு பயணம் செய்து இங்கிருக்கும் மக்களின் குறைபாடுகளையும் அவர்களின் வேணவாக்களையும், தேவைகளையும் அறிய முடியாத நிலையிலும், தனது சேவைக்காலம் முடிவுற்று ஓய்வு பெற்றுள்ள நிலையில் எமது மக்களுக்கு உதவ வேண்டும் என்ற உள்ளக்கிடக்கை அவரை ஆள்கொண்டமை மகிழ்வைத் தருகின்றது.
இறுதியாக நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க அம்மையார் அவர்கள் இந்தப் புதிய அரசை அமைப்பதற்குக் கடுமையாகப்பாடுபட்டு உழைத்தவர்.அந்தத் தேர்தலின் போது தமிழ் மக்களின் அமோக வாக்குகளாலேயே இந்தப்புதிய அரசு ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக் கொண்டது. அதற்கான நன்றிக் கடனாக அம்மையார் அவர்கள் எமது மக்கள் மீது அன்பு பாராட்டுகின்றார் என்று நாம் நினைக்க இடமுண்டு.
பன்னாட்டு சமூகத்துடன் சேர்ந்து ஜெனிவா தீர்மானத்தை நடைமுறைப்படுத்தவும் அவர் உதவிபுரிய வேண்டும் என்றுகேட்டுக் கொள்கின்றேன். போர்க்குற்ற விசாரணை உரியவாறு பாரபட்சமின்றி நடைபெற்றால்தான், தேசிய ஒருமைப்பாடும் நல்லிணக்கமும் உருவாகலாம் என்பதை நான் கூறி அம்மையார் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. நடந்து முடிந்தவற்றிற்குப் பரிகாரம் காணாமல் எமக்கு எவ்வளவுதான் நன்மைகளைப் பெற்றுக் கொடுத்தாலும் அவை எம்மைத்திருப்திப்படுத்தாது என்பதை அன்புடன் அம்மையாருக்குச் சொல்லி வைக்கின்றேன்.
அமைதிக்கான முன்னுரிமை அச்சுவார்ப்புருவின் பிரதியொன்று எமக்கு அனுப்பிவைக்கப்பட்டது. நிலைமாற்றத்துக்கான நீதி முறை, நல்லிணக்கம், ஆட்சிமுறை, மீள்குடியேற்றமும் நிரந்தரத் தீர்வும்,என்ற தலையங்கங்களின் கீழ் குறித்த கருத்தாவணம் அமைந்துள்ளது. அதில் போர்க்குற்ற விசாரணை சம்பந்தமாகவோ, அதனை வழிநடத்துதல் சம்பந்தமாகவோ எதுவும் குறிப்பிடப்படவில்லை.
குதிரைக்கு முன் கரத்தையைப் பூட்டுவது போல் குறித்த ஆவணம் இருக்கின்றது. ஆகவே இந்த நாட்டின் ஜனாதிபதியாகப் பத்து வருடங்கள் கடமையாற்றிய எம் மதிப்பிற்குரிய சந்திரிகா அம்மையார் இந்தக் குறையைத் தீர்க்க வழிவகுக்க வேண்டும்.
பன்னாட்டு நீதிபதிகளின் பங்கேற்பை உறுதி செய்ய வேண்டும்.
சர்வதேச வழக்கு நடத்துநர்களை உள்ளேற்க வேண்டும், பன்னாட்டு போர்க்குற்றங்களை எமது அரசமைப்பின் 13 (6)ம் சரத்தின் கீழ் எமது சட்டவாக்கத்துடன் சேர்த்துக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.
மாசுபட்ட இந்தநீரை மீண்டும் தூயதாக்கி எமது எதிர்கால சந்ததியினர் குடிப்பதற்கும் ஏனைய விவசாயத் தேவைகளுக்கு அவர்கள் பாவிப்பதற்கும் அவர்களுக்கு விட்டுச் செல்ல வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு எம் அனைவருக்கும் உண்டென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன். நிலத்தடி நீரை மீள தரமுள்ளதாக மாற்றுவதற்கும், மலக்கழிவுகளையும் ஏனைய குப்பை கூளங்களையும், நிலத்தடி நீருடன் சேர்ந்து விடாது தடுப்பதற்கும், கழிவுகளை மாற்றியமைப்பதற்கும் பல்வேறு திட்டங்கள் நடுவண் அரசினாலும், மாகாண நிர்வாகத்தினாலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவை தற்போது பரீட்சார்த்த நிலையில் உள்ளன என்று நம்புகின்றேன்.
இவற்றுடன் இணைந்து நாமும் எமது பங்குக்கு எமது முன்னோர்களின் யுக்திகளைப் பயன்படுத்துவதன் மூலம் நிலத்தடி நீரை ஒரு குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் சீர்செய்து விட முடியும் என்று நம்புகின்றேன். அதுவரை காலமும் இது போன்ற தற்காலிக உபகரணங்கள் மூலம் குடிநீரைப் பெறுவதற்கு நாம் முயற்சிகளை எடுக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.
சந்திரிகா அம்மையர் அவர்களே! நீங்கள் இந்தப் பகுதி மக்களின் துன்ப துயரங்களை நேரில் கண்டு உணர்ந்தவர் என்ற வகையில், இவர்களின் துன்ப துயரங்களைத் துடைப்பதற்கு தங்களின் மேலான அரசியல் பலத்தினையும் செல்வாக்கினையும் பிரயோகித்து கடந்த மூன்று தசாப்தங்களாக இடம்பெயர்ந்து முகாம்களில் எந்தவித அடிப்படை வசதிகளும் இன்றி துன்பச் சூழலில் வாழ்கின்ற எமது மக்களை மீண்டும் அவர்களின் சொந்த நிலங்களில்குடியமர்த்தவும், அவர்களின் விவசாய நிலங்களை மீளக் கையளிப்பதற்கும், அவர்களின் அன்றாட வாழ்க்கை இயல்பு நிலையை எய்தக்கூடிய வகையில் இராணுவ பிரசன்னத்தை குறைப்பதற்கும் முயலவேண்டும் என்று அன்புடன் கூறி வைக்கின்றேன்.
அத்துடன் சந்தேகத்தின் பேரில் அரசியல் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டு சிறைக்கூடங்களில் வாடுகின்ற எமது இளையோரை விடுவிப்பதற்கும், இராணுவத்தினால் கைது செய்யப்பட்டு காணாமற்போயிருப்பதாகக் கருதப்படும் போராளிகள் தொடர்பான விவரங்களை கண்டறிவதற்கும் ஒரு தாயார் என்ற விதத்தில் முயற்சிப்பீர்கள் என எமது மக்கள் உறுதியாக நம்புகின்றார்கள். அவர்களின் நம்பிக்கையை வெல்லக்கூடிய வகையில் நீங்கள் தொடர்ந்தும் எமது மக்களுக்காக குரல் கொடுக்க வேண்டும் - என்றார். (வ-21)

## உண்மையை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியிலுள்ள குழு அறை இலக்கம் - 2 இல் நடத்திய செய்தியாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு விளக்கமளித்தார் அயலுறவு அமைச்சர்.
இதன்போது அவர் தெரிவித்ததாவது:
ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமைய சுயாதீன உள்ளகப் பொறிமுறையின் முதற்கட்ட நடவடிக்கைதான் இந்தக் காணாமற்போனோர் அலுவலகம் (தாபித்தலும், நிர்வகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டமாகும்.சிறப்பு நிபுணர் குழு மற்றும் சட்டமா அதிபருடன் கலந்துரையாடி பின்னர் அமைச்சரவையில் முன்வைத்து மே மாதம் 27ஆம் திகதி அனுமதி பெறப்பட்டது.
இதன் பின்னர் தற்போது வரையான காலப்பகுதியில் பெரிய கால அவகாசம் இருந்தது. இந்தக் காலப்பகுதிக்குள் பொது எதிரணியினர் உயர் நீதிமன்றத்தை நாடியிருக்கலாம். ஆனால் இந்தச் சட்டவரைவை நிறைவேற்றும் வரலாற்றுச் சந்தர்ப்பத்தில், அதைத் தோற்கடிக்க இவர்கள் (பொது எதிரணி) எடுத்த முயற்சியை நாம் தோற்கடித்துள்ளோம். இந்தச் சட்டவரைவு மீது விவாதம் நடத்த ஒன்றரை நாள்கள் கால அவகாசம் இருந்தது. ஆனால் இதையும் அவர்கள் குழப்பிவிட்டனர்.
இந்தச் சட்டவரைபில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் முன்வைத்த திருத்தங்களை நாம் உள்வாங்கியுள்ளோம்.
இவ்வாறான நிலையில் எமது நாட்டிலுள்ள தாய்மார்களின் கண்ணீரில் நீந்த அரசியல் நடத்த இவர்கள் எதிர்பார்க்கின்றனர். இதற்காகத் தான் இந்த சபைக்குள் பாடல்பாடி, எதிர்ப்புத் தெரிவித்து இதைக் குழப்பமுற்பட்டனர்.
காணாமற்போனோர் தொடர்பாக சரியான தகவல்கள் இல்லை. சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அறிக்கையில் 16,008 பேர் காணாமற்போய் உள்ளதாகவும், பலவந்தமான காணாமற்போதல்கள் பற்றிய ஐ.நா. செயற்குழுவின் அறிக்கையில் 12 ஆயிரம் பேர் காணாமற்போய் உள்ளதாகவும் பரணகம ஆணைக்குழு அறிக்கையில் 24 ஆயிரம் பேர் காணாமற்போய் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன.
இந்த காணாமற்போனோர் அலுவலகமானது நான்கு பணிகளை மேற்கொள்ளவுள்ளது. முதலாவது காணாமற்போனோர் தொடர்பில் தேடிப் பார்த்தல், உண்மையைக் கண்டறிதல் , ஆவணப்படுத்தல். இரண்டாவது பின்புலம் மற்றும் நடந்தவற்றை அறிதல், மூன்றாவது காணாமற்போதல்களை குறைப்பதற்கு தேவையான யோசனைகளை முன்வைத்தல். நான்காவது காணாமற்போனோரின் குடும்பங்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான யோசன்னைகளை முன்வைத்தல். ஆகியவையே இந்த அலுவலகம் ஊடாக இடம்பெறும்.
இந்த அலுவலகத்துக்கு நீதிமன்ற அதிகாரம் இல்லை, எவரையும் தண்டிக்கும் அதிகாரமும் இல்லை. காணாமற் போனோர் தொடர்பில் ஆராய்ந்து ஆவணப்படுத்துவதே இதன் பணியாகும். இதன் ஊடாக விசாரணைகளையும் நடத்த முடியாது. இதில் இரகசியத் தன்மை பாதுகாக்கப்பட வேண்டும் என எவரும் எண்ணினால் இரகசியம் பாதுகாக்கப்படும்.
இரகசிய முகாம்கள் எனக் கருதப்படும் இடங்களுக்கு இந்த அலுவலகத்தால் முன்னறிவித்தலின்றிச் செல்ல முடியும். மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் இந்த அதிகாரம் இருக்கின்றது. நாம் மாலையில் வருகின்றோம் எனக் காலையில் கூறிவிட்டு அந்த இடத்துக்குச் சென்றால் அவர் வேறு இடத்துக்குச் சென்று விடுவார்.
இந்த அலுவலகமானது இரகசிய தடுப்பு முகாம் எனக் கருதப்படும் இடத்துக்குச் சென்றதன் பின்னர் 48 மணிநேரத்தில் பொலிஸ்மா அதிபருக்கு இது பற்றி அறிக்கை வழங்கவேண்டும். இந்த அலுவலகமூடாக பன்னாட்டு தலையீடு இடம்பெறும் எனக் கூறுகின்றனர். மகிந்த ராஜபக்சதான் பன்னாட்டு தரப்பினரைக் கொண்டு வந்தார். நாம் எதையும் மறைத்துச் செய்யமாட்டோம். தேவையான சந்தர்ப்பங்களில் பன்னாட்டுநிபுணர்களின் ஆலோசனையைப் பெறுவோம்.
68 ஆண்டுகால தவற்றைச் சரி செய்ய எடுத்த முதல் நடவடிக்கையே இந்த சட்டமாகும் - என்றார். (வ-சி)

**பெயர் மாற்றம்**
இல. 211, புதுமுறிப்பு, கிளிநொச்சி என்னும் முகவரி கொண்ட நான் எனது பெயராகிய **செல்லையா சிவனேஸ்வரி** என்பதை இன்றிலிருந்து **செல்லையா இலக்கியா** என்று மாற்றிக் கொள்கின்றேன். இனிவரும் காலத்தில சகல ஆவணங்களிலும் மேற்படி பெய்ரைப் பயன்படுத்துவேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகின் றேன்.
**செ.இலக்கியா**

**அழகக நிலையங்களைத் திறத்தல்**
மன்னார் மடுமாதா பெருநாளை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அனைத்து அழகக நிலையங்களையும் 14.08.2016 ஞாயிற்றுக்கிழமை திறக்குமாறும் மறுநாள் 15.08.2016 திங்கட்கிழமை மூடுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.
**தலைவர்- முல்லைத்தீவு மாவட்ட அழகக கூட்டுறவு சங்கம்.**

**வீடு வாடகைக்கு உண்டு**
பத்தமேனி அச்சுவேலியில் (பஸ்தரிப்பிடத்துக்கு அருகில் ) சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு
**077 086 8673**

**காணி விற்பனைக்கு**
ஊரெழு அம்மன் கோயிலடியில், பலாலி வீதியில் இருந்து நேரடிப் பாதை உள்ள பத்துப் பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு
ரகுபதி நடேசலிங்கம்
தொ.பே.இல.033 609 621189
(பிரான்ஸ்)
மின்னஞ்சல் : ragufrance@gmail.com

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்

மஜெஸ்டிக் ப்ளாட்டினம 10.00 / 1.00 / 7.00
Fri/Sat/Sun 9.30 p.m
PETE'S DRAGON 4.00 p.m

சில்வர் 10.15 / 1.15 / 4.15 / 7.15
ப்ரொன்ஸ் 10.30 / 1.30 / 4.30 / 7.30
Fri/Sat/Sun 9.30 p.m
விசாரணை ☏ 021- 2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுமன் பாலம் குறித்து எந்தப் பேச்சும் நடைபெறவில்லை

## *ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு*

இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் வகையில் தலைமன்னாரிலிருந்து பாலம் அமைப்பது தொடர்பில் இரு நாட்டுக்கும்இடையே எந்தக் கலந்துரையாடலும் நடத்தப்படவில்லை. அத் தகைய தேசத் துரோகமான நடவடிக்கையை அரசு ஒருபோதும் மேற்கொள்ளாது. அரசை அசௌகரியத்துக்குள்ளாக்கும் இத்தகைய கூற்றுக்களை நிராகரிக்கின்றேன்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கனேலந்தை ரஜமகா விகாரையில் நடைபெற்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தென் இந்தியாவில் நடைபெற்ற ஒரு மாநிலத் தேர்தலின்போது ஒரு தென்னிந்திய அரசியல்வாதி அவரது தேர்தல் பரப்புரைக்காகவும், இந்திய நாடாளுமன்றில் ஒரு தென்னிந்திய நாடாளுமன்ற உறுப்பினரும் முன்வைத்த இந்தக் கூற்றுக்களில் எவ்வித உண்மைகளும் இல்லை. அத்தகைய கூற்றுக்களால் எமது நாட்டு மக்களைப் பிழையாக வழிநடத்த சிலர் முற்படுகின்றனர். அரசியல் அமைப்பில் உள்ள பௌத்த சமயம் தொடர்பான பகுதியை நீக்கிவிட்டு இந்த நாட்டை ஒரு மதசார்பற்ற நாடாக அரசியல் யாப்பில் உள்ளடக்க புதிய அரசு முயற் சித்து வருகின்றது எனும் பரப்புரைகளை வன்மையாகக் கண்டிக்கிறேன் - என்றார். (ற-4)

## காணாமற்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைப்பின் ஆதரவுடன் வாக்கெடுப்பு எதுவுமின்றி பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

நாடாளுமன்றம் முற்பகல் 10.30 மணிக்கு சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது. மகிந்தவின் சகாக்கள் நேற்று கறுப்புப் பட்டியணிந்தே சபைக்கு வந்தனர். காணாமற்போனோர் தொடர்பிலான அலுவலகம் அமைக்கும் பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே தாம் அவ்வாறு கறுப்புப் பட்டி அணிந்திருக்கின்றனர் என்று அவர்கள் தெரிவித்தனர்.

சபாநாயகர் அறிவிப்பு, பொதுமனுத்தாக்கல், வாய்மூல விடைக்கான கேள்விச் சுற்று, சிறப்புக் கூற்று ஆகியன முடிவடைந்த பின்னர், விவாதத்துக்கு வரவுள்ள சட்டவரைவு குறித்தான அறிவிப்பை ஆளுங்கட்சி பிரதமகொறடாவான அமைச்சர் கயந்த கருணாதிலக விடுத்தார்.

உடனே ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பி சர்ச்சைக்கு பிள்ளையார் சுழி போட்டார் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன. "காணாமற்போனவர்களுடைய அலுவலகம் (நிறுவுதலும், நிர்வகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டவரைவு மீது நாளை (இன்று) முற்பகல் 11 மணிக்கு வாக்கெடுப்பு நடத்துவது அரசின் முடிவாக இருக்கின்றது. இதை ஏற்கமுடியாது. எதற்காக இந்த அவசரம்? படையினரை வேட்டையாடும் வகையில் அமைந்துள்ள இந்தச் சட்டவரைவு குறித்து நாளை (இன்று) மாலை வரை விவாதம் நடத்தப்படவேண்டும்" என்று தினேஷ் குணவர்தன வாதிட்டார்.

விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் தினேசிக்கு ஆதரவாகக் குரல் எழுப்பினர். இவர்களும் அதே தர்க்கத்தையே முன்வைத்தனர். எனினும், அதை அரசு ஏற்கவில்லை.

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. எனவே, திட்டமிட்ட அடிப்படையில் விவாதம் நடத்தப்பட்டு வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று சபை முதல்வர் லக்ஷ்மன் கிரியெல்ல இடித்துரைத்தார்.

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பெரும்பாலானோர் எடுத்த இந்த முடிவைத் தன்னால் மாற்ற முடியாது என்று சபாநாயகரும் அறிவித்தார்.

இதனால், சீற்றமடைந்த மகிந்த அணியினர் சபைக்கு நடுவில் வந்து நின்று கூக்குரல் எழுப்பினர். இதனால், பெரும் அமளிதுமளி ஏற்பட்டது. இதனால் நண்பகல் 12.20 மணியளவில் சபை நடவடிக்கையை தற்காலிகமாக ஒத்திவைத்தார் சபாநாயகர். 80 நிமிடங்களின் பின்னர் பிற்பகல் 1.40 மணியளவில் சபை மீண்டும் கூடியது. சபை முதல்வர் லக்ஷ்மன் கிரியெல்ல யோசனையொன்றை முன்வைத்தார்.

இன்று (நேற்று) இரவு 9.30 மணிவரை விவாதத்தை நடத்தி, நாளை (இன்று) பகல் 2 மணிக்கு வாக்கெடுப்பு நடத்த முடியும் என்பதே அந்த முன்மொழிவு. இதனையும் மகிந்த அணி எதிர்த்தது. ஆனால், தனது நிலைப்பாட்டில் அரசு உறுதியாக இருக்கின்றது என அமைச்சர் லக்ஷ்மன் அறிவித்தார். இதனால், மீண்டும் சர்ச்சை வெடித்தது.

கூச்சல், குழப்பத்துக்கு மத்தியில் சட்டவரைவு மீதான விவாதத்தை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆரம்பித்து வைத்து உரையாற்றினார். அவரை சுற்றிவளைத்து விவாதத்தை குழப்புவதற்கு மகிந்த அணியினர் முயன்றனர். சபாநாயகர் கடுமையாக எச்சரித்தும் அவர்கள் ஓயவில்லை. மங்களவுடன் மகிந்த அணியினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மங்களவை சூழ்ந்து நின்று அரண் அமைத்துப் பாதுகாத்தனர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நேரடியாகக் களமிறங்கித் திட்டம் வகுத்தலில் ஈடுபட்டார்.

இதனால், சீற்றமடைந்த மகிந்த அணியினர் செங்கோலைத் தூக்குவதற்கு முயற்சித்தனர். உதய கம்மன்பில, மகிந்தானந்த அளுத்கமகே உள்ளிட்டவர்கள் சபாபீடம் நோக்கிச் சென்றனர். எனினும், செங்கோலைத் தூக்கமுடியாதவாறு படைக்கல சேவிதர்கள் பாதுகாப்பு வழங்கினர். ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் செங்கோலை சூழ்ந்து நின்று பாதுகாப்பு வழங்கினர்.

அமைச்சர் மங்கள சமரவீர தனது உரையில் மகிந்த அணியைக் கடுமையாகத் தாக்கிப் பேசினார். இதனால், அவருக்கு எதிராக மகிந்த அணியினர் குரல் எழுப்பினர். கடும் வார்த்தைகள் பறந்தன.

மங்களவின் உரையைத் தொடர்ந்து, எதிர்க்கட்சி வரிசையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு உரையாற்ற வாய்ப்பு வழங்கப்பட்டது. அதன் பின்னர், ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க உரையாற்றினார்.

நீண்டநேரம் சபைக்கு நடுவில் இருந்து குரல் எழுப்பி விவாதத்தை குழப்பிடியப்பதற்கு மகிந்த அணியினர் ஒருபுறம் முயற்சிக்கையில், மறுபுறத்தில் விவாதத்தை நடத்தி சட்டவரைவை நிறைவேற்றுவதில் அரசதரப்பினர் தீவிரம் காட்டினர். ஒருமணித்தியாலத்துக்குள் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டது.

ஜே.வி.பியின் சார்பில் முக்கிய பல திருத்தங்கள் முன்வைக்கப்பட்ட பின்னர், சட்டவரைவு திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது என சபாநாயகர் அறிவித்தார்.

சபாநாயகர் இவ்வாறு அறிவிப்பு விடுக்கும் போது, மகிந்த அணி உறுப்பினரான கெஹலிய ரம்புக்வெலவுக்கும், ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குமிடையில் கைகலப்பு ஏற்படும் நிலை உருவாகியது. இருவரும் கைகளை முறிக்கிக்கொண்டு முன்நோக்கிப் பாய்ந்தனர். எனினும், மூத்த உறுப்பினர்கள் அவர்களைக் கட்டுப்படுத்தி விட்டனர்.

இவ்வாறு சபைக்கு நடுவில் சர்ச்சை நடக்கையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அதைப் படமெடுத்தார். சட்டவரைவு நிறைவேறிய பின்னர், மேசையில் கைதட்டி அரச தரப்பினருடன் சேர்ந்து அவர்களும் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். (உ-வ-4)




## கண்ணீர் அஞ்சலி

ஆவரங்கால் வாழ்வின் எழுச்சி வங்கியில்
கடமை புரியும் **திரு. ஆறுமுகம் ரமணன்**
அவர்களின் பாசமிகு மாமனார்

**சின்னத்தம்பி சற்குணம்**

28.07.2016 சிவபதம் அடைந்தமைக்காக துயரடைகிறோம். அவரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலரும் அனைத்து உத்தியோகத்தர்களும்**
**ஊழியர் நலன்புரி சங்கம்,**
**பிரதேச செயலகம்- கோப்பாய்.** (j3681)(10.18)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
31
07
1943



உதிர்வு
12
08
2015

அமரர்
அம்பலவாணர் (சேமன்) ஆனந்தராசா (கிளி)
திதி: திரயோதசி

எமதருமை அப்பாவே! எங்கள் ஒளிவிளக்கே!
காலமெலாம் உம் நினைவு கனவிலும்
நீங்கள்- அப்பா
ஊழியுள்ள காலமெலாம்
உம் நினைவே எம் மனதில்
வாழ்விக்கவாரும் அப்பா!
வந்து குறை தீரும் - அப்பா!
நீங்காத நினைவுகளுடன் உங்கள்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

இடைப்பிட்டி,
காரைநகர்

## நெஞ்சைவிட்டு நீங்கா நினைவின் 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

நீதிமான்கள் உரிய காலத்திற்கு முன் இறந்தாலும் இளைப்பாற்றி அடைவார்கள் (சா.ஞா.4:7)

செல்வி மேரி அன்ரனிற்றா அன்ரனியூஸ்
யாழ். பல்கலைக்கழக கலைப்பீட 3 ஆம் வருட மாணவி)
(தாளையடி)

மண்ணகம்
26.09.1983

விண்ணகம்
12.08.2006

அப்பா அம்மா என்றழைக்கும் உம் குரல்
கேட்டு - இன்று ஆண்டுகள் பத்து ஆனதுவோ
எம் முதிர்ந்த வயதினிலே - உம் அரவணைப்பில்லை
யென்று அங்கலாய்கிறோம். அழுது புலம்புகின்றோம்.

எம் அன்புச் செல்வமே - உம்
உருவம் எம் கண்முன்னே - தினமும் வந்துதான் போகின்றதே
நீயில்லா இவ்வுலகில் - இன்பமான
வாழ்க்கைதனை எப்படி நாம் சுவைத்திடுவோம்.



திரு.திருமதி அன்ரனியூஸ்
(பெற்றோர்)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

நகைச்சுவை மன்னர்
**அமரர் அருளானந்தம் சந்திரகுமாரன்**
(ஓய்வு பெற்ற உதவி நூலகர்-
தொழில்நுட்பக்கல்லூரி- யாழ்ப்பாணம்
திதி: வளர்பிறை நவமி



ஓராண்டு ஆனதுவோ அப்பா -
எம் ஒவ்வொரு அணுவிலும் கலந்த உங்களை
ஒரு கணம் கூட அப்பா எனும் எம் மந்திரம்
ஓதாமல் இல்லையே எம் வாழ்வின் அத்திபாரம்
எம் ஊரின் ஆரவாரம் எத்தனை ஆண்டுகள்
சென்றாலும் எதனாலும் உங்கள்
இழப்பு ஈடு செய்யவே முடியாது.

தோற்றம்
28.11.1949

மறைவு
25.07.2015

குடும்பத்தினர்.
(J.1932)(12.18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸாரின் அசமந்தப் போக்குக்கு கள்வர்கள் மீதான காதலா காரணம்?

## புரியாத புதிராக உள்ளது என்று இடித்துரைத்தார் வடக்கு முதலமைச்சர்

யாழ்ப்பாணம், ஓக.12

யாழ்ப்பாணம் நகரில் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் களவுகள் இடம்பெறுகின்றபோது பொலிஸார் உடனடியாக சமுக மளிக்காதுள்ளமை பொலிஸாருக்கு கள்வர்கள் மீதுள்ள காதலா என்பது புரியாத புதிராக உள்ளது. இது பொலிஸார் மீது கூடு தல் சந்தேகங்களையும், பொலிஸார் - பொதுமக்கள் உறவில் விரிசலையும் ஏற்படுத்துகின்றது.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

முதலமைச்சர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற மாகாண மட்டத்திலான பொலிஸ் பொது மக்கள் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

**மக்களுடன் இணைந்த சேவை**

புங்குடுதீவு மாணவி வன்புணர்வு, கொலை ஆகியவற்றின் பின்னர் மாகாண, மாவட்ட, பிரதேச மட்டத்திலான பொலிஸ் பொது மக்கள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை ஆரம்பிப்பது தொடர்பில் ஒரு வருடத்துக்கு முன்னரே நாங்கள் நடவடிக்கை எடுத்திருந்தோம். எதிர்பாராத அல்லது தவிர்க்க முடியாத காரணங்களால் அவற்றின் தொடர் நடவடிக்கைகள் தடைப்பட்டன. இந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட புதிய முயற்சிகள் கூட இரண்டு மூன்று தடவைகள் தடங்கலுற்ற போதும் இன்று (நேற்று) இக்கூட்டம் கைகூடியிருப்பது மகிழ்வைத் தருகின்றது.

பொலிஸ் சேவை என்பது முன்னைய நிலையில் இருந்து விலகிப் புதிய பரிமாணம் பெற்று அது பொது மக்களுடன் பின்னிப் பிணைந்த ஒரு சேவையாக மாற்றப்பட்டிருப்பது ஒரு முன்னேற்றமான செயற்பாடு. இதுவரை காலமும் பயங்கரவாத மன நோக்குடன்தான் பொலிஸ் சேவை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இயங்கியது. போர்க் காலத்திலிருந்து சமாதான காலத்துக்குத் திரும்பியுள்ளோம் என்ற உணர்வு இப்பொழுதுதான் சிறிது சிறிதாகப் பரவத் தொடங்கியுள்ளது.

எமது நாட்டின் பாதுகாப்புப் பகுதியின் மறுசீரமைப்பு இன்று முக்கியமானதொன்றாக உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் கருதப்படுகின்றது. போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். பாதிப்புக்குள்ளாகக் கூடிய வலுக்குறைந்த சமூகப் பிரிவுகள் வலுப்பெற நாங்கள் பாடுபட வேண்டும். அதனால் பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையே ஒரு பங்காளர் கூட்டணி சகல மட்டங்களிலும் உருவாக்கப்பட வேண்டும் என்று எண்ணப்பட்டது.

முன்பிருந்த விழிப்புக் குழுக்கள் அரசியல் கட்சிகள் சார்பான பாதிப்புக்கு உள்ளானதால் கட்சிகளைத் தவிர்த்து மக்கள் தலைவர்களையும் பொலிஸாரையும் கொண்ட ஒருங்கிணைப்புக் குழுக்கள் உருவாவது அவசியம் என்று கருதப்பட்டது. பொலிஸ் - பொது மக்களின் உறவு நிலை இன்னும் திருப்திகரமாக அமையாததால் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களால் நாம் ஒருவரை ஒருவர் புரிந்து மக்கள் பாதுகாப்பில் இணைந்தே ஈடுபடலாம் என்று கருதினோம்.

**குற்றங்கள் அதிகரிப்பு**

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு ஏழு ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் குற்றச் செயல்கள் மிக அதிகரித்திருப்பது எம்மையும் பொலிஸ் சேவையையும் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. போர் நடைபெற்ற காலத்தில் கூட இரவு நேரங்களில் பெண்கள் தங்கள் வீடுகளில் தனியே தங்கியிருந்த காலங்கள், வெளியே சென்று வந்த காலங்கள் முடிந்து இன்று பகல் நேரத்தில் கூட தனியே வீட்டில் இருப்பதற்கோ அல்லது வீதி வழியே செல்வதற்கோ இய லாத ஒரு நிலை உருவாகியுள் ளது.

களவு, கொலை, வன்புணர்வு, சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற செயற்பாடுகள் அதிகரித்துள்ளதைக் காண்கின்றோம். வட மாகாணம் கஞ்சா விற்பனையின் மத்திய நிலையமாக மாறியிருப்பதும் மிகவும் வெறுப்பையும் வேதனையையும் தருகின்றது.

**யாருக்கேனும் தொடர்புண்டோ?**

பொலிஸார் பல கடத்தல் செயற்பாடுகளை முறியடிக்கின்ற போதும் அவை தொடர்கின்றன என்றால் அதன் பின்னணி என்ன?. கடத்தலுக்கும் எமது எல்லைப்புறக் கடற்காவல் துறையினருக்கும் இடையில் ஏதாவது ஒற்றுமைகள், உடன்பாடுகள் இருக்கின்றனவா என்பது பற்றி எல்லாம் ஆராயப்பட வேண்டியுள்ளது. அரசியல்வாதிகளுக்கு இவற்றுடன் சம்பந்தம் இருக்கின்றதா என்பது ஆராயப்பட வேண்டியிருக்கின்றது.

நாள் முழுவதும் உழைத்துக் களைத்த பொது மக்கள் நிம்மதியாக வீட்டில் நித்திரை கொள்வதற்குரிய சூழ்நிலை உருவாக்கப்படல் வேண்டும். இரவு நேர காவல்களுக்கும், நடமாடும் சேவைகளுக்கும் என அதிகளவில் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ள போதிலும் அவர்களின் சேவை திருப்தி தருவதாக அமையவில்லை என்றே கருதுகின்றேன்.

**கள்வர் மீது காதலா?**

ஒரு வீட்டில் களவு நடைபெறுகின்ற போது பல தொலைபேசி அழைப்புக்கள் அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு எடுக்கப்படுகின்றபோதும் ஏறத்தாழ இரண்டு மணித்தியாலங்கள் பின்னரே களவுகள் அனைத்தும் முடிவடைந்து, கள்வர்கள் இலகுவாக தப்பிச் சென்ற பின்னரே பொலிஸார் செல்லும் பல சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. இதற்கான காரணம் தெளிவாக்கப்படவில்லை. பொலிஸாரின் அசிரத்தையா அல்லது அவர்களின் கட்டமைப்புக்களின் குறைபாடா அல்லது அவர்களுக்குக் கள்வர் மீதுள்ள காதலா என்பது புரியாத புதிராக இருக்கின்றது.

தொலைபேசி முறைப்பாடுகள் அல்லது நேரடி முறைப்பாடுகள் கிடைத்து குறிப்பிட்ட நேரத்துக்குள் நடவடிக்கைகளில் இறங்காத பொலிஸார் சம்பந்தமாக உடனடி நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். காலத்துக்கு காலம், பொதுமக்களை பயப்பீதியில் உறைய வைக்கும் பல அச்சுறுத்தல் நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. போர்க்கால இராணுவ ரோந்துகள், விசாரணைக்கான அழைப்புகள், விசேட தேடுதல்கள், புலனாய்வாளர்களின் செயற்பாடுகள் போன்றவை சற்றுக் குறைந்த நிலையில் புதிதாக முளைத்தது கிறீஸ் பூதம். அதைத் தொடர்ந்து வடக்கு இளைஞர்களின் குழுக்களுக்கிடையேயான வீதி மோதல், வாள் வெட்டு போன்ற அட்டகாசங்கள் நடைபெற்றன. அதே போன்று போதைப்பொருள் பாவனை, பாலியல் துஷ்பிரயோகங்கள், சிறுவர்கள் மீதான பாலியல் வன்முறைகள், களவுகள், கொலை, கொள்ளை போன்றவை நடைபெறத் தொடங்கின. மண்கடத்தல், மரக்கடத்தல், வளங்களைச் சூறையாடுதல் போன்ற குற்றங்களும் அதிகரிக்கத் தொடங்கின. போர்க்கால அதிர்ச்சிகள் ஏற்படுத்திய மனோநிலைப் பாதிப்புக்கள் இவற்றின் பின்னணியில் இருக்கின்றனவா என்பது ஆராயப்பட வேண்டும் -என்றார். (ற-21)

## சமய தீட்சை பெற விரும்புவோர் பதிவு செய்யலாம்

சமய தீட்சை பெறுவதற்கு உகந்தகாலமாக ஆலய மகோற்சவ காலங்கள் திகழ்கின்றன. சமய தீட்சையைப் பெற விரும்புபவர்கள் நாவலர் கலாசார மண்டபத்தில் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம் என வேரவில் வெள்ளிப் பள்ளத்து வீரகத்திப் பிள்ளையார் இந்து மாமன்றம் தெரிவித்தது.

சைவசமய மக்களிடையே அடிப்படையான தீட்சை பெறும் செயற்பாடு நான்கு தசாப்த காலமாக இன்றுவரை சீராக அமையவில்லை. இதனைச் சீர் செய்ய வேண்டியுள்ளது. தீட்சையை பாடசாலைகள், ஆலயங்களில் நிகழ்த்துவது சிறப்பாக அமையும். தீட்சையானது பாடத்திட்டத்துடன் இணைந்த ஒரு செயற்பாடாகவும் உள்ளது. இந்து சமய கலாசார திணைக்களத்தின் அனுமதியுடன் நல்லூர்க் கந்தன் ஆலய நாவலர் கலாசார மண்டபத்தில் சமய தீட்சை வழங்குவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இறைஅர்ப்பணமாகச் செய்யப்படும் இந்தத் தீட்சையை பெற்றுக் கொள்ள விரும்புவர்கள் நல்லூர்க் கந்தனின் மகோற்சவப் பெருநாள்களை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்றும் இந்து மாமன்றம் தெரிவித்தது. (ற-ரி)

# சர்வதேச விசாரணை மூலமே எமக்கு நீதி கிடைக்க முடியும்

## நெடுங்கேணியில் நடந்த மக்கள் கருத்தறியும் செயலணியின் அமர்வில் கருத்து

வவுனியா, ஓக. 12

1958ஆம் ஆண்டு முதல் இடம்பெற்ற நூற்றுக்கணக்கான படுகொலைகளில் எவற்றுக்குமே நீதி வழங்காத ஆட்சியாளர்கள் இறுதிப்போரின் போது இடம்பெற்ற கொலைகள் , கடத்தல்கள், சரணடைந்தோர் விடயத்துக்கு மட்டும் உள்ளூர் விசாரணைகளின் மூலம் பொறுப்புக் கூறுவர் என நாம் நம்பவில்லை. இங்கு இடம்பெற்ற சம்பவங்களுக்குக் கண்டிப்பாக சர்வதேச பொறிமுறையிலான விசாரணையையே கோருகின்றோம்.

இவ்வாறு நெடுங்கேணியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மக்கள் கருத்தறியும் செயலணி அமர்வின் முன்பாக பூபாலசிங்கம் என்பவர் கருத்துத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

மகன் காணாமல் போன 7 வருட காலத்தில் 13 இடங்களில் ஏறி இறங்கி வாக்குமூலம் அளித்துள்ளேன். இன்றுவரை ஒரு முன்னேற்றகரமான பதிலையும அரசு வழங்கவில்லை.

இறுதிப் போர் முடிந்து செட்டிகுளம் முகாமில் வசித்தபோது மனைவியின் மருத்துவத்துக்காகச் சென்ற எனது மகனை 2009 ஆம் ஆண்டு வவுனியா நகரில் வைத்துப் பிடித்துச் சென்றனர். அப்போது கர்ப்பவதியாக இருந்த மருமகளின் பிள்ளை இன்று 6 வயது கடந்த நிலையிலும் தந்தையின் முகமறியாது வளர்கின்றது.

இறுதிப் போரில் ஒரு சில கிலோ மீற்றர் பரப்பளவுக்குள் வைத்து பல்குழல் எறிகணை முதல், கொத்துக்குண்டு, இரசாயனக் குண்டுகள் மூலம் கொன்றொழித்தனர். மட்டுமன்றி உணவு கிடைக்கப்பெறாமல் பட்டினி கிடந்தோம். பட்டினி கிடந்த நேரம் சிறுவர்களின் உயிரைக் காக்க வழங்கப்பட்ட கஞ்சியைப் பெறுவதற்கு வரிசையில் நின்றவர்களைக் கூட விட்டுவைக்கவில்லை. அதன் போது 35க்கும் மேற்பட்ட அப்பாவிச் சிறுவர்கள், பெண்கள் என் கண்முன்னே இறந்தனர்.

மாத்தளன் கப்பல்துறை அருகில் நிவாரணத்திற்கு நின்றவர்கள் மீதும் அதேபோன்று சிறுவர்களைத் தாங்கியவாறு பால் மாவுக்காக நின்றவர்கள் மீது மேற்கொண்ட தாக்குதல்களைப் பார்த்தவன் என்றவகையில் இவற்றுக்கு நீதி விசாரணை கிடைக்க வேண்டுமாயின் அது நிச்சயமாக ஓர் சர்வதேச விசாரணையால் மட்டுமே முடியும் என்று கூறுகின்றேன்.

மக்கள் ஒருபுறம் அழிக்கப்பட, எல்லைப்பகுதிகள் மறுபக்கம் அபகரிக்கப்படுகின்றது. நெடுங்கேணியின் வெளிப்புறத்திலும், முல்லைத்தீவிலும் இதுவே தற்போதைய நிலமையாகவுள்ளது. இறுதிப் போர் மட்டுமன்றி மடுமாதா தேவாலயத் தாக்குதல், நவாலி சென்பீற்றஸ் தேவாலயத் தாக்குதல் , செஞ்சோலை என பட்டியல் மட்டும் நீள்கின்றது. ஆனால் நீதி மட்டும் கிடைக்கவில்லை. இவற்றுக்கெல்லாம் நீதி கிடைக்கவேண்டுமாயின் அது சர்வதேச விசாரணையால் மட்டுமே முடியும்.- என்றார். (ற-101)

## தெய்வீக இசை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 12

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழலில் தெய்வீக இசை நிகழ்ச்சிகள் மற்றும் ஆன்மிக உரைகள் நடைபெறுகின்றன.

இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள ஐந்தாம் நாள் திருவிழாவில் நல்லூர் முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் வேல் உண்டு வினை இல்லை, திருவாசகம் என்னும் தேன் எனும் தலைப்பில் சைவப்புலவர் சந்திரவேலின் தெய்வீக சொற்பொழிவு மாலை 5 மணி முதல் இரவு 7.30 மணி வரை நடைபெறும்.

நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் துர்க்காதேவி தேவி இல்லத்தின் அனுசரணையில் தெய்வீக இசைக் கச்சேரி மாலை 6.45மணி முதல் இரவு 8 மணிவரை 'நடைபெறும்.

நல்லை ஆதீன மண்டபத்தில் மொடேர்ண் சர்வதேச இந்து ஆகம கலை கலாசார நிறுவனத்தின் தெய்வீக இசைச்சங்கமம் இரவு 7 மணிமுதல் 8 மணி வரை நடைபெறும். (ற-ரி)

## வரலக்ஸ்மி விரத வழிபாடு

பளை இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் ஆலயத்தில் இன்று வரலக்ஸ்மி விரத வழிபாடு இடம் பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தப் போகத்தில் 50 ஆயிரம் லீற்றர் பனங்களி உற்பத்தி செய்ய முயற்சி

யாழ்ப்பாணம், ஓக.12
பனை அபிவிருத்தி சபை இந்தப் போகத்தில் 50 ஆயிரம் லீற்றர் பனங்களியை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

தற்போது பனம் பழப் பருவ காலம் ஆரம்பிக்கின்ற நிலையில் உற்பத்தியாளர்களிடம் இருந்து பனங்களி பெறப்பட்டுப் பாதுகாக்கப்படும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம் ஆகிய எட்டு மாவட்டங்களில் இருந்து பனை அபிவிருத்திச் சபையால் பனங்களி பெறப்படவுள்ளது என்று சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-
பனங்களி 2017 ஆம் ஆண்டுப் போகம் வரைக்கும் பாதுகாக்கப்படும். சபையின் வருடாந்த மூலதன நிதி ஒதுக்கீட்டின் கீழ் பனங்களி கொள்வனவு செய்து பாதுகாக்க சபை ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சபையால் உற்பத்தி செய்யப்படும் பனங்களி கூடுதலாக வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. பனங்களிக்கு கடந்த காலங்களில் பெரும் கிராக்கியும் பற்றாக்குறையும் ஏற்பட்டது. கடந்த போகத்தில் கூடுதலான பனம் பழங்கள் பெறப்படாமையே இதற்குக் காரணம்.

இந்தப் போகத்தின்போது கூடுதலான பனம் பழத்தைச் சேகரித்து அதனூடாக குறைந்தது 50 ஆயிரம் லீற்றர் பனங்களியைக் கறப்பதற்கும் ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது பனங்களியில் இருந்து புதிய உணவுப்பண்டங்கள் மற்றும் பனம் குளிர்பானங்களைத் தயாரிக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கண்டியில் உள்ள சபையின் ஆராய்ச்சி நிலையங்கள் ஊடாக இந்த உணவுப் பண்டங்களை தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் விரைவில் முன்னெடுக்கப்படும்- என்றார். (ற-17)

# டெங்குத் தொற்றுக்குள்ளாவோர் தென்மராட்சியில் அதிகரிப்பு

## பெரும்பாலானோர் தென்னிலங்கை சென்று வந்தவர்கள் எனத் தெரிவிப்பு

தென்மராட்சி, ஓக.12
தென்மராட்சியில் டெங்குத் தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு டெங்குத் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த ஆண்டு 241 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகினர். இந்த ஆண்டு கடந்த ஜூலை மாதம் வரையான காலத்தில் 191 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்று புள்ளி விவரங்கள் தெரிவித்தன.

கடந்த ஆண்டு இறுதியில் தென்மராட்சிப் பிரதேசத்தில் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாகவே டெங்குத் தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்தது என்று தெரிவிக்கப்பட்டது. இந்த ஆண்டு ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் பெருமளவானோர் டெங்குத் தொற்றுக்கும், உண்ணிக் காய்ச்சலுக்கும் உள்ளாகினர் என புள்ளி விவரங்கள் தெரிவித்தன.

இந்த ஆண்டின் மார்ச், ஏப்ரல் மாதங்களிலும் பிரதேசத்தில் மழை பெய்தது. அதன் பின்னர் டெங்குத் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்தது. தற்போது கடும் வெப்பமான காலநிலை காணப்படுகின்றபோதும் தென்னிலங்கை சென்று வருவோரால் குறித்த பிரதேசத்தில் டெங்குத் தொற்றுக் காணப்படுகின்றது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. டெங்குத் தொற்றுக்குள்ளாகிச் சிகிச்சை பெறும் பெரும்பாலானோர் பல்வேறு காரணங்களுக்காகத் தென்னிலங்கை சென்று வந்தவர்கள் என்றும் குறிப்பிடப்படுகின்றது.

ஜனாதிபதி செயலகம், சுகாதார அமைச்சு, மாகாண சுகாதார அமைச்சு என்பவற்றால் டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதும் டெங்குத் தொற்று ஏற்படுவது தடுக்கப்படவில்லை.

கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் 19 பேர் டெங்குத் தொற்றுக்குள்ளாகினர். இவர்கள் அனைவரும் தென்னிலங்கை சென்று திரும்பியவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

பிரதேசத்தின் 7 வலயங்களில் மேற்கொள்ளப்பட்ட டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்றிட்டங்களில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய ஏதுநிலையில் காணிகளை வைத்திருந்த 500க்கும் மேற்பட்டோருக்கு சிவப்பு அறிவித்தல்கள் வழங்கப்பட்டன. 70 பேருக்கும் மேற்பட்டோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டம் விதிக்கப்பட்டது. சுகாதார அமைச்சின் டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவால் கடந்த ஜூன் மாதம் வெளியிடப்பட்ட அறிக்கையின் படி யாழ். மாவட்டத்தில் தென்மராட்சிப் பிரதேசத்திலேயே அதிகளவானோர் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதியில் இருந்து 7ஆம் திகதிவரையான காலப்பகுதிக்குள் மூவர் டெங்குத் தொற்றுக்குள்ளாகி சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர். (ற-9)






முல்லைத்தீவு குமுழமுனை மத்தி கிராம சேவகர் பிரிவில் உள்ள வீடொன்று நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட மின்னொழுக்கால் எரிந்து நாசமாகியுள்ளது. இச்சம்பவம் இரவு 10 மணியளவில் நடந்துள்ளது. விபத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. வீட்டில் இருந்த பணம், நகை, நெல் மூடைகள், உழவு இயந்திரப் பெட்டி, விவசாய உபகரணங்கள் மற்றும் ஆவணங்கள் உள்ளிட்ட சுமார் 15 லட்சத்துக்கு மேற்பட்ட பொருள்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-ரி7)

# நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு சித்த மருத்துவக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஓக. 12
நல்லூர்க் கந்தசுவாமி கோயில் பெருந்திருவிழாவை முன்னிட்டு யாழ். மாநகர சபையின் சித்த வைத்தியப் பகுதியினர் மருத்துவக் கண்காட்சி ஒன்றை ஆரம்பித்தனர்.

ஆலயக் கொடியேற்ற தினம் முதல் கண்காட்சி நடத்தப்பட்டு வருகின்றது என்று சித்தமருத்துவப் பகுதியின் பொறுப்பு மருத்துவ உத்தியோகத்தர் திருமதி அருந்ததி சிவசுப்பிரமணியம் தெரிவித்தார்.

மருத்துவக் கண்காட்சியில் ஆயுர்வேத மருந்துகள், எண்ணெய் வகைகள், ஆயுள்வேதப் பற்பொடி என்பனவும் காட்சிப்படுத்தலுடன் விற்பனையும் செய்யப்படுகின்றன.

ஒவ்வொரு இல்லத்திலும் வளர்க்கக்கூடிய வல்லாரை, கரிசலாங்கண்ணி, வண்டு கொல்லி, வெட்டிவேர், சதைகரைச்சான், பொன்னாவரசு, இக்கிரி உட்பட பல்வேறு மூலிகைச் செடிகள் குறைந்த விலையில் விற்பனைக்காகவும், பார்வைக்காகவும் வைக்கப்பட்டுள்ளன.

திருவிழா நாள்களில் பகல் வேளைகளில் இலவசமாக இலைக் கஞ்சியையும் பெற்றுக் கொள்ள முடியும் என்று அவர் தெரிவித்தார். (ற-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுத் திட்டத்தில் உள்வாங்கபடாமை குறித்த முறைப்பாடுகள் விசாரணை

### ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் தலைமையில்

முல்லைத்தீவு, ஓக.12

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் வழங்கப்பட்ட 200 வீடுகளில் தங்கள் பெயர் உள்வாங்கப்படவில்லை என பல முறைப்பாடுகள் பதியப்பட்ட நிலையில் அவை தொடர்பில் நேற்றுதினம் பிரதேச செயலாளர் தலைமையில் விசாரணை நடத்தப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு கிடைத்த ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கு புள்ளிகள் அடிப்படையில் முன்னணியில் உள்ள 200 குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டம் வழக்கப்பட்டது.

வீட்டுத் திட்டம் கிடைக்காத குடும்பங்கள் தங்களுடைய பெயர்களும் உள்ளக்கப்பட வேண்டும் என பிரதேச செயலகத்தில் முறைப்பாடுகளை பதிவு செய்திருந்தனர்.

பதிவு செய்த முறைப்பாடுகள் தொடர்பில் ஓட்டுசுட்டான் பிரதேச செயலாளர் தலைமையில் ஒட்டசுட்டான் பிரதேச செயலகத்தில் விசாரணை நடத்தப்பட்டது. முல்லைத்தீவு மாவட்ட திட்டமிடல் பணிப் பாளர் கலந்து கொண்டு முறைப்பாட்டாளர்களின் கருத்துக்களை கேட்டறிந்தார்.

இரண்டாயிரம் வீடுகள் தேவையான நிலையில் தற்போது 200 வீடுகளே கிடைத்துள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ் வீட்டுத் திட்டம் கிடைக்காதவர்கள் முறைப்பாடுகளை பதிவு செய்திருந்தனர். அந்த முறைப்பாடுக்ள் பரிசீலிக்கப்படுகின்றன – என்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் தெரிவித்தார். (ற–ரி7,102)

## விபத்தை ஏற்படுத்திய சாரதிக்கு தண்டம்

தென்மராட்சி, ஓக.12

எழுதுமட்டுவாழ், ஏ- 9 வீதியில் முச்சக்கரசைக்கிளில்சென்றமாற்றுத் திறனாளியை மோட்டார் சைக்கிளால் மோதிக் காயப்படுத்திய சாரதிக்கு 12 ஆயிரம் ரூபா தண்டமும், பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடாக 30 ஆயிரம் ரூபாவும் செலுத்தவேண்டும் என்று சாவகச்சேரி நீதிமன்று நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

கடந்த 16 ஆம் திகதி மாலை இடம்பெற்ற விபத்தில் மாற்றுத் திறனாளி காயமடைந்தார். அவர் செலுத்தி வந்த முச்சக்கர சைக்கிளும் பலத்த சேதமடைந் தது..

மோட்டார் சைக்கிள் சாரதிக்கு எதிராக வாகனத்தை ஆபத்து விளைவிக்கக்கூடிய வகையில் வேகமாகச் செலுத்தியமை, விபத்தைத் தடுக்க முற்படாதமை, விபத்தை ஏற்படுத்தி காயம் ஏற்படுத்தியமை ஆகிய குற்றச் சாட்டுக்களுடன் கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நீதிவான் மேற்கண்டவாறு தீர்ப்பளித்தார்.(ற–9)

# வடக்கு வீதி திருத்தத்துக்கு கிரவல் பெறுவதில் சிரமம்

### ஒப்பந்தகாரர்கள் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஓக. 12

வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் வீதி அபிவிருத்தித் திணைக்கள வீதிகளை திருத்துவதற்குத் தேவையான கிரவல்களைப் பெற்றுக் கொள்வதில் மிகுந்த சிரமம் காணப்படுகின்றது என்று ஒப்பந்தகாரர்கள் கவலை தெரிவித்தனர்.

வடக்கு மாகாண சபையின் வீதி அபிவிருத்தி அமைச்சின் கீழ் இந்த வருடம் குறித்தொடுக்கப்பட்ட நிதியில் வீதி அபிவிருத்தித் திணைக்களம் ஐந்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளப் படும் வேலைத்திட்டங்களின் முன்னேற்ற முன் ஆய்வுக் கூட்டம் நேற்றுமுன்தினம் யாழ். அபிவிருத்தித் திணைக்கள மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

வடமாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் ப.டெனிஸ்வரன், வடமாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர் மற்றும் பொறியியலாளர்கள், ஒப்பந்தகாரர்கள் அதில் கலந்து கொண்டனர்.

மாவட்ட ரீதியாக மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு வேலைத் திட்டங்கள் தொடர்பாக முழுமையாக விளக்கப் படத்துடன் தெளிவுபடுத்தப்பட்டது. கால எல்லைக்குள் வேலையை முழுமையாக செய்யக்கூடிய நிலை காணப்பட்டபோதும் வேலைக்குரிய கிரவல்களைப் பெற்றுக்கொள்வதில் மிகுந்த சிரமத்தை எதிர் கொள்கின்றோம் என்று ஒப்பந்தக்காரர்கள் அதில் தெரிவித்தனர்.

> ❝ ஒப்பந்தம் எடுப்பவர்கள் எல்லாவற்றையும் கவனத்தில் கொண்டே ஒப்பந்தை எடுக்க வேண்டும். உரிய மாவட்ட செயலாளர்களின் ஒத்துழைப்புடனும் ஒப்பந்தகாரர்கள் அனைவரும் ஒத்துழைத்து உரிய சட்ட திட்டங்களைப் பின்பற்றி அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் கிரவலைப் பெறலாம் என அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். ❞

செய்து முடிக்கப்பட வேண்டிய கால எல்லைக்குள் ஒப்பந்தங்கள் அனைத்தும் செய்து முடிக்கப்பட வேண்டும். அந்தக் காலப் பகுதியில் கிரவல் பிரச்சினை, தொழிலாளர் பிரச்சினை, தார் பிரச்சினை, மழை என பல பிரச்சினைகள் ஏற்படும்போதும், ஒப்பந்தம் எடுப்பவர்கள் எல்லாவற்றையும் கவனத்தில் கொண்டே ஒப்பந்தை எடுக்க வேண்டும். கிரவல் எடுப்பதில் உள்ள சிக்கல்களை உரிய மாவட்ட செயலாளர்களின் ஒத்துழைப்புடனும் ஒப்பந்தகாரர்கள் அனைவரும் ஒத்துழைத்து உரிய சட்ட திட்டங்களைப் பின்பற்றி அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.- என அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

அபிவிருத்தித் திட்டங்களுக்காக கிடைக்கும் நிதி மக்களின் வரிப் பணத்தில் இருந்தே கிடைக்கின்றது. அதை உங்கள் சொந்த நிதி போன்று கையாள்வதுடன் மிகவும் நேர்ந்தியான முறையில் வேலைத் திட்டங்கள் செய்யப்பட வேண்டும். குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் வேலைகள் அனைத்தும் முடிக்கப்பட்டிருக்க வேண்டும் – என்று வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச் சர் தெரிவித்தார். (ற–ரி7)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# அரசியல் கைதிகள் விடுதலை தாமதிக்கும் காரணம் என்ன?

## அரசிடம் கேள்வி எழுப்புகின்றார் விக்கிரமபாகு கருணாரத்ன

கொழும்பு, ஓக. 12

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக அரசு இறுதித் தீர்மானம் எடுக்காமல் இருப்பதற்கான காரணம் என்ன என்பதனை அரசு தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்ரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கம் கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

அரசியல் கைதிகளாக 106 பேர் இன்னும் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் விடுதலை செய்யப்படுவர் என்று பல தடவைகள் அரசு தெரிவித்தபோதும் அது நடக்கவில்லை. இதற்கு முன்னர் சில அரசியல் கைதிகளை அரசு புனர்வாழ்வளித்து விடுதலை செய்திருந்தது. எஞ்சியுள்ளவர்களின் விடுதலை குறித்து இறுதித் தீர்மானத்தை அரசு எடுக்காமல் காலம் தாழ்த்துவதற்கான காரணம் என்ன?

இன்று பல கொலைகளுடனும் திருட்டுச் சம்பவங்களுடனும் தொடர்புபட்டுள்ள பலர் குறிப்பிட்ட காலம் சிறையிலடைக்கப்பட்டதன் பின்னர் விடுதலையாகியுள்ளனர். 7 வருடங்களாக எந்தத் தவறும் செய்ததாக நிரூபிக்கப்படாமல் தமிழ் அரசியல் கைதிகள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அரசு சர்வதேச நாடுகளுக்குச் சென்று நாட்டில் ஏற்பட்டிருக்கும் நல்லாட்சி மற்றும் நல்லிணக்கம் குறித்து தெரிவிக்கின்றது. ஆனால் அரசியல் கைதிகளின் விடுதலை விடயத்தில் அசமந்தப்போக்கைக் கடைப்பிடிப்பது அரசுக்கு நல்லதல்ல - என்றார். (ற-4)

# நீரிழிவால் 10 ஆயிரம் பேர் இலங்கையில் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 12

நீரிழிவு நோயால் இலங்கையில் பத்தாயிரம் பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. உலக சுகாதார நிறுவனத்தின் இலங்கைக் கிளை இதனைத் தெரிவித்தது.

அந்த நிறுவனம் தெரிவித்ததாவது-

நீரிழிவு நோயால் அதிகளவில் 30 முதல் 69 வயது வரையிலானவர்களே உயிரிழக்கின்றனர். நாட்டின் மொத்தச் சனத்தொகையில் 8 வீதமானவர்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். நீரிழிவு நோய்க்கு வழியமைக்கும் அதிக உடல் எடையைக் கொண்ட 26 வீதமானவர்கள் இலங்கையில் இருக்கின்றார்கள்.

உடற் பயிற்சி மற்றும் சரியான உணவுப் பழக்க வழக்கங்களின் மூலமாக 90 வீதமானவர்கள் நீரிழிவு நோயிலிருந்து மீள முடியும்.

அதிகளவில் மரக்கறி, பழவகைகள் உட்கொள்ளுதல் மற்றும் அடிக்கடி மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளுதல் போன்றவற்றின் ஊடாக நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த முடியும்.

நாள் ஒன்றுக்கு பத்தாயிரம் அடி தூரம் நடப்பதன் மூலம் சிறந்த உடற்பயிற்சி கிடைக்கும் - என்று தெரிவித்தது. (ற-5)

# முஸம்மிலுக்கு பிணை அனுமதி

கொழும்பு, ஓக. 12

தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸம்மில் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்துக்குச் சொந்தமான வாகனங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்டு ஜுன் மாதம் 20 ஆம் திகதி மொஹமட் முஸம்மில் கைது செய்யப்பட்டார்.

தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டு வந்தநிலையில் அவரை நேற்றுமுன்தினம் பிணையில் செல்ல கோட்டை நீதிவான் அனுமதித்தார். (ற-5)

# ஓயாமடுவவில் ஆயுதக் களஞ்சியம் அமைக்கும் தீர்மானத்துக்கு எதிர்ப்பு

கொழும்பு, ஓக. 12

இராணுவத்தின் ஆயுதக் களஞ்சியசாலையை அனுராதபுரம் ஓயாமடுவ பிரதேசத்தில் அமைப்பதற்கு அமைச்சரவை எடுத்துள்ள தீர்மானத்தை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

இவ்வாறு அனுராதபுரம் மேற்கு தொகுதிக்கான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பிக்குகள் அமைப்பின் தலைவரும், மஹவிலச்சிய ஸ்ரீ சத்தாரங்சி பிரிவெனாவின் நிறைவேற்றுக் குழு அதிகாரியுமான லோலு கொட குசலரத்ன தேரர் தெரிவித்தார்.

போர்க் காலத்தில் வெடிப்புச் சத்தங்களுக்குப் பயந்து வாழ்ந்த மஹவிலச்சிய பிரதேச மக்கள் போர் முடிந்த பின்னரும் மரண பயத்துடன் வாழ்வதற்கு இந்தத் தீர்மானத்தால் வழி ஏற்பட்டுள்ளது - என்று அவர் கூறினார்.

சலாவ ஆயுதக் களஞ்சியசாலை வெடிப்புச் சம்பவத்தின் பின்னர் புதிய ஆயுதக் களஞ்சியசாலையை இந்தப் பிரதேசத்தில் அமைப்பதற்கு அண்மையில் அமைச்சரவை தீர்மானித்திருந்தது. (ற-4)

# இலங்கைப் பிரச்சினைகளை சமாளிக்கச் சீனா உதவும்

## அந்த நாட்டு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.12

இலங்கை அரசு எதிர்கொண்டு வரும் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கு தொடர்ந்தும் உதவி வழங்குவோம் என சீன அரசு தெரிவித்தது.

நாடாளுமன்றச் சபாநாயகர் கரு ஜயசூரியவை இலங்கைக்கான சீன அயலுறவு அமைச்சர் யீஷியாங்லியான் நேற்றுமுன்தினம் சந்தித்தார்.

அதில் சீனத்தூதுவர் இவ்வாறு குறிப்பிட்டார். தமது நாட்டுக்கு வருமாறு சபாநாயகருக்கு அவர் அழைப்பு விடுத்தார் என்று சீனத்தூதரகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

சவால்களை எதிர்கொள்ள இலங்கை அரசுக்குப் பக்கபலமாக இருப்பதோடு, புதிய முதலீடுகளை மேற்கொள்ளவும் தமது நாட்டு அரசு ஆர்வத்துடன் இருக்கின்றது என யீ ஷியாங்லியான் கூறினார்.

சந்திப்பின்போது கொழும்பு துறைமுக நகரத் திட்டம் (போர்ட் சிற்றி) தொடர்பாகவும் ஆராயப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-

# பாலியல் துர்நடத்தைச் சம்பவத்துடன் பல சேனா அமைப்பினருக்குத் தொடர்பு

## சிங்கள ஊடகம் கூறுகின்றது

கொழும்பு, ஓக.12

கண்டிப் பிரதேசத்தில் இடம்பெற்ற பாலியல் துர்நடத்தைச் சம்பவத்துடன் பொது பல சேனா அமைப்பின் முக்கிய நபர்களுக்கு நேரடித் தொடர்பு இருக்கின்றது என்று சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கண்டிப் பிரதேசத்தில் நடத்தப்பட்டு வந்த உளநல விருத்திக்கான வதிவிடப் பயிற்சி நெறியில் கலந்துகொண்ட மாணவர்களில் 9 பேர் பாலியல் துர்நடத்தைக்கு உட்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தங்கியிருந்த பெண்பிள்ளைகள் 17 பேரில், 15 வயதுக்கும் 17 வயதுக்கும் இடைப்பட்ட 9 பேர் பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று வைத்திய பரிசோதனை அறிக்கை குறிப்பிடுகிறது. இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று கண்டி பொலிஸ் நிலையத் தலைமை பொலிஸ் பரிசோதகர் தெரிவித்தார்.

வதிவிடப் பயிற்சி நெறியைப் பெற்றுக் கொண்டிருந்த ஆறு மாணவர்கள் தம் மீது புரியப்படும் இம்சைகளைப் பொறுக்க முடியாமல் கடந்த திங்கட்கிழமை அதிகாலை குறித்த நிலையத்திலிருந்து தப்பிச் சென்று காட்டில் தங்கியுள்ளனர். பின்னர் அயலிலிருந்தவர்களின் உதவியைப் பெற்று பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். கடந்த வருடம் ஜீ.சீ. ஈ.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியெய்தத் தவறிய மாணவர்களுக்கு உளவளத்துறைப் பயிற்சியை வழங்கி, அவர்களை மீண்டும் பரீட்சைக்குத் தயார்படுத்தும் 6 மாத வதிவிடப் பயிற்சி தொடர்பில் பத்திரிகைகளில் வெளியான விளம்பரத்தை அடுத்தே பெற்றோர் தமது பிள்ளைகளை அங்கு சேர்த்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பிள்ளைகளின் பெற்றோர் இந்தப் பயிற்சி நெறிக்கான கட்டணமாக ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபாவைச் செலுத்தியுள்ளனர். பயிற்சிநெறியில் இணைந்து கொண்ட மாணவிகளுக்குத் தமது பெற்றோரைச் சந்திப்பதற்கு மாதத்துக்கு ஒரு தடவைதான் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

பிள்ளைகளின் பெற்றோருக்கு அறிவித்தல் வழங்காமல் இவர்களை இரண்டு நாள்கள் இரவு வேளையில் வெளியே அழைத்துச் சென்றுள்ளனர் என்று துர்நடத்தைக்குட்பட்ட சிறுமியின் தாய் ஒருவர் தெரிவித்தார். தனது பிள்ளையைப் பார்க்கச் சென்ற சமயம் தனது பிள்ளையுடன் ஒழுங்கான முறையில் பேசமுடியாதவாறு அங்கிருந்தவர்கள் நடந்து கொண்டனர் என்றும் குறித்த தாய் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் நடந்துகொண்ட விதம் திருப்தியளிக்காத வகையிலேயே காணப்பட்டது என்று பிள்ளைகளின் பெற்றோர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சம்பவம் குறித்து இருவேறு கருத்துக்கள் கிடையாது. இது தொடர்பில் பொதுபல சேனாவின் தலைவர்கள் மீதே நேரடியாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது என்று பிரசாத் புர்னிமால் என்பவர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

மொரட்டுவ பிரதேசத்தில் கத்தோலிக்க ஆலயமொன்றில் இது போன்ற துர்நடத்தைச் சம்பவம் இடம்பெற்றது என்று கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன்போது பொதுபல சேனா அமைப்பினரே முதலில் பாதைக்கு வந்து எதிராகக் குரல் கொடுத்தனர்.

இவர்கள் பொலிஸாரிடம் சம்பந்தப்பட்டவர்களை உடன் கைது செய்யுமாறு வற்புறுத்தினர். அவர்களின் ஆடைகளே தற்பொழுது களையப்பட்டுள்ளன. பொதுபல சேனா எனும் பெயரிலான அடிப்படைவாத அமைப்பு, கடந்த மகிந்த ராஜபக்ச அரசின் அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக உருவாக்கப்பட்ட ஒன்று.

இந்த அமைப்புக்கு முன்னாள் பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோத்தபாய ராஜபக்சவின் முழுமையான அனுசரணை இருந்தது என்பதற்கு தக்க ஆதாரங்கள் காணப்படுகின்றன. அக்காலத்தில் அரசுக்கு எதிராக எழுந்த மக்கள் எதிர்ப்பை முறியடிப்பதற்கு இந்த அமைப்பு இனவாதத்தையும், மதவாதத்தையும் பயன்படுத்தியது. மகிந்தராஜபக்ச அரசில் இது போன்ற போட்டுக் கொடுக்கும் வேலையைச் செய்த பொதுபல சேனாவின் டிலந்த மற்றும் சந்திமால் ஆகிய இருதலைவர்களுக்கு எதிராகவே மேற்படி துர்நடத்தைக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இவர்களே இந்தப் பயிற்சி நிலையம் தொடர்பிலான விளம்பரத்தை செய்துள்ளனர். இதற்காக சில ஊடகவியலாளர்களுக்குப் பெரும் கொடுப்பனவைச் செலுத்தியுள்ளனர். இந்த நிலையம் குறித்த குற்றச் செயல் தொடர்பாக சில பெற்றோர்கள் ஊடகங்களிடம் தெரிவிக்க முயற்சி எடுத்தபோதிலும், ஏற்கனவே பணம் பெற்ற ஊடகவியலாளர்கள் அதற்குத் தடையாக செயற்பட்டுள்ளனர்.

பொதுபல சேனாவின் உயர்பீடத்தினர் ராஜபக்ச அரசின் காலத்தில் இவ்வாறான செயலில் ஈடுபட்டுள்ளமை தொடர்பில் இதற்கு முன்னரும் கூறியுள்ளோம். ராஜபக்ச அரசு காலத்தில் அவர்களுக்கிருந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி அவற்றை மறைத்துக் கொண்டனர். அப்போதைய பாது காப்பு அமைச்சு இந்தத் தலைவர்களை பாதுகாத்தனர். இந்த பொதுபல சேனா அமைப்பினருக்கு பல கோடி ரூபா நிதி வந்துள்ளது. இதுதொடர்பில் விசாரணை நடத்த தடைவிதிக்கப்பட்டது.

2015 ஜனவரி 8ஆம் திகதி புதிய அரசு நியமிக்கப்பட்டதன் பின்னர் பொதுபல சேனா அமைப்பும் அதன் தலைவர்களும் அமைதியான ஒரு போக்கைக் கையாண்டனர். சப்தமில்லாது இருந்தனர். இதற்கிடையிலும், புதிய அரசின் சில டீல் காரர்களுக்கு பணம் வாரி இறைக்கப்பட்டது. இவர்களின் பாதுகாப்பு இந்த அரசிலும் உறுதி செய்யப்பட்டது. புதிய அரசிலும் சுமார் ஒன்றரை வருடங்களாக டிலந்த் விதானகே எந்தவிதப் பிரச்சினையும் இன்றி இது போன்ற செயலில் ஈடுபட்டு வந்தமை இதனாலேயாகும்.

இந்தச் சம்பவத்துடன் அவரது ஆடை களையப்பட்டுள்ளது. கடந்த அரசிலுள்ள தலைவர்களைப் போன்று இந்த அரசிலுமுள்ள சில தலைவர்கள் அவர்களுக்கு மீண்டும் ஆடை அணிவிக்க முயற்சி எடுக்கின்றார்கள் என்பது நிச்சயம். அரசு முதுகெலும்புடன் இது தொடர்பில் செயற்படுவது அவசியமாகும்.

இவர்கள் தப்பித்துக்கொள்ள இடமளிக்கக்கூடாது. பாதிக்கப்பட்ட குறித்த சிறுமிகள் இந்த நியாயத்தைப் பெற்றுத் தருமாறே கேட்கிறார்கள் - என்று தெரிவித்தார் என் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த ஆட்சியில் வெளிநாடுகளில் 1.36 டிரிலியன் ரூபா பதுக்கப்பட்டது

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



கொழும்பு, ஒக. 12
கடந்த ஆட்சிக்காலத்தில் குறைந்த பட்சம் 1.36 டிரிலியன் ரூபா வெளிநாடுகளிலுள்ள, அரை அரச நிறுவனங்களின் கணக்குகளில் மறைத்து வைக்கப்பட்டுள்ளன.
இவ்வாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.
நாட்டின் மொத்தக் கடன் தொகை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பண்டாரவால் நாடாளுமன்றில் எழுப்பப்பட்ட கேள்விக்குப்பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி, இலங்கைப் பொருளாதாரத்திலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த வருடம் மார்ச் 31ஆம் திகதி அளவில் இலங்கை வழங்கவிருந்த கடன் தொகை 8.77 டிரிலியன்.

> உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி, இலங்கை பொருளாதாரத்திலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த வருடம் மார்ச் 31 ஆம் திகதி அளவில் இலங்கை வழங்கவிருந்த கடன் தொகை 8.77டிரிலியன்.

இது குறித்து ஆராய நியமிக்கப்பட்டுள்ள மூவர் அடங்கிய குழு, வழங்கும் அறிக்கைக்கு அமையவே முழுக் கடன் தொகை தொடர்பில் சரியான தகவல்களைக் கூற முடியும்.
போர் நிறைவடைந்த பின்னர் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மகிந்த ராஜபக்ச அரசால் 9 வருடங்களுக்கு கடன் பெறப்பட்டுள்ளது. அந்தக் காலப்பகுதியில் அரசின் கடன் தொகை மூன்று மடங்காக அதிகரித்து, 7.39 டிரிலியனாக உயர் வடைந்துள்ளது - என்றார். (ற-4)

## சு.க. ஒழுக்காற்று குழுவுக்கு அழைக்கப்படுவார் நிஷாந்த

*கட்சி அறிவிப்பு*



கொழும்பு, ஒக.12
கட்சி உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் ஒழுக்காற்றுக் குழுவுக்கு அழைக்கப்படுவார் என்று அந்தக் கட்சியின் செயலாளர் துமிந்த திசாநாயக்க தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
அவர் ஒழுக்காற்றுக் குழு முன்னிலையில் பதிலளிக்க முடியாது போயின், ஒழுக்காற்றுக் குழுவின் தீர்மானத்தின் படி அவர் கட்சியிலிருந்து நீக்கப்படுவார். இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருக்கு அறிவித்தல் விடுக்கப்படும். அவரது நாடாளுமன்ற உறுப்புரிமை பறிக்கப்பட்டு அந்த இடத்துக்கு வேறு ஒருவர் நியமிக்கப்படுவார்.
சுதந்திரக் கட்சியின் சகல தீர்மானங்களும் கட்சியின் சட்ட யாப்புக்கு உட்பட்டே மேற்கொள்ளப்பட்டன. அச்சுறுத்தல், அவப்பெயர் சூட்டிக் கட்சியைப் பயமுறுத்தலாம் என யாராவது கருதுவதாயின் அது பகல் கனவே முடியும்.- என்றார். (ற-4)

## சிறுபான்மை மதங்களுக்கு எதிராக செயற்படுவோரைத் தண்டியுங்கள்

### வலியுறுத்துகின்றது அமெரிக்கா

கொழும்பு, ஒக. 12
சிறுபான்மை மதத்தவர்களுக்கு எதிரான குற்றங்களை இழைத்தவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த இலங்கை ஜனாதிபதி உள்ளிட்ட உயர்மட்ட அரச தலைவர்கள் முன்வர வேண்டும்.
இவ்வாறு வலியுறுத்தியுள்ளது அமெரிக்கா.
அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
அதில் தெரிவிக்கப்பட்டதாவது:
பொதுபல சேனா அமைப்பு நாட்டிலுள்ள சிங்கள மக்களிடையே மேலாதிக்கத்தை ஊக்குவித்து வருகின்றது.
சிறுபான்மை இனத்தவர்களுக்கும் மதத்தவர்களுக்கும் எதிரான பரப்புரைகளையும் பொதுபலசேனா முன்னெடுத்துள்ளது. 2015ஆம் ஆண்டுக்கான அனைத்துலக மத சுதந்திர அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.
பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர், இஸ்லாமிய படையெடுப்பு மற்றும் ஆக்கிரமிப்பு தொடர்பில் ஆத்திரமூட்டும் கருத்துக்களைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறார்.
கிறிஸ்தவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளும் அவர்களால் மேற்கொள்ளப்படுகின்றன.
சிறுபான்மை மதத்தவர்களுக்கு எதிரான குற்றங்களை இழைத்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவும், அனைத்து மக்களினதும் மதச் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் இலங்கை ஜனாதிபதி உள்ளிட்ட உயர்மட்ட அரச தலைவர்கள் முன்வரவேண்டும் - என்றுள்ளது. (ற-4)

# இலங்கை - இந்தியா இடையே பாலத்துக்கு அவசியம் இல்லை

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 12
இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே பாலம் அமைப்பதற்கு எந்தவிதமான அவசியமும் இல்லை. உங்களுக்கு 100க்கு 30 சதவீதம் தரகுப் பணம் கிடைக்குமானால் நீங்கள் அனுமன் பாலம் அல்ல, 12 பாலங்களையும் அமைப்பதற்கான பணத்தை பொக்கெற்றில் போட்டுக் கொண்டிருப்பீர்கள்.
இவ்வாறு சபையில் தெரிவித்தார் ரணில் விக்கிரமசிங்க.
நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் பிரதமரிடம் கேள்வி கேட்கும் நேரத்தின் போது ஐ.ம.சு. முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே அனுமன் பாலம் அமைக்கப் படவுள்ளதா? என கேள்வி எழுப்பினார்.
அதற்குப் பதிலளிக்கும்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
இந்தியாவிலிருந்துதான் புத்த தர்மம் இலங்கைக்குக் கிடைத்தது.
நாங்கள் அதனை நிராகரிக்கவில்லை. ஆனால் இனவாதத்தையே அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தும் நீங்கள் இலங்கைக்கு 'மிஹிந்து மஹா தேரர்' வந்த போது இருந்திருந்தால் திருப்பி அனுப்பியிருப்பீர்கள். திருப்பதி மற்றும் குருவாயூருக்குச் சென்ற மகிந்த ராஜபக்ச தனது நிறைக்கு ஏற்றவாறு தங்கத்தை அள்ளி வழங்கினார்.
உங்களது அரசியல் இனவாதத்துக்குள்ளேயே தங்கியுள்ளது.
முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்தினீர்கள். நாட்டுக்குள் இனவாதத்தைத் தூண்டிவிட்டீர்கள். ஆனால் இன்று அது இல்லை. இந்தியாவிலிருந்து தொழிலாளர்கள் இலங்கை வந்து வேலை செய்ய முடியாது. இந்தியாவுடன் செய்து கொள்ளப்படவுள்ள வர்த்தக மற்றும் தொழில்நுட்ப உடன்படிக்கையில் அதற்கான ஏற்பாடுகள் எதுவும் கிடையாது.- என்றார். (ற-4)


மூன்றாம் நாள் உள்வீதியுலா

# நான்காம் திருவிழா

## நல்லூர்க்கந்தா

தண்டபாணித்தெய்வமே தனித்துவமானவனே
தண்டனிட்டே வணங்கினோம் வந்தெம்மைக்காப்பாய்
மண்டியிட்டோம் மன்றாடினோம் மாவிளக்கேற்றினோம்
தண்டனைகள் தவிர்ப்பாய் தயவுடன் காப்பாய்
பண்ணிசையுடன் பக்தர்கள் பாடிப் பவனிவர
கண்ணிமைபோல் எம்மைக்காத்து அருள்புரிவாய்
மீண்டும் ஓர் கொடிய போர்வராமல் காத்திட
வேண்டுதல் செய்தோம் வன்முறையற்ற வாழ்வினைத்தா

வாகினி கிருபாகரன்
*சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.*

## குறை தீர்க்க வந்திடுவாய் குமரா

*இராகம் சிவரஞ்சனிதாளம் ஆதி*

*பல்லவி*
பக்தர்கள் குறை தீர்க்க வந்திடுவாய் குமரா
உனை வரவழைக்க எனக்கு வழி தெரியும்முருகா
(பக்தர்கள்)

*அனுபல்லவி*
புலித்தோலாடையுடன் புவனத்தையே காக்கும்
அரன் மகனே, குகனே அழகாய் உனைப்பாடி
(பக்தர்கள்)

*சரணம்*
மிடுக்குடனே ஔவை தீந்தமிழ் கவிபாட
விருப்புடனே அதனைக் கேட்டுமே மகிழ்ந்திடுவாய்
எம்குறை தீர்ப்பதற்கு நானுமே இசை பாட
வெகு ஆவலாய்க் கேட்க மயில்மீது வந்திடுவாய்
(பக்தர்கள்)

*கலாவித்தகர் திருமதி. மலர்விழி கனகசபை,*
*சண்டிலிப்பாய்.*

## பரோபகாரம் துளிர்க்க வேண்டும்

நல்லூரில் அரசாளும் முருகா
எம்மண் பொன்னாக வேண்டும்
நாடெங்கும் அடாவடிகள் நீங்க
நல்லதொரு தலைவன் வேண்டும்
பல்லோரும் வணங்கும் முருகா
பண்பாடு தழைக்க வேண்டும்
பாரெங்கும் பயங்கரவாதம் அகல
பரோபகாரம் துளிர்க்க வேண்டும்.
- கே.எஸ்.சிவஞானராஜா




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நல்லிணக்கச் செயலணியின் செயற்பாடு தொடருமா...?

* வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் தாயகம். திம்புக் கோட்பாட்டில் அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதனை இனியும் தாமதம் இன்றி உறுதிப்படுத்த வேண்டும்.

* தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலா அறிமுகப்படுத்திய நீதிப் பொறிமுறையை, எமது நாட்டிலும் நடைமுறைப்படுத்துவது குறித்து, தாமதம் இன்றிக் கவனம் செலுத்த வேண்டும்.

* எங்கள் நாட்டின் முந்தைய அரசு, மனிதாபிமானப் போர் என்று நாமம் சூட்டி, முழுக்க முழுக்க மனிதாபிமானம் அற்ற போரையே நடத்தி முடித்தது.

* அந்த வேளைகளில், அரச படைகள், அதியதி மோசமான முறையில் தமிழ்மக்களின் பிரதேசங்களில் அட்டகாசங்களைக் கட்டவிழ்த்து விட்டிருந்தன--

மேற்போந்தவை, மக்கள் கருத்து அறியும் செயலணியிடம் சுட்டிக் காட்டப்பட்டவையே.

* தட்டிக் கேட்க எவரும் இல்லை எனில், தம்பி சண்டப் பிரசண்டன் என்ற நிலையில் நின்று படையினர் சன்னதக்காரர்களாக மாறினர் எனலாம்.

1948ஆம் ஆண்டு, ஆங்கிலேயர் இங்கிருந்து விட்டேகி, சுதந்திரத்தை தாம்பாளத்தில் வைத்து வழங்கிச் சென்றதனைத் தமக்குச் சாதகமாக்கினர் பெரும்பான்மை இன அரசியல் -- ஆட்சித்-- தலைவர்கள்.

தாம் பெரும்பான்மையினர் என்பதால் சிறுபான்மை இனத்தவர்களான தமிழ் மக்களை இரண்டாம் தரப் பிரசைகள் ஆக்கினர்.

இந்த நாட்டுக்கு அந்தக் காலத்தில் தேயிலை, இறப்பர் மூலம் அந்நியச் செலாவணியை அள்ளிக் கொடுத்த மலையகத் தமிழ் மக்களை, வாக்குரிமை அற்றவர்களாக அடக்கி ஒடுக்கி வைத்திருந்தனர்.

இறுதிப் போரின்போது கொத்துக் குண்டுகள் வீசப்பட்டதாகவும், தாம் அதனை நேரில் கண்டதாகவும், நல்லிணக்கச் செயலணியிடம் வவுனியாவில் சாட்சியம் அளித்திருப்பதும் இங்கு தொட்டுக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

மேலும்--

காணாமற் போனவர்கள் இல்லை, இல்லை; அப்போதைய அரசால் காணாமற் போகச் செய்யப்பட்டவர்களுக்கு, என்ன நடந்தது என்பதை முந்தைய மகிந்த அரசும், சரி, இப்போதைய நல்லாட்சி அரசும் சரி, மூடி மறைத்து வந்தன.


அந்த நிலை, இப்போதைய அரசிடம் குடி கொள்ளக் கூடாது என்பதே, பல வகைகளிலும், பல வழிகளிலும் பாதிப்படையச் செய்யப்பட்ட தமிழ் மக்களின் நியாயமான வேணவா ஆகும்.

மாவீரர் துயிலும் இல்லங்கள் காணப்பட்ட இடங்களில் அவை அழித்து உடைக்கப்பட்டு விட்டதையும்--

இறந்த தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்த அனுமதி வேண்டும் என்றும் மக்கள் கருத்தறியும் செயலணியிடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

செயலணியின் நிலைப்பாடு- பரிந்துரை எவ்வாறு அமையும் என்பது இறைவனுக்குத் தான் தெரியும் என்பதை விட, அதுகுறித்து வேறெதுவும் சொல்லவோ அன்றி ஊகிக்கவோ எவருக்கும் வாய்ப்பில்லை

அதன் செயற்பாட்டுக் காலம் மட்டுப் படுத்தப்படாமல் நீண்டு சென்றால், ஐ.நா. மனித உரிமைகள் சபை உட்பட எவருமே, எதுவுமே செய்ய இயலாத நிலை தோற்றுவிக்கப்படுமோ, எனும் நிலை மேலேழுகிறது அல்லவா...?



சண்டேரைம்ஸ் கட்டுரையில் இருந்து
ரெங்கன்

தென் ஆசியாவில் அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்வதில் சீனாவும்-இந்தியாவும் தங்களுக்கிடையிலான போட்டியில் இலங்கையைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகின்றன என்பது மந்த புத்தியுள்ளவர்களைத் தவிர வேறு எல்லோருக்குமே வெளிச்சமான ஒரு விடயம். இதில் இலங்கையில் துறைமுக நகரம் ஒன்று சீன நிதி முதலீட்டில் கட்டியெழுப்பப்படுவதற்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவிக்கவே செய்யும் என்பது ஆழமாக ஆராயப்பட வேண்டிய ஒரு விடயமல்ல.

இவ்வாறான ஒரு துறைமுக நகரம் அமைவது, இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவே இருக்கும் என்பதை இந்தியா கைகட்டிக் கொண்டு சும்மா பார்த்துக் கொண்டிருக்காது என்பது மட்டுமல்ல, இது இலங்கை அரசுக்கு நன்றாகவே தெரிந்திருக்கும் என்பதும் வெள்ளிடைமலை. இலங்கையில் சீனா கால்பதிப்பது தொடர்பில் இந்தியா எதிர்ப்புத் தெரிவித்திருப்பது இதுதான் முதல் தடவை என்பதல்ல. இதுவே கடைசித் தடவையாகவும் இருக்கப் போவதில்லை. இந்தியா தனது எல்லைகளைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்வதில் கவனமாகவே இருக்கும். ஏதோ அந்த நாடு, இதில் அக்கறையில்லாமல் இருப்பதாக எவரும் எண்ணிவிடலாகாது.

இலங்கையின் நெருங்கிய அயல் நாடான இந்தியாவுக்கு இலங்கையில் அக்கறையுள்ள பல விடயங்கள் உள்ளன. முன்னைய ராஜபக்ச அரசு அம்பாந்தோட்டையில் சீன நிதியுதவியில் துறைமுகம் அமைக்கவும், மத்தள விமான நிலையம் கட்டவும் சம்மதம் அளித்திருந்த போதும், இந்தியா ஆட்சேபனை தெரிவித்திருந்தது. அந்தத் துறைமுகமானது எதிர்காலத்தில் சீனாவுக்கான கப்பல் துறையாக ஆவதோடு, அங்கு போர்க்கப்பல்கள் நங்கூரமிடக்கூடிய வசதிகள் உருவாக்கப்படலாம், அதேபோல் அம்பாந்தோட்டையிலிருந்து 16 மைல் தொலைவிலுள்ள மத்தள விமான நிலையத்தில் போர் ஜெட் விமானங்கள் இறங்கக்கூடியதாகவும் வசதிகள் செய்யப்படலாம் என்று இந்தியா கருதியது.

### கைகளை அகல விரித்து உதவிகளைப் பெற்றனர்

நாட்டின் [illegible] தொடர்பில் எந்தவித அக்கறையும் இல்லாமல், இந்தியாவின் இயற்கையான கவலைகளையும் புறந்தள்ளிவிட்டு, கேட்காமலே சீனா வழங்க முன்வந்த உதவியை ராஜபக்ச அரசு இரு கைகளையும் அகல விரித்து பெற்றுக் கொண்டது. இதன் மூலம் கொழும்புக் கடற்பகுதியில் 233ஹெக்ரேயர் பகுதியில் துறைமுக நகரம் அமைக்க சீனா முன்வந்தது. இதனை இந்தியா திகிலுடன் நோக்கியதுடன், அது இலங்கையின் துறைமுக நகரில் சீனாவின் ஐந்து சிவப்பு நட்சத்திரக் கொடியை ஏற்றி வைக்கும் முயற்சி என்றும் கருதியது. இந்தியத் துணைக் கண்டத்தின் ஒரு முனையில் இலங்கைத்தீவு அமைந்திருப்பதால், இந்தியாவுக்கான உட்புகும் வாயிலாகவே இலங்கை கருதப்பட்டு வந்துள்ளது. இந்தியாவின் நிலையில் இருந்து இதனைப் பார்த்தால், அதன் கதவருகிலேயே எதிரிகள் முகாம் இடுகிறார்கள் என்று நினைப்பதற்கே முடியாமல் இருக்கும். அந்த வகையில் இந்தியாவை நோக்கிய ஏவுகணைகளை தாங்கிவரும் சீனக் கப்பல்களின், விமானம் தாங்கியாக இலங்கை மாறுவதைப்பற்றி பேச வேண்டியதில்லை.

இந்த நிலையில் துறைமுக நகர்த் திட்டத்தைக் கைவிடும்படியும், அது பற்றி பின்னர் ஆலோசிக்குமாறும் இந்தியா அழுத்தம் கொடுத் ததாக அமைச்சரவை பேச்சாளர் கடந்த வாரம் பத்திரிகையாளர்களிடம் வெளியிட்ட தகவல் எவரையும் அதிர்ச்சி கொள்ளச் செய்திருக்க மாட்டாது. இந்த விடயம் ஏற்கனவே மக்கள் மத்தியில் பேசப்பட்ட ஒன்றே. ஆனால் இந்தியா அழுத்தம் கொடுத்தமையை அரசு வெளியிட்டமையானது, இந்தியா - சீனா ஆகிய இரண்டு நாடுகளிலும் இலங்கை குறித்து மோசமான பிரதிபலிப்புக்களை தோற்றுவிப்பதாய் இருக்கும் என்று கூட்டு எதிர்க்கட்சியினர் அரசின் மீது குற்றஞ்சாட்டியுள்ளார்கள். உண்மையை மக்களிடமிருந்து - அவர்கள் ஏற்கனவே அறிந்துவைத்திருக்கும் ஒன்றை, அவர்களிடம் வெளியிடுவதை ராஜதந்திர நடைமுறைகள் எதுவும் தடுப்பதாகத் தெரியவில்லை. இந்த விடயத்தை முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஏற்கனவே பொதுக்கூட்டமொன்றில் வெளியிட்டிருந்தார். நாட்டின் பெரும் அபிவிருத்தி தொடர்பாக கடந்த ஜூலை மாதம் கருத்தரங்கொன்றில் பேசிய கோத்தபாய ராஜபக்ச, பி.ஜே.பி. அரசு பதவிக்கு வந்தபோது இந்திய பாதுகாப்புச் செயலாளர் அஜித் டோவலுடன், இருதரப்பு உரையாடல் நடத்தியதாகவும் அப்போது அவர் விடுத்த முதல் முக்கிய கோரிக்கை, துறைமுக நகர் அபிவிருத்தியைக் கைவிடும்படி கேட்டுக் கொண்டதே என்றும் குறிப்பிட்டிருந்தார்.

### சீனாமீது கண்மூடித்தனமான நம்பிக்கை

பார்க்கப் போனால், இந்தவிடயத்தில் ராஜபக்ச அரசு அநாகரிகமான முறையில்தான் அப்போது பதிலளித்திருக்க வேண்டும். சீன அரசு பெரும் தொகையில் கடன்களையும் உதவிகளையும் அள்ளிக் கொடுக்க முன்வந்ததில் அன்றைய ஆட்சியாளர்கள் கண்மூடிப்போய் இருந்தமை ஒருபுறமிருக்க, மனித உரிமைகள் தொடர்பில் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடையேதும் விதிக்கப்படுமானால், சபையின் நிரந்தர உறுப்பு நாடு என்ற வகையில் சீனா தனது (வீட்டோ) ரத்து அதிகாரத்தை பிரயோகித்து பாதுகாக்கும் என்ற நப்பாசையும் இவர்களுக்குத் தைரியமூட்டுவதாய் இருந்திருக்கலாம்.

சீனா தன்பக்கம் இருப்பதாகக் கருதிய நிலையில், இவர்கள் தலைகீழ் தெரியாமல் ஆடியதில், ஏனைய உலக நாடுகளில் வேண்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# துறைமுக நகர்த் திட்டத்தினால் சிக்கலுக்குள் இலங்கை

## இந்திய முன்னெச்சரிக்கை நிராகரிக்கப்பட்டதன் விளைவு

டத்தகாதவர்களாகக் கருதப்படலாயினர். நெடுங் காலமாக இலங்கை கடைப் பிடித்துவந்த அணிசேராக் .கொள்கையை ராஜபக்ச ஆட்சியாளர்கள் சீனாவின் பக்கம் அதீதமாக சரித்துக் கொண்டு சீரழித்து விட்டனர்.

"சீனாவுடன் அல்லது வேறு நாடுகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளும்போது, இந்தியாவுடன் கலந்தாலோசிக்க வேண்டுமா என்பதை நல்லாட்சி அரசு விளக்க வேண்டும். இது குறித்து நாடாளுமன்றத்தில் கேள்வியெழுப்ப வேண்டும் " என்று கோத்தபாய அண்மையில் கூறியிருந்தார். ஆனால் அதில் என்ன தவறு? சர்வதேச விடயங்களில்- இந்த மாதிரி விடயங்களில் பாதிக்கப்படுபவர்கள் அல்லது அப்படிக் கருதக் கூடியவர்களுடன் கலந்து பேசிய பின்னரே திட்டமிட வேண்டும். 2015ஆம் ஆண்டு திட்டத்தை நிறுத்தி வைத்தபோது இந்த அரசும் இந்தியாவின் அழுத்தத்தில் முடங்கிப்போயிற்று என்று கூட்டு எதிர்க் கட்சியினர் கேலிசெய்தார்கள். ஆனால் திட்டத்தை மீள ஆரம்பிக்கும்போது சீனாவின் அழுத்தத்தில் இந்த அரசு முடங்கிப் போனமை குறித்து அவர்கள் ஒரு வார்த்தைகூட வெளியிடவில்லை.

துறைமுகநகர் அமைப்பதை சுற்றுச்சூழல் நிபுணர்களும், சட்டவல்லுனர்களும் எதிர்த்திருந்தபோதிலும், அவைகள் புறக்கணிக்கப்பட்டன. இந்தியாவின் கவலையைச் சற்றும் கவனத்தில் கொள்ளாமல் மகிந்த ராஜபக்சவும் சீனா அதிபர் ஸி ஜின்பிங் இருவருமாகத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர். இந்தியாவின் பிராந்திய கரிசனை முற்றாகப் புறக்கணிக்கப்பட் டமையால் இலங்கைக்கும்



இந்தியாவுக்குமிடையிலான உறவு மேலும் மோசமடைந்தது மட்டுமன்றி, ராஜபக்ச இந்தியாவினால் விரும்பப்படாத மனிதராகவும் தம்மை ஆக்கிக் கொண்டார்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகத் தெரிவானமை மீண்டும் இரு நாடுகளுக்குமிடையில் உறவுநிலை மேம்பட உதவியது. நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில், வாக்களித்ததுபோல் துறைமுகப்பணிகள் நிறுத்தப்பட்டன.

### சீனாவின் நடத்தை

இந்த நிலமையில், சீனவானது வர்த்தக வங்கிகள், தவறுவிடும் வாடிக்கையாளர்களுக்குச்செய்வதுபோன்றுநடந்துகொண்டு, வழங்கிய கடன்களைத் திருப்பிக்கேட்டது. ராஜபக்சவின் ஊழல், கையாடல், வீணடித்தல் போன்றவைகளால் ஏற்பட்டிருந்த பெரும் பளுவைப் புதியஅரசு தன் தலையில் சுமக்க நேர்ந்தது. சீனாவின் அழுத்தத்துக்கு அரசு தலைகுனிய நேர்ந்தது.

### புதியபெயரில் துறைமுகத் திட்டம்

சீனாவுக்குச்சென்று திரும்பிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க துறைமுக வேலைகளை அரசு மீண்டும் தொடங்கும். ஆனால் புதியபெயரில் நிதிநகரம் (Financial City) என்று அழைக்கப்படும் என அறிவித்தார். தேர்தல் காலத்தில் அறிவித்ததுபோல் துறைமுகநகரத் திட்டத்தை நிறுத்த முடியாமல் போனமைக்கு முன்னைய அரசு ஏற்படுத்திவிட்ட நிதித் துறைச் சிக்கல்களே காரணம் என்பது இப்போது வெளிப்படையாகியுள்ளன.

ராஜபக்ச ஆட்சியினரால் 2014ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட மூல ஒப்பந்தத்தின்படி 20 ஹெக்ரேயர் நிலப்பகுதி சுதந்திரமான பாவிப்புக்குக் கொடுக்கப்படவிருந்தது. அதாவது இலங்கைக் குரிய ஒரு நிலப்பகுதி சீனா வுக்குத் தாரை வார்க்கப்படவிருந்தது. வேறுவகையில் சொல்வதானால், சீனாவுக்கு அந்தப் பகுதி விற்கப்படவிருந்தது. இறுதியில் அது சீனாவுக்கே சொந்தமாகி விடும்.

துறைமுக நகரம் அமைக்கப்படுவதனால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை இந்தியா முன்கூட்டியே இலங்கைக்கு அறிவுறுத்தியிருந்தது என்பதையே அமைச்சர் ராஜித சேனாரத்ன பத்திரிகையாளரிடம் கூறியவிடயத்திலிருந்து அறிந்து கொள்ளக் கூடியதாய் உள்ளது. அதுமட்டுமல்ல, இலங்கை நாட்டின் பரிசுத்தமான இறைமையை ஒரு சீனாக்காரன் கொள்ளையடித்துத் தனது வெற்றி மாலையில் மேலும் ஒரு முத்தை இணைத்துக் கொள்ள உதவியதாகவும் இருந்திருக்கும் என அமைச்சர் கூறினார்.

துறைமுகநகர் அமைப்பதற்குப் பல்வேறு பிரிவினரும் எதிர்ப்புத் தெரிவித்து வந்த நிலையில், பதவிக்கு வந்தால் அதை நிறுத்திவிடுவதாக ஐ.தே. கட்சி அறிவித்திருந்தது. ஆனால், இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுமானால், ஏற்படக் கூடிய பாதக நிலமைகள் குறித்து இந்தியாவே முதலில் எச்சரிக்கை செய்திருந்தது. திட்டம் நிறைவேறினால் அது இலங்கையின் சட்டவரம்புக்குள் வராது. அது இலங்கையின் இறைமையைக் கேள்விக்குறியாக்கிவிடும் என்று எச்சரித்திருந்த இந்தியா, இலங்கை விமானங்களும்கூட அங்கு இறங்குவதற்குத் திட்ட முகாமைத்துவம், அது தனது இடம் எனக்கூறி மறுக்கும் நிலை ஏற்படும் என்றும் இந்தியா எச்சரித்திருந்தது என அமைச்சர் கூறினார்.

இலங்கைஅரசுதுறைமுகநகரத்திட்டத்தை நிறுத்திவிட முடிவெடுத்தமைக்குக் காரணங்கள் தேடிக்கொண்டிருப்பதை விட, இந்தியாவின் கவலை மற்றும் இந்தப் பிரதேச பாதுகாப்பு அமைதி முதலியவைகளை உத்தேசித்து பக்கத்து நாட்டுடனான தேச உறவைக்கருதியும் திட்டத்தை நிறுத்தி வைக்கின்றோம் காலம் கனியும் வரை, என்று இலங்கை தரப்பில் கூறியிருக்க முடியும். எதுவானாலும் எமக்குமிக அருகிலுள்ள இந்தியா தனது எச்சரிக்கையான கண்களை எப்பொழுதுமே இந்தப் பகுதியில் விழிப்பாக வைத்துக்கொண்டிருக்கும் என்பது நிச்சயம். இரண்டு வரன்களின் மத்தியில் மாட்டிக்கொண்டு நிற்கும் பெண்ணைப் போன்று முட்டாள்தனமான நிலையில்

---

# பட்டதாரி அலுவலர்களுக்கு வகுப்பு II பதவி உயர்வு கிடைக்க ஒருங்கிசைந்து ஒன்றிணைவோம்

வடக்கில் 2005 ஆம்ஆண்டு பட்டதாரிகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமனம் பெற்ற நாம், வகுப்பு II இற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளோம்.

இதன் மூலம் நாம் வகுப்பு II இற்கு உரிய சகல நலன்களையும் அனுபவித்து வருகின்றோம்.

அத்துடன் வடக்கு மாகாண பிரதம செயலாளரின் துரித முன்னேற்றகரமான நடவடிக்கையால், பட்டதாரி அபிவிருத்தி அலுவலர் சேவையில் உள்ள நாமும், பயன்மிகு அர்ப்பணிப்புள்ள சேவையை வழங்கி வருகின்றோம்.

இதேபோல1999 இல்வடக்குமாகாணத்தில்உள்ளூராட்சிஉதவியாளராக (L.G.A) பணியாற்றிய வகுதியினர் வடக்கு உள்ளூராட்சி அமைச்சின் கீழ்17 வருடங்களுக்கு மேலாக பட்டதாரிஉள்ளூராட்சிஉதவியாளர்களாக பணியாற்றி வருகின்றனர்.

எனினும் இவர்களுக்கான பதவி உயர்வு அதாவது வகுப்பு II க்கான பதவி உயர்வு இன்னமும் கிடைக்கவில்லை.

ஆனால் 1999 இல் நியமனம் பெற்று கடமையாற்றுகின்ற உள்ளூராட்சி உதவியாளர்கள் (L.G.A) பதவி உயர்வு, தரவு உயர்வு இன்றி உள்ளபோது அதன் பின்னர் 6 ஆண்டுகள் கழித்து 2005 இல் நியமனம் பெற்ற அபிவிருத்தி அலுவலர்களாகிய நாம் வகுப்பு II இற்கு பதவி உயர்வு பெற்று பல மாதங்கள் கழிந்து விட்டன.

ஆனால் 1999 இல் நியமனம் பெற்ற கிழக்கு மாகாண உள்ளூராட்சி உதவியாளர்கள் வகுப்பு II வகுப்பு I ஆகிய இருபதவி உயர்வுகளைப் பெற்று சேவையாற்றும்போது, வடக்கு மாகாண உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு ஏன் வகுப்பு II க்கான பதவி உயர்வையாவது வழங்க முடியாதுள்ளது.

இவர்களது பதவி உயர்வு ஏன் காலதாதமாகிறது?

கிழக்கு மாகாணத்தில் பதவி உயர்வுக்கு பயன்பட்ட சேவை பிரமாணக் குறிப்பு, வடக்கு மாகாணத்துக்கு பொருந்தாதா?

அதில் ஆளுநர் கையெழுத்து இல்லையா?

2005 இல் பிந்தி வந்த நாம் சலுகைகள் அனுபவிக்க, 1999 இல் வந்தவர்கள் ஏன் பதவி உயர்வு இன்றிக் கஷ்டப்பட்டுக் கொண்டு சேவையாற்றுகின்றனர்.

எனவே 2005 இல் நியமனம் பெற்ற பட்டதாரி அலுவலர்கள் ஒருங்கிணைந்து 1999 இல் நியமனம் பெற்ற பட்டதாரி உள்ளூராட்சி உதவியாளர்களுக்காக குரல் கொடுக்க முனையவேண்டும்.

எனவே பாதிக்கப்பட்டவர்களின் நலன் வேண்டி வடக்கில் உள்ள பட்டதாரி அபிவிருத்தி அலுவலர்கள் ஆகிய நாம், ஒருங்கிணைந்து செயற்பட்டு உரிய தீர்வு, உரிய நியாயம், உரிய பதவி உயர்வுக்காக தோள்கொடுக்க ஒன்றிணைந்து போராடுவோம்.

நல்லாட்சியில் ஒருங்கிணைந்த ஒத்திசைவே உரிய காலத்தீர்வுக்கு வழிகாட்டும். அனைவரும் ஒன்றிணைவோம்.

முருகு கணபதி பட்டதாரி, தென்மராட்சி அபிவிருத்தி அலுவலர்,

... பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ... குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


லில்லி கிங்


எபிமோவா

# அமெ. – ரஷ்யா வீராங்கனைக
# ஒலிம்பிக்கில் வார்த்தை மோத

ரியோ ஒலிம்பிக் தொடரில் அமெரிக்க, ரஷ்ய நாடுகளின் நீச்சல் வீராங்கனைகள் நேருக்குநேர் வார்த்தை மோதலில் ஈடுபட்டமையானது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.
நேற்று நடைபெற்ற பெண்களுக்கான 100 மீற்றர் புற நீச்சலில், அமெரிக்க வீராங்கனை லில்லி கிங் ஒரு நிமிடம் 4 செக்கன்கள் 93 மில்லி செக்கன்களில் இலக்கை கடந்து, தங்கப் பதக்கத்தை வென்றார். ரஷ்யாவின் யுலினா எபிமோவா ஒரு நிமிடம் 5 செக்கன்கள் 50 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து, வெள்ளிப் பதக்கமும், அமெரிக்காவின் மற்றொரு வீராங்கனை கேட்டி மெய்லி ஒரு நிமிடம் 5 செக்கன்கள் 69 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.
வெள்ளிப்பதக்கம் வென்ற 24 வயதான ரஷ்ய வீராங்கனை யுலினா எபிமோவா ஊக்கமருந்து சர்ச்சையில் இரண்டு முறை சிக்கியவர். 2013 ஆம் ஆண்டு அவருக்கு 16 மாத கால தடை விதிக்கப்பட்டது. அதன் பிறகு கடந்த மார்ச் மாதம் 'மெல்டோனியம்' என்ற ஊக்கமருந்தை பயன்படுத்தியதாக மீண்டும் சிக்கினார். இதனால் ஒலிம்பிக்கில் பங்கேற்க முதலில் தடை விதிக்கப்பட்டது. ஆனால், மெல்டோனியத்தை தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து பட்டியலில் சேர்ப்பதற்கு முன்பாகவே பயன்படுத்தினேன். எனவே என் மீது தவறு இல்லை என்று வாதிட்ட எபிமோவா சர்வதேச நீச்சல் சங்கத்திடம் மீண்டும் முறையிட்டு கடைசி நேரத்தில் ரியோ ஒலிம்பிக்கில் கலந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றார்.
எபிமோவா நீச்சல் குளத்துக்குள் பாய்வதற்கு வந்தபோதெல்லாமல் அவருக்கு எதிராக அமெரிக்க, ஆஸ்திரேலிய ரசிகர்கள் கோசம் எழுப்பினர். இவற்றையும் தாண்டி தகுதி சுற்றில் தனது பிரிவில் முதலிடத்தை பிடித்ததும், தான் முதல்தர வீராங்கனை என்பதற்கு அடையாளமாக விரலை உயர்த்திக் காட்டினார். லில்லி கிங் தனது பிரிவு போட்டி முடிந்ததும், எபிமோவாவுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக தனது விரலை உயர்த்தி காண்பித்தார். மட்டுமல்லாமல் இறுதிச் சுற்று முடிந்ததும் எபிமோவாவுடன் கைகுலுக்கி வாழ்த்து தெரிவிக்க லில்லி கிங் மறுத்து விட்டார்.
வெற்றியின் பின் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், லில்லி கிங் "நீங்கள் (எபிமோவா) முதல்தர வீராங்கனை என்று விரலை அசைத்துக் காட்டுகிறீர்கள். ஊக்கமருந்து மோசடி செய்தவர்கள் நீங்கள். இவ்வாறு காட்ட உங்களுக்கு என்ன தகுதி இருக்கிறது. இப்படிபட்டவர்களை நான் ரசிக்கமாட்டேன். நான் அப்ப
இருப்பதால்தான், அமெரிக்க அ
போட்டியில் பங்கேற்கிறேன்" - எ
பத்திரிகையாளர் சந்திப்பு நடை
உடனடியாக வந்த எபிமோவா, "இ
பெற்ற நான் ரஷ்ய அணியில் இ
சிந்திக்கும் நீர், இருமுறை தடை
ஓட்டப்பந்தய வீரரான ஜஸ்டின்
ரிக்கா), உமது அணியில் இருப்ப
சிந்திக்கவில்லை" என்று பதில்
பினார்.
"நான் அனைவரையும்தான் சொ
- தெரிவித்து, அங்கிருந்து செ
ரிக்காவின் லில்லி கிங். லில்லி
துக்கு உலக நீச்சல் ஜாம்பவான்
ரவு தெரிவித்தார்.

## ரியோவில் ஓர் தமிழன்



ரியோ ஒலிம்பிக் தொடரில் ஈழத்துத் தமிழர் ஒருவர் களமிறங்கினார். தோல்வியடைந்தார். பருத்தித்துறை பிரதேசத்தைப் பூர்வீகமாகக் கொண்ட துளசி தர்மலிங்கம் என்ற குத்துச் சண்டை வீரரே அவ்வாறு ரியோ ஒலிம்பிக் தொடரில் களமிறங்கிய தமிழராவார். கட்டார் நாட்டின் சார்பாகவே அவர் களமிறங்கினார்.
துளசி தர்மலிங்கம் தனது முதலாவது போட்டியிலேயே மங்கோலிய வீரரிடம் தோல்வியடைந்து வெளியேறினார். இருப்பினும் தமிழ் வீரர் ஒருவர் ஒலிம்பிக் தொடரில் களமிறங்கியமை உலகத் தமிழர்களின் கவனத்தை அதிகளவில் ஈர்த்துள்ளது.
துளசி தர்மலிங்கம் இதுவரை 120 குத்துச் சண்டை போட்டிகளில் களமிறங்கி 75 போட்டிகளில் வெற்றி கண்டுள்ளார். 6 போட்டிகள் சம நிலையில் முடிந்துள்ளன. உலகத்தரத்தில் நடந்த போட்டிகளில் காலிறுதிப் போட்டியை எட்ட முடியாவிட்டாலும் ஓர் தடவை ஜேர்மனின் சம்பியனாக மாறினார்.
இவர் ஜேர்மனியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டபோதிலும் கட்டாருக்காகக் களமிறங்கியமை சற்று விசித்திரமானது. ஒவ்வொரு நாடும் தமது ஒலிம்பிக் குழாமிலிருந்து புறக்கணித்த வீரர்களைத் தெரிந்தெடுத்து அவர்களுக்கு தனது குடியுரிமையை வழங்கி ஓர் அணியாக்கி அனுப்பியது கட்டார். இதன்படி ஜேர்மனியால் புறக்கணிக்கப்பட்ட துளசி தர்மலிங்கம், கட்டாரின் சார்பில் இம்முறை ஒலிம்பிக் தொடரில் களமிறங்கினார். (ம-ரி4)



## சாதிப்பாரா சமரக்

ரியோ ஒலிம்பிக் தொடரில் இன்று
ஆண்களுக்கான 50 மீற்றர் துப்பாக்கி சுடு
இலங்கையின் சார்பாக சமரக்கோன் கள
நீச்சல் போட்டியில் இலங்கைக்கு ஏமாற்
நிலையில், சமரக்கோனின் மீது அதிக எதி
ஏற்பட்டுள்ளன. போட்டி இலங்கை நேர
5.30 மணிக்கு இடம்பெறும்.

## அமெரிக்காவுக்கு வரலாற்று அடைவு

ஒலிம்பிக் வரலாற்றில் வாள்ச் சண்டையில் அமெரிக்கா முதன்முறையாக வெள்ளிப் பதக்கமொன்றை வென்றுள்ளது. நடைபெற்றுவரும் ரியோ ஒலிம்பிக் தொடரில் ஆண்கள் வாள்ச் சண்டைப் பிரிவில், அமெரிக்க வீரர் டர்யல் ஹொமர் என்ற வீரர் வென்ற வெள்ளிப் பதக்கமே அந்த நாட்டின் உயர் அடைவாகப் பதிவாகியுள்ளது. 1984 ஆம் ஆண்டு அமெரிக்காவின் கீற்றர் வெஸ்ட் என்ற வீரர் வெண்கலம் வென்றமையே இதுவரை காலமும் வாள்ச் சண்டையில் அமெரிக்காவின் ஆகச் சிறந்த அடைவாகப் பதிவாகியிருந்தது.
இந்தப் பிரிவில் ஹங்கேரியைச் சேர்ந்த அரன் சிலாக்யி தங்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (ம-ரி4)

## பாலியல் குற்றச்சாட்டில் சிக்கினார் நமீபிய வீரர்

நமீபியா நாட்டைச் சேர்ந்த குத்துச்சண்டை வீரர் ஜோனாஸ் ஜினியஸ் (வயது-22) வன்புணர்வு முயற்சியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டார்.
ஜோனாஸ் ஜினியஸ், ஒலிம்பிக் தொடக்க விழாவில் அந்த நாட்டு தேசியக் கொடியை ஏந்தி வந்தவர் ஆவார். இவர் ஒலிம்பிக் கிராமத்தில் துப்புரவுப் பணியில் ஈடுபட்ட பெண்ணிடம் வன்புணர்வு முயற்சியில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார். ஒலிம்பிக் கிராமத்தில் இது போன்ற பாலியல் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது இது இரண்டாவது முறையாகும்: ஏற்கனவே மொராக்கோ குத்துச் சண்டை வீரர் கைதாகியுள்ளார். (ம-ரி4)

## ஜோ
## முற்று

ரியோ ஒலிம்பிக்
முழுவதுமாக வெ
டார் ரென்னிஸ் ஜ
சேர்பியாவின்நொ
பன்னாட்டு ரென்
தலில் முதலிடத்தி
கடந்த பல மாதங்
பாலான பன்னா
களைக் கைப்பற்
ரென்னிஸ் ஜாம்ப
விக் மூலம் சேர்பி
கள் ஒற்றையர்
பிரிவுகளில் பதக்
கும் என்று எதிர்
ஆனால் இரண்டி
விக் பெரிதும் ஏம
ஆண்கள் ஒற்றை
டத்தில் முதல் சு
யேறிய அவர், இ
டங்களில் சேர்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மோவா

கள்
தல்

...ான் அப்பழுக்கற்றவளாக ...மரிக்க அணிக்காக இந்த ...றேன்" – என்றார்.
...பு நடைபெற்ற இடத்துக்கு ...மோவா, "இருமுறை தடை ...ணியில் இருப்பதைப்பற்றி ...ற தடை பெற்ற குறுந்தூர ...ஸ்டின் கேத்லின் (அமெ ...ல் இருப்பதைப் பற்றி ஏன் ...று பதில் கேள்வி எழுப்
...நான் சொல்கிறேன்" என்று ...ருந்து சென்றார் அமெ ... லில்லி கிங்கின் கருத் ...ம்பவான் பெல்ப்ஸ் ஆத
(ம-ரி4)

## ...ரக்கோன்

... இன்று நடைபெறும் ...பாக்கி சுடும் போட்டியில் ...கான் களமிறங்குகிறார். ...கு ஏமாற்றமே எஞ்சிய ... அதிக எதிர்பார்ப்புக்கள் ...கை நேரப்படி மாலை
(ம-ரி4)

## சைக்கிளோட்டத்தில் அமெ. தங்கப்பதக்கம்

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் பிரிவு சைக்கிளோட்டத்தில், அமெரிக்கா தங்கப்பதக்கம் வென்றது.
அமெரிக்காவின் சார்பாக களமிறங்கிய ஆம்ஸ்ரோங் 44 நிமிடங்கள், 26 செக்கன்கள், 42 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து தங்கம் வென்றார். ரஷ்ய வீராங்கனை சிபிலிங் 44 நிமிடங்கள், 31 செக்கன்கள், 97 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெள்ளிப் பதக்கத்தையும், நெதர்லாந்தின் அன்னா பேர்கன் 44 நிமிடங்கள், 37 செக்கன்கள், 80 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.
(ம-ரி4)






# பெண்கள் கூடைப்பந்தாட்டத்தில் பிரேஸிலைச் சுருட்டியது ஆஸி.

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் பிரிவு கூடைப் பந்தாட்டமொன்றில் பிரேஸிலை வீழ்த்தியது ஆஸ்திரேலியா.
இந்த இரு அணிகளும் 'ஏ' பிரிவில் இடம்பிடித்துள்ளன. ஆஸ்திரேலியா பலம்வாய்ந்த அணியாகக் கருதப்படுகின்ற போதிலும், பிரேஸிலும் பெரும்போராட்டத்தை வெளிப்படுத்தியது. இருப்பினும் ஒட்டுமொத்தமாக 84:66 என்ற புள்ளிகளைப் பெற்று ஆஸ்திரேலியா வெற்றிபெற்றது.
ஏனைய 'ஏ' பிரிவு ஆட்டங்களில் பிரான்ஸ், துருக்கியை 55:39 என்ற புள்ளிகள் அடிப்படையிலும், ஜப்பான், பெலாரஸை 77:73 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் வீழ்த்தின.
(ம)

## படகு வலிப்பு போட்டிகள் தற்காலிக இடைநிறுத்தம்

ரியோ ஒலிம்பிக்கில் படகு வலிக்கும் போட்டிகள் தற்காலிகமாக இரு தினங்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டன.
போட்டிகள் இடம் பெற்றுவரும் கடற்பகுதியில் அதிக காற்று வீசுவதாலேயே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.
முன்னதாகத் தகுதிச் சுற்று போட்டியின்போது, சைபீரிய வீரரின் படகு அதிக காற்றுக் காரணமாக நீரில் மூழ்கியமை குறிப்பிடத்தக்கது.
(ம-ரி4)




அர்மேனியா நாட்டைச் சேர்ந்த பளுதூக்கும் வீரர் அன்ரனிக் கரப்ரெய்ன் போட்டியின்போது காயமடைந்தார். 195 கிலோ பளுதூக்கும் போட்டியின் இரண்டாவது தெரிவுப் போட்டியில், பளுவைத் தூக்கும்போது அவரது கையின் எலும்புகள் விலகின. (ம-ரி4)

# ஜோகோவிக்கின் ஒலிம்பிக் கனவு முற்றுமுழுவதுமாக அஸ்தமித்தது

...லிம்பிக் தொடரிலிருந்து ...மாக வெளியேற்றப்பட் ...ன்னிஸ் ஜாம்பவானான ...வின் நொவக் ஜோகோவிக். ...டு ரென்னிஸ் தரப்படுத் ...தலிடத்தில் உள்ளவரும், ...ல மாதங்களாக பெரும் ... பன்னாட்டுத் தொடர் ... கைப்பற்றியவருமான ...ஸ் ஜாம்பவான் ஜோகோ ...ம் சேர்பியாவுக்கு ஆண் ...றையர், இரட்டையர் ...ரில் பதக்கங்கள் கிடைக் ...று எதிர்பார்க்கப்பட்டது. ... இரண்டிலுமே ஜோகோ ...ிதும் ஏமாற்றியுள்ளார். ...ள் ஒற்றையர் பிரிவு ஆட் ...முதல் சுற்றுடன் வெளி ... அவர், இரட்டையர் ஆட் ...ல் சேர்பியாவின் பிறி



தொரு நட்சத்திர வீரரான நெனட் லிமோஞ்சிக் என்பவருடன் கூட்டுச் சேர்ந்தார். இந்த இணை தனது இரண்டாவது சுற்று ஆட்டத்தில் பிரேஸிலின் மார்செல்லோ மெலோ மற்றும் புரூனோ சோரஸ் இணையை எதிர்கொண்டது. முதல் செற்றை 6:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றிய பிரேஸிலின் இணை அடுத்த செற்றிலும் ஆதிக்கம் செலுத்தியது. இதனால் இரண்டாவது செற்றும் 6:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் பிரேஸிலின் இணையின் வசமாக முடிவில் 2:0 என்ற நேர் செற் கணக்கில் சேர்பிய இணை வெளியேற்றப்பட்டது.
இந்தத் தோல்வியுடன் ஜோகோவிக்கின் பதக்கக் கனவு முழுமையாகத் தகர்க்கப்பட்டு நிறைவுக்கு வருகிறது.
(ம-ரி4)

## ஜூடோ வீரர் தாக்கப்பட்டார்



ரியோ நகரக் கடற்கரையில் இளைப்பாறச் சென்ற ஜூடோ வீரரை, மர்ம நபர் ஒருவர் தாக்கிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.
ரியோ ஒலிம்பிக் தொடரில் ஜூடோப் போட்டியில், பெல்ஜிய நாட்டைச் சேர்ந்த டிக் வான் ரிச்சில்ட் வெண்கலம் வென்றிருந்தார். பதக்கம் வென்ற அன்றைய தினம் (நேற்றுமுன்தினம்) மாலை இவர் ஓய்வெடுப்பதற்காக ரியோ, நகரக் கடற்கரைக்குச் சென்றிருந்த வேளையில் கடற்கரையில் வைத்தே இவர் தாக்கப்பட்டார். வீரரைத் தாக்கிய நபர் அவரது கைபேசியையும் எடுத்துச் சென்றார். எனினும் அவரது பதக்கம் திருடப்படவில்லை. சம்பவம் தொடர்பில் பிரேஸில் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.
(ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு வியாழ மாற்றம் எப்படி? சிங்கம்

குருப் பெயர்ச்சி, ஓகஸ்ட் 2ஆம் திகதி, தமிழுக்கு ஆடி 18 ,ஆடி அமாவாசை கூடிய நன்னாளில் காலை 9.24 மணிக்கு சிம்ம ராசியில் இருந்து கன்னி ராசிக்கு குரு மாறுவதால் ஏற்படுகிறது. கன்னி ராசிக்கு மாறும் குரு உங்கள் ராசிக்கு எந்த இடத்தில் இருக்கிறார். அதனால் உங்கள் ராசிப்படி உங்களுக்கு ஏற்படும் நன்மை–தீமைகளைப் பற்றிப் பார்ப்போம். அதிக ஆதாயம் அடையும் ராசியினர் – இடபம், சிம்மம், விருச்சிகம், மகரம், மீனம் இவர்கள் ராசிக்கு குரு 2,5,7,9,11 என முழு சுப பார்வை செலுத்துவதால் இந்த ராசியினருக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.

## மகம், பூரம், உத்தரம் 1ம் பாதம் வரை



உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு திடீர் ஊர்மாற்றம், இட மாற்றம் வந்து சேரும். வீடு கட்டுவதிலும், விலை உயர்ந்த பொருள்களை வாங்குவதிலும் கவனம் செலுத்துவீர்கள்.

குரு, செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும்பொழுது (25.11.2016 முதல் 21.2.2017 வரை மற்றும் 2.6.2017 முதல் 1.9.2017 வரை): யோகங்கள் அதிகரிக்கும். இடம், பூமி சேர்க்கை ஏற்படும். தேக நலனில் தெளிவு பிறக்கும். சகோதர ஒற்றுமை பலப்படும். பத்திரப்பதிவில் இருந்த தடைகள் அகலும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். உங்கள் தொழில் முன்னேற்றத்துக்கு அவர்கள் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**மங்கையருக்கான மகத்தான பலன்கள்!**
சிம்ம ராசியில் பிறந்த பெண்களுக்கு செல்வ வளம் பெருகும் நேரம் இது. செயற்பாடுகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். தேசம் போற்றும் வாழ்க்கையும், திடீர் திருப்பங்களும் உருவாகும். பாச மழையிலும், பண மழையிலும் நனையப் போகிறீர்கள். நேச மனப்பான்மை கொண்டவர்களின் ஒத்துழைப்போடு நிகழ்காலத் தேவைகள் முழுமையாகும். கணவன் மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். குடும்பத்தினர்களும் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர்.

பொதுவாழ்வில் இருப்பவர்கள் போற்றிக் கொண்டாடுவர். புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும். துயரங்கள் ஓடி ஒளியும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகள் நனவாகும். வீடு கட்டும் முயற்சியில் உங்கள் பெயர் சேர்க்கப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவு பெருகும். அனைத்துச் சலுகைகளும் கிடைக்கும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். வழிபாடுகளிலும், விரதங்களிலும் கூடுதல் கவனம் செலுத்துவீர்கள். வைரவர் வழிபாடு நன்மையைக் கொடுக்கும்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!**
இம்முறை குரு வக்ரம் பெறுவதோடு, அதிசாரமாகவும் துலாம் ராசிக்குச் செல்கிறார். அங்ஙனம் அதிகாரமாக செல்லும்பொழுது உங்கள் ராசிக்கு 7,9,11 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். எனவே அந்த காலத்தில் கல்யாணக் கனவுகள் நனவாகும். பூர்வீகச் சொத்துப் பிரச்சினைகள் அகலும். வருமானம் திருப்திகரமாக இருக்கும்.

அதே நேரத்தில் வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது உடன் இருப்ப வர்களாலும், குழந்தைகளாலும் பிரச்சினைகள் ஏற்படும். பாடுபட்டதற்கு ஏற்ற பலன் கிடைக்காது.

உடல்நிலைப் பாதிப்புகளும், மருத்துவச் செலவுகளும் ஏற்படும். நட்பு பகையாகலாம். நாடுமாற்றங்களும், வீடு மாற்றங்களும் வந்து சேரும். உங்கள் சுய ஜாதகத்தில் தெசபுத்தி பலம் பெற்றிருந்தால் கவலைப்படத் தேவையில்லை. இல்லையேல் எதிரிகளால் ஏமாற்றங்களைச் சந்திக்கும் சூழ்நிலை உருவாகும்.

**செல்வம் தரும் சிறப்பு வழிபாடு!**
உங்கள் ராசிநாதன் சூரியன் என்பதால் சிவன் வழிபாடும், உமையவள் வழிபாடும் சிறப்பான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும். திருவாதிரை விரதமிருந்து நடராஜரை வழிபடுவது நல்லது.

(தொடரும்)

---



# ஆகம பூசைகளின் கலப்பினால் நாட்டுக்கு அழிவு ஏற்படும்

சி.சக்திகிரீவன்

(நேற்றைய 16 ஆம் பக்கத்தில் திருமுருகாற்றுப்படையை ஓதி சிறைவாழ்வை உடைத்தெறிவோம் என்ற கட்டுரையின் தொடர்ச்சி.)

**பழமுதிர்ச்சோலை**
இது மதுரைக்கு அருகிலுள்ளது. தனியாகச் சொல்லின் அழகர் மலை. தொகையாகக் கூறின், பழங்கள் முதிர்ந்த சோலைகள் தோறும் முருகன் எழுந்தருளி இருப்பான் என்பதாகும்.

இத்தகைய ஆறுபடை வீடுகளில் குடிகொண்ட முருகப்பெருமான் ஆங்காங்கு சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து பூசித்ததில் இருந்து சிவபூஜையின் பெருமை எத்தகையது என்று விவரிக்க முடியாதுள்ளது.

இவை இவ்வாறிருக்க, முருகப்பெருமானின் பூஜா காரியங்கள் பற்றி காமிக ஆகமத்தில் குமாரதந்திரத்தில் கூறப்பட்டுள்ளமை கவனிற்கப்பாலது. கௌசிகர் கேட்கும் கேள்விகளுக்கு பரமேஸ்வரன் அளிக்கும் பதில்களே அவை. தந்திராவதாரப்படலம் முதலாக சாய ரட்சா விதிப்படலம் ஈறாக 51 படலங்கள் காணப்படுகின்றன. முருகப்பெருமானுக்கு எவ்விதம் கோயிலை அமைக்க வேண்டும். பரிவார மூர்த்திகளை எப்பீடங்களில் ஸ்தாபிக்க வேண்டும். எவ்விதம் நித்திய, நைமித்திய, காமிய பூஜைகளை நிகழ்த்த வேண்டும் என்பவை பற்றியெல்லாம் மிகத்தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இப்பூஜைகள் குறைபடின் நாட்டுக்கும் அரசனுக்கும் தீங்கு விளையும் என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

ஆகம பூஜைக் கலப்பினால் அரசனுக்கும் அரசுக்கும் அழிவேற்படும். ஆகையால் குமாரதந்திரத்தில் கூறப்பட்ட படியே வழிபட வேண்டும். வேதங்கள் பரமேஸ்வரனை "சதாசிவ வோம்" என ஒருமுறை துதிக்க, முருகப் பெருமானை 'சுப்பிரம்மண்யோம்' எனக் கூறுவதாக சிவபிரானே எடுத்து விளக்கியிருப்பதாக கந்தபுராணத்தில் "சதாசிவன் ஓமென வேதம் சாற்றும் முக்கனல்சூழ் வேள்வியின் சுப்பிரம்மண்யன் ஓமெனவும் முக்காற்கூறும்" என்கிறது. சிவபிரானால் போற்றப்படும் இத்தகைய முருக வழிபாடு ஈழத்தில் பக்தி பூர்வமாகவும் சிவாகமக் கிரமமாகவும் இடம்பெற்று வருகிறது. இவ்விரு வழிபாட்டு முறைகளுக்கும் ஆதாரமாக விருப்பது பக்தியே. "பக்தி வலையில் படுவோன் காண்க" என்கிறது திருவாசகம். சிவாகமங்களிலும் ஆங்காங்கு மனசா, பத்தியா நிவேத்ய, மனசா பக்தியா சமர்ப்பிய என்றும் அடிகள் பக்தியின் பெருமையைப் புலப்படுத்துகிறது. பூஜைக்குப் பக்தியே அடிநாதமாகிறது.

எமது நாட்டில் கதிர்காமம், தொண்டமானாறு செல்வ[illegible] முருகன், கோயி[illegible] கோயில் போன்றவை தனிப்பக்தி பூர்வமான வழிபாட்டின் சிகரங்களாகத் திகழ்கின்றன.

பழைமை பெற்று சிவாகம முறைப்படி பூஜாகாரியங்கள் நடைபெறும் கோயில்களில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் முதன்மையாகத் திகழ்கின்றது.

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் இவ்விரு நெறிமுறைகளுக்கும் இணைப்புள்ளதாகக் காணப்படுவது வெளிப்படை. அது எவ்வகையில் அமையினும் விதியும், விலக்கும் இறைவனுக்கு கூற வல்லார் யாருளர்?


விதியும் விலக்கும் இல்லார்கு விதியை உரைக்க வல்லார் யார் என்கிறார் ஒரு ஞானி. ஞானத்தால் தொழுவார்கள் தொழக் கண்டு நானும் தொழுவனே. என்பது திருமுறை தந்த தெளிவு.

[illegible] ப இறைவனைப் [illegible]ம், நேசித்தும் வழிபட்ட திருவருட்சம்பவங்கள் பெரிய புராணத்தில் ஆங்காங்கு காணப்படுவது அனைவரும் அறிந்த பரம இரகசியம்.

எமது மண்ணில் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் பெருந்திருவிழா நடைபெறும் இக்காலப்பகுதியில் எமது மக்களின் துன்பச் சுமை நீங்கி, சிறை வாழ்வு அகல திருமுருகாற்றுப்படையை நாமனைவரும் பக்திபூர்வமாக பாராயணம் செய்வது எமது சமூகக் கடமையாகும். இத்திருமுருகாற்றுப்படையின் சிறப்புப்பற்றி மீண்டும் ஒருகணம் ஞாபக மூட்டுவதோடு.

இவ்வாற்றுப்படை பத்துப்பாட்டில் அமைந்திருப்பதோடு திருமுறையிலும் 11 ஆம் திருமுறையில் இடம்பெறுவதும் இன்னோர் சிறப்பம்சமாகும். இந்நூலை அருளிய நக்கீரரோ பொய் டிமை இல்லாத புலவர் என போற்றப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எல்லையில் புதிய குடியேற்றம் கைவிடப்பட்ட நிலையில் மக்கள்

சாமர சம்பத்

வவுனியாவில் இருந்து 40 கி.மீற்றர் தூரம் தூசு மண்டலத்துக்குள் பிரயாணம் செய்தால், போரின் பின்னர் ஏற்படுத்தப்பட்ட போகஸ்வெவ குடியேற்ற மக்கள் அனுபவிக்கும் துயரங்களைக் கண்டுகொள்ளலாம். எமது தலைவர்களால் இந்தத் துயரங்களை அறியமுடியாதிருப்பது கவலைதருகின்றது.

**போகஸ்வெவ பஸ் நிறுத்தப்படுவது எந்த இடத்தில்?**

கடும் உஷ்ணத்தின் கொடூரத்தால் வடிந்தோடும் வியர்வையை என் ஒரு கையில் இருந்த கைக்குட்டையால் துடைத்தவாறு கேட்டேன்.

ஆ ..ஆ அதோ இருக்கிறது என்று–ஏனோ தானோ என்ற நிலையில், விரல்களைச் சுருட்டியவாறு வவுனியா பஸ் நிலைய நேரக் கணிப்பாளர் என்னிடம் கூறினார். அவருடைய நடுவிரல் காட்டிய திசையை என் கண்கள் உற்று நோக்கியபோது அங்கே தூசுப் படலத்தால் மூடப்பட்டதாக போகஸ்வெவ பஸ் நிறுத்தப்பட்டிருப்பதைப் பார்த்தேன். தூசுபடிந்து நிறமே மாறியிருந்த பஸ்ஸுக்குள் ஒருவாறு சிரமப்பட்டு நானும் ஒருவனாக ஏறிக்கொண்டேன். பஸ்ஸுக்குள் அமர்ந்திருந்தவர்களை மெதுவாக உற்று நோக்கினேன். வாடிவதங்கிப்போன முகங்கள். எதிர்பார்ப்புக்கள் அனைத்தும் சுக்கு நூறாகிய சோகத்தில், தொங்கும் முகங்கள்.

உயிர்பெற்ற பஸ் வண்டி திருகோணமலை வீதி ஊடாகச் சிறிது தூரம் போய் மாமடுவ சந்திவழியாக இடதுபக்கமாக பெரியதூசுமண்டலத்தைக் கிளப்பியவாறு தூசுப்படைக்குள்ளால் பயணத்தைத் தொடர்ந்தது.

பாதையின் இருபுறமும் பெரும் தூசுப்படை. இறங்கவேண்டிய பயணிக்கு எதுவும் கண்களுக்கு தென்படாத அளவுக்குப் பாதை மேலெழும்பும் தூசால் நிரம்பி வழிந்தது.

**கி.மீற்றர் 40இற்கு தூசு மண்டலம்**

பாதை திருத்தம் செய்வதாக ஆயிரக்கணக்கான ரூபா செலவில் பொருத்தப்பட்ட பெயர்ப் பலகையை மட்டும் காண முடிந்தது. 40 கி.மீற்றர் தூரத்தைக் கொண்ட பாதையின் ஒவ்வொரு அடிக்கும் பெரிய குழிகள். கடும் வறட்சிக் காலத்தில் போகஸ்வெவக்கு போகும் பஸ் வண்டி முழுமையாக அந்தப் பகுதியில் உள்ள தூசு படிந்த நிலையில் தோற்றம் தருவதுபோல், அந்தப் பிரதேச மக்களது உடைகளும் இயல்பாகவே தூசு நிறமாக மாறியிருக்கின்றன. வவுனியா பஸ் நிலையத்தில் நிறுத்தப்படும் பஸ் வண்டிகளில் போகஸ்வெவ பஸ் எது என்பதை பெயர்ப் பலகையைப் பார்க்காமலே அவர்களால் அடையாளம் காணமுடியும். அந்தளவுக்குத் தூசு.

வவுனியா நகரில் இருந்து திருகோணமலை வீதி ஊடாக இரண்டரை கி.மீற்றர் தூரம் வரை சென்றால் வருவது மாமடுவ சந்தி. அந்தச் சந்தி வழியாக இடதுபக்கம் 40 கி.மீ. தூரம் வரை போனால் போகஸ்வெவ வரும். முறையே நந்திமித்திரகம, சலலிஹினிகம, நாமல் கம ஆகிய குடியேற்றங்களை போகஸ்வெவ்வக்கு செல்லும்போது காணலாம். போகஸ்வெ முதலாவது குடியேற்றம், போகஸ்வெவ இரண்டாவது குடியேற்றம் என்று இரண்டு பிரிவுகள் உள்ளன.

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட 2011ஆம் ஆண்டின் பின்னர், வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டதே போகஸ்வெவ குடியேற்றமாகும். 1930ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட விசேட அரச வர்த்தமானி அறிவித்தலுக்கமைய பெருமளவான காடுகள் அழிக்கப்பட்டே இந்தக் கிராமத்தின் பெருமளவு நிலப்பிரதேசம் அமைக்கப்பட்டிருக்கின்றது. நந்தமித்திர யோதயாவால் நிர்மாணிக்கப்பட்டது என்ற அந்த காவியத்திற்கும் இன்றைய போகஸ்வெவவுக்கும் இடையில் தொடர்பு இல்லை.

**நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள்**

இங்கு மக்களை குடியேற்றும்போது மக்களுக்கு ஒரு ஏக்கர் பயிர்ச் செய்கைக்கான நிலமும், குடியிருக்க வீடும் விவசாயம் செய்வதற்கு இரண்டு ஏக்கர் வயல் காணியும் தருவதாக அரசு வாக்குறுதி வழங்கியிருந்தது. போகஸ்வெவ முதல் குடியேற்றத்தில் ஒரு சிலருக்கு மட்டும் வயல் காணி வழங்கப்பட்டிருந்தது. இன்னும் சிலருக்குப் போகஸ்வெவ முதல் கிரமத்திலும் நந்தமித்திரகமவிலும் வீடு கிடைத்திருந்தது. பெருமளவானவர்களுக்கு மலசலகூடம் ஒன்றைக் கட்டிக்கொள்வதற்காகவாவது பணம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

போகஸ்வெவ விவசாய மன்றத்தின் செயலாளர் ஆர்.பி. அய்ராங்கனீ இது பற்றி தெரிவிக்கையில், தான் உட்பட இங்கு குடியிருக்க வந்தவர்களுக் குக் கொடுத்த வாக்குறுதியில் எதையும் அரசு நிறைவேற்றவில்லை என்று கூறுகின்றார்.

இங்குளங்களில் 2,600 பேருக் குக் காணி வழங்கப்பட்டது. 12 கூரைத் தகடுகள் கிடைத் தன. நாங்கள் மண்ணால் வீடு கட்டிக் கொண்டோம். 06 மாதங்கள் வரை உலர் உணவு கிடைத் தது. பிறகு அதுவும் கிடைக்கவில்லை. கல், சிமெந்து கொண்டு வீடு கட்டித்தருவதாக வாக்குறுதி வழங்கி னாலும் இன்னும் வீடு தரவில்லை.

ஊரில் உள்ள பிரதான பிரச்சினையாக இருந்து வருவது, மக்களுக்கு நிரந்தர வாழ்வாதார வழிகள் இல்லை என்பது தான் எனக் கூறும் அய்ராங்கனீ, வயல் நிலம் கொடுக்காததால் பிரச்சினை இன்னும் உக்கிரமடைந்துள்ளது என்றும் தெரிவிக்கின்றார்.

சில சந்தாப்பங்களில் மழையால் அல்லது கடும் வறட்சியால் மேட்டு நிலப் பயிர்ச் செய்கை பாழடைந்து விடுகின்றது. ஆரம்பத்தில் பயிர்ச்செய்கை நாசமடைந்தால் அதற்காக இழப்பீடு வழங்கப்பட்டாலும் பின்னர் அதுவும் நிறுத்தப்பட்டது. சமுர்த்தி நிவாரணமும் இல்லை. குடிதண்ணீரும் இல்லை. 26 வீடுகளுக்கு ஒரு கிணறே உள்ளது. அந்த நீரைக் குடிக்கவும் முடியாது என்று அவர் சொல்கின்றார். ஆம்பிலிபிட்டிய, நுவரெலிய, பொலன்னறுவை, கொத்மலை, அவிசாவளை, கடவத்தை, அம்பாந்தோட்டை ஆகிய பிரதேசங்களில் இருந்து வந்த மக்கள் இங்கு குடியேறியிருக்கின்றனர்.

இன்று வரையில் இவர்களுக்குக் காணி உறுதிகளும் வழங்கப்படவில்லை. அதனால் இந்தக் காணியும் எந்த நேரத்திலும் இல்லாமல் போய்விடுமோ என்ற அச்சத்தில் அவர்கள் இருக்கின்றனர்.

இந்தக் கிராமம் நெடுங்கேணி, வவுனியா, மதவாச்சி ஆகிய மூன்று பிரதேச சபைகளுக்குரிய பகுதியாகும். தமது அலுவல்களை நிறைவேற்றிக்கொள்ளத் தாம் எந்தப் பகுதி அரச அலுவலகத்துக்குப் போகவேண்டும் என்பது அவர்களுக்கிருக்கும் முக்கிய பிரச்சினையாகும்.

போகஸ்வெவ கிரமத்தில் தற்போது 2,771 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இந்தக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவதற்காக பிரதான நகரம் ஒன்றை அமைப்பைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையே காணப்படுகின்றது.

2006ஆம் ஆண்டு டி.ஆர்.விஜேவர்தன விருது விழாவில் சிறந்த விருதைத் வென்ற இந்திர சாப என்ற சிறுகதையை எழுதிய அருண சஞ்சீவவும் இந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர். போகஸ்வெவவில் வாழும் மக்கள் அவர்களது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக வாழ்க்கைப் போராட்டம் நடத்த வேண்டியேற்பட்டிருக்கின்றது என்று அவர் தெரிவிக்கின்றார்.

**எதிர்காலச் சந்ததியினரின் தலைவிதி**

கல்வி நடவடிக்கை முதல் போகஸ்வெவ மக்களது வாழ்க்கையில் ஏராளம் பிரச்சினைகள் உள்ளன. எஸ்.டீ.திலன்சன் சதுன் திலகரத்ன மாணவர் பருவத்தினர் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தனது அனுபவம் ஊடாக இவ்வாறு கூறுகின்றார்:

போகஸ்வெவில் க.பொ.த. (உ.தர) கற்கும் வசதி கொண்ட பாடசாலை இல்லை. வவுனியா நகரில் உயர்தரத்துக்கு இரண்டு சிங்கள மொழி மூல பாடசாலைகள் இருக்கின்றன. மடுகந்த மற்றும் டமுகந்த தேசிய பாடசாலைகள் அவை. நான் கல்வி கற்பது மடுகந்த தேசிய பாடசாலையில். போகஸ்வெவில் இருந்து வவுனியாவுக்கான பஸ் காலையில் 6.30 மணிக்கே வருகின்றது. பாடசாலை போகும்போது 8.00 மணியாகின்றது. அப்போது முதலாவது பாடத்தின் அரைவாசி முடிந்து இருக்கும். வாரத்தில் ஒருநாள் அல்லது இரண்டு நாளைக்கு பஸ் வருவதும் இல்லை. அன்றைக்குப் பாடசாலைக்குப் போகமுடியாது. காலையில் நேர்த்தியாக வெள்ளை உடையுடன் பாடசாலைக்குப் போகத் தயாரானால் வவுனியாவுக்குப் போகும்போது உடைகள் தூசு படிந்து மஞ்சள் நிறமாக மாறியிருக்கும். தலைமயிரும் செம்படை நிறமாகியிருக்கும். தூசு படிந்த பாதையாகையால் கண்களில் எரிச்சல் உண்டாகின்றது. ஆர். சாந்தி குமாரிக்கு தனது வாழ்க்கையின் பெறுமதியான பகுதியை இழக்க நேரிட்டது. இந்தப் பகுதிச் சுகாதார, மருத்துவ சேவையில் நிலவும் குறைபாட்டினால்தான்.

இந்த ஆஸ்பத்திரியில் அடிப்படை வசதிகள் இல்லை. ஒரே ஒரு மருத்துவர் மட்டும் தான் இருக்கின்றார். சுகவீனமுற்ற 4 வயது மகனுக்கு மருந்து எடுத்துக் கொடுத்தேன். அன்றே இரவில் திடீரென்று சுகவீனம் மோசமடைந்தது. மருத்துவமனைக்குப் போனபோது, அங்கே மருத்துவர் இல்லை. அதனால் வேறு வைத்திய சாலைக்கு அனுப்பினர். அங்கும் சரியாகக் கவனிக்கவில்லை. இவனுக்கு பேய் பிடித்ததா? என்று கேட்டனர். சிறது நேரத்தில் எனது மகனின் உயிர் பிரிந்துவிட்டது என்று உணர்ச்சி ததும்ப அவர் கூறினார்.

பாடசாலையிலும் தரமான ஆசிரியர்கள் இல்லை என்பதோடு, அதிகமாகக் கடமையாற்றுவது தொண்டர் ஆசிரியர்களே என்று கூறும் அவர்–சில, பாடங்களை கற்பிக்க ஒரு தொண்டர் ஆசிரியர்கூட இல்லாத நிலை இருப்பதாகவும் குறைப்படுகின்றார்.

தகரக் கூரை வீடுகளில் இருந்து மழை நாள்களில் குழந்தைகளால் படிக்க முடியவில்லை. பாடசாலை சீருடைக்குப் பதிலாக வவுச்சர் தந்தார்கள். வவுச்சருக்கு சீருடை வாங்க இன்னும் ரூபா 200 செலவழித்துக் கொண்டு வவுனியாவுக்குப் போகவேண்டும். அதுவும் அந்த வவுச்சருக்கு சில்க் மெட்டீரியல்தான் வாங்க முடியும். நல்ல புடைவை வாங்க இன்னும் கையால் காசு கொடுக்க வேண்டும். அதற்கு எங்களிடம் காசு இல்லை,

சுற்றும் முற்றும் பார்த்தால், இன்னும் இருக்கும் மக்களது முகங்களில் எத்தனையோ எத்தனையோ குறைபாடுகள் பற்றிய தகவல்கள் வெளியாகக்கூடிய அறிகுறி தெரிகின்றது. போகஸ்வெவுக்கு போன பஸ், மீண்டும் அன்றைய கடைசிப் பயணமாக கிரவல் பாதையில் அனுமதிக்கப்பட்டிருந்த தூசுப் படலத்தை மலைபோல் மேல் எழுப்பியவாறு பலத்த சத்தத்துடன் வவுனியா நோக்கி நகரத்தொடங்கியது. என்னை அறியாமலே அந்த பஸ்ஸுக்கு கையை நீட்டினேன்.

நன்றி:www.thecatamaran.org

"ஆரம்பத்தில் பயிர்ச்செய்கை நாசமடைந்தால் அதற்காக இழப்பீடு வழங்கப்பட்டாலும் பின்னர் அதுவும் நிறுத்தப்பட்டது. சமுர்த்தி நிவாரணமும் இல்லை. குடிதண்ணீரும்இல்லை 26 வீடுகளுக்கு ஒரு கிணறே உள்ளது. அந்த நீரைக் குடிக்கவும் முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் சிறுவர் பகுதியில் 'வர்ணம் தீட்டுவோம் வாங்க' என்ற தலைப்பில் வெளியிடப்படும் சித்திரங்களை, சிறுவர்கள் பலர் ஆர்வத்துடன் வர்ணம் தீட்டி அவற்றை எமக்கு அனுப்பியும் வைத்து வருகின்றனர். அவர்களுக்கு உற்சாக மூட்டும் வகையில் கச்சிதமான விதத்தில் வர்ணம் தீட்டப்படும் சித்திரங்கள் வெள்ளிக்கிழமைகளில் இந்தப் பகுதியில் வெளியிடப்படுகின்றன.



T.காருணியா,
தரம் -1 D
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்.



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....





# வரலாற்றில் இன்றைய தினம்

1765 - அலகாபாத், ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதன்மூலம் அரசியல் மற்றும் அரசமைப்பு ஈடுபாடு ஆவணப்படுத்தப்பட்டதுடன், இந்தியாவில் கம்பனிச் சட்டம் தொடங்கியது.

1831 - பிரான்ஸ் தலையீட்டையடுத்து, அழுத்தம் காரணமாக நெதர்லாந்தின் முதலாம் வில்லியம் பெல்ஜிய மக்களின் புரட்சியை ஒடுக்கும் தனது முயற்சியைக் கைவிட்டார்.

1851 - ஐசாக் சிங்கர் தனது தையல் இயந்திரத்துக்கான காப்புரிமத்தைப் பெற்றுக் கொண்டார்.

1877 - செவ்வாயின் சந்திரனான டெய்-மொஸ் அமெரிக்க விண் இயலாளர் அசாப் ஹேலால் கண்டு பிடிக்கப்பட்டது.

1898 - சமாதான ஒப்பந்தம் ஒன்றையடுத்து, ஸ்பானிஷ்-அமெரிக்கப் போர் முடிவுக்கு வந்தது.

1898 - ஹவாய் குடியரசின் இறைமையை அமெரிக்காவுக்குக் கையளிக்கும்முகமாக, அயலானி மாளிகையில், ஹவாயின் கொடி இறக்கப்பட்டு அமெரிக்காவின் கொடி ஏற்றப்பட்டது.

1944 - நாஸி ஜேர்மன் படைகளால் மேற்கொள்ளப்பட்டு வந்த போலந்து வோலா நகர் மக்கள் மீதான அர்த்தமற்ற படுகொலையில், 40,000 பேர் வரை கொல்லப்பட்ட நிலையில் ஒருவாரகாலப் படுகொலை முடிவுக்கு வந்தது.

1948 - இரண்டு உலகப் போர்களைக் கண்ட USS நவடா என்ற அமெரிக்கப் போர்க்கப்பல், கடற் சேவையை முடித்துக் கொண்டது.

1950 - அமெரிக்கப் போர்க் கைதிகள் வடகொரிய இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டனர்.

1960 - எக்கோ 1A எனும் நாசாவின் முதலாவது தொடர்பாடல் செயற்கைக் கோள் வெற்றிகரமாகத் தொடக்கி வைக்கப்பட்டது.

1964 - நாட்டின் இனக் கொள்கை காரணமாக தென்னாபிரிக்கா ஒலிம்பிக் போட்டியில் பங்கு கொள்ளத் தடை விதிக்கப்பட்டது.

1976 - லெபனான் சிவில் போரில் மிக மோசமான சம்பவமான டெல் அல் சட்டார் படுகொலையில் 1000-3500 வரையான பலஸ்தீனியர் படுகொலை செய்யப்பட்டனர்.

1977 - ஐக்கிய தேசியக் கட்சி பதவிக்கு வந்து ஒரு மாதத்தினுள், சிறுபான்மையினரான தமிழரை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட இனக் கலவரத்தில் 300க்கு மேற்பட்ட தமிழர்கள் சாவு.

1995 - ஆலயம் மீதான தாக்குதலை நிறுத்த அரசு உத்தரவாதம் தர முடியுமா என நல்லை ஆதீன முதல்வர் கேள்வி.

2005 - ரூபவாஹினியின் பிரபல் அறிவிப்பாளர் ரேலங்கியும், அவரது கணவரும் பகல் வேளை பம்பலப்பிட்டியில் சுட்டுக்கொலை.

\- அமைச்சர் கதிர்காமர் சுட்டுக் கொலை; குறி பார்த்துச் சுடுவோர் கைவரிசை. நள்ளிரவு அவரது வீட்டுக்கருகே சம்பவம்.

\- நாடு பிரிக்கப்படுவதனை இலங்கைவாழ்கத்தோலிக்கர்கள் விரும்பவில்லை என கொழும்பு பேராயர் ஒஸ்வால்ட் கோமிஸ் ஆண்டகை தெரிவிப்பு.

2006 - பளையை நோக்கி ஷெல் தாக்குதல்: காயமடைந்த 17 பேர் வைத்தியசாலையில்.

2015 - சீனா தியான்ஜினில் இடம்பெற்ற இரண்டு குண்டு வெடிப்புக்களில் 145 பேர் கொல்லப்பட்டனர்.

## உடைக்குக் கிடைத்த மரியாதை

ஒரு கல்விமான் ஒரு நகரத்துக்குச் சென்றான்.
அங்கே ஒரு செல்வந்தன். வெளியூர்களிலிருந்து வருவோர்க்கு உணவு அளிக்கும் தாராள குணம் உள்ளவன் என்று கேள்விப்பட்டான். ஆகையால், தன்னுடைய பழைய உடையுடனே செல்வந்தனிடம் சென்று காத்திருந்தான்.
அந்தச் செல்வந்தன், அவனை உட்காரவும் சொல்லவில்லை. உணவும் அளிக்கவில்லை. அதனால் கல்விமான் வருந்தத்தோடு வெளியேறி, மறுநாள் சிறப்பான உடைகளை இரவல் வாங்கி அணிந்து கொண்டு மறுபடியும் அங்கே சென்றான்.



அவனைக் கண்டவுடன் செல்வந்தன் மரியாதையுடன் வரவேற்று அருகில் உட்காரச் சொல்லி அவனுக்கு விருந்து அளித்தான். அப்போது அந்தக் கல்விமான் ஒரு கவளத்தை எடுத்துத் தன்னுடைய உடையின் மீது போட்டான்.
அதைக் கண்ட செல்வந்தன் "ஏன் அப்படிச் செய்கிறீர்?" என்று கேட்டான்.
அதற்கு அவன் "நேற்று நான் பழைய உடையுடன் இங்கே வந்தபோது வரவேற்பும் இல்லை; உணவும் கிடைக்கவில்லை. இப்போது நல்ல உடையுடன் வந்ததால் உணவு கிடைத்தது. ஆதலால் இந்த உணவானது என் உடைக்கா; அல்லது எனக்குப் போட்டதா?" என்றான்.

## உலகப் பழமொழிகள்

**துருக்கி**

- ஏழையின் முதல் குழந்தை கடன்.
- பசிக்காதபோதும் உண்பவன் தன் பற்களால் தனக்குச் சவக்குழி பறிக்கிறான்.
- பேசுகிறவனை விட கேட்பவனுக்கு அதிக அறிவு வேண்டும்.
- விளக்கு, அதன் வெளிப்பகுதிக்கு ஒளி தருவதில்லை.
- வாழ்க்கைக் கலைத் தேர்வின் முடிவு வெளியாகும் முன்னே எழுதியவனின் வாழ்க்கை முடிந்து விடுகிறது.
- குழந்தையை அடித்து வளர்க்காதவன், பின்நாளில் தன்னைத் தானே அடித்துக் கொள்வான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலட்சுமி விரதம்

காரை.எம்.பி.அருளானந்தன்



வளம் நிறைந்த வரங்களைத் தரும் பதினாறு லட்சுமிகளின் திருவருளை வரலட்சுமி நாளில் வழிபட்டுப் பெறுவோம்.

**சௌந்தர்ய லட்சுமி**

ஓர் இடத்துக்கு நாம் போகும்போது முதலில் அவர்கள் எமது முகத்தை மட்டுமே பார்க்கிறார்கள். முகவசீகரம் இருந்தால் 'வாருங்கள்' என்று எம்மை வரவேற்பார்கள் இதற்கு சௌந்தர்ய லட்சுமிகரம் என்று பெயர். அந்த பாக்கியம் எமக்கு எப்போதும் இருக்க வேண்டும். இதற்காக முதல் சௌந்தர்ய லட்சுமியை பூஜிக்கின்றோம்.

**சௌபாக்ய லட்சுமி**

எங்கு நன்கு வரவேற்றாலும் எமது சௌபாக்கியங்கள் நல்லமுறையில் இருக்க வேண்டும். அதாவது நல்ல மனைவி நல்ல கணவன், வீடு, வாகனம், நகைகள் இப்படி பல விதங்களில் பெருமை ஏற்பட சௌபாக்ய லட்சுமியின் அருள் வேண்டும்.

**கீர்த்திலட்சுமி**

எவ்வளவு அழகும், செல்வங்களும் இருந்தாலும் எமது பெயர் சமூகத்தில் பல பேருக்கு நல்ல முறையில் தெரியும். அளவு இருப்பது கீர்த்தி என்பதாகும். இந்த பாக்யம் கீர்த்தி லட்சுமி மூலம் கிடைக்கிறது..

**வீரலட்சுமி**

எம்மையும், எம்மனைவி-மக்கள் இவர்களைக் காப்பாற்றிக் கொள்ள எம்மிடம் வீரம் இருக்கவேண்டும். தைரியமும் வேண்டும். இந்த வளத்தை அளிப்பவள் வீரலட்சுமி என்பவள்.

**விஜயலட்சுமி**

மனிதனுக்குஎவ்வளவு செல்வங்கள் மதிப்பு இருந்து வந்தாலும், அவனுக்கு செல்வாக்கு என்பது அவசியம் வேண்டும். எதை எ ்துச் செய்தாலும் அதில் வெற்றியைக் ணை வேண்டும். அதற்கு அருள் புரிபவள் விஜய லட்சுமி.

**சந்தான லட்சுமி**

மனிதனுக்கு அழகு, செல்வம், செல்வாக்கு என பல வளங்கள் இருந்தாலும், அவனுக்கு குழந்தை என்று ஒன்று இருந்தால்தான் அவன் பெருமை அடைகிறான். நல்ல குழந்தையாகவும் இருக்கவேண்டும். இதற்கு அருள்புரிபவள் சந்தான லட்சுமியே யாகும்.

**மேதா லட்சுமி**

சமூகத்தில் பலருடன் பேசிக் கொண்டிருக்கும் போது, ஏதோ ஒரு முக்கிய விடயம் பற்றிப்பேச வேண்டிவரும். அப்போது புத்தி சரிவரவேலை செய்ய வேண்டும். சில மருத்துவர்களுக்கும் சட்டத்தரணிகளுக்கும், மேதை என்பது இருப்பதால்தான், அவர்கள் கீர்த்தி பெற்று இருக்கிறதார்கள். இந்த மேதை என்பது எல்லோருக்கும் வேண்டும். இந்த வளத்தை மேதாலட்சுமியின் அருளால் பெறலாம்.

**வித்யா லட்சுமி**

கல்வி என்பது பல வகையிலுள்ளது. தொழிற் கல்வி, வாழ்க்கைக் கல்வி, அறிவு கல்வி என்பனவாகும். இவை அனைத்தையும் அடைந்தாலும் வித்தை என்பது 'ஸ்ரீவித்யை' என்று கூறப்படும். காமேச்வரியின் பஞ்சதீ மந்திராங்களேயாகும். இந்த மந்திர சக்தியினால் எதையும் சாதிக்க முடியும். அதனை அடைவதற்கு வித்யா லட்சுமியின் அருள் வேண்டும்.

**துஷ்டி லட்சுமி**

மனிதனுக்கு எல்லா வளங்களும் இருக்கும். ஆனால் எவரிடமும் சொல்லிக்கொள்ள முடியாதபடி மனவேதனை இருக்கும். அந்த மனவேதனையை அகற்றி உள்ளத்தில் எமக்கு ஆனந்தத்தை அளிப்பவள் துஷ்டி லட்சுமி.

**புஷ்டி லட்சுமி**

வெளி உலகில் நாம் சஞ்சரிக்கும்போது, எம்முடைய சரீரத்தைக்கண்டு எவரும் அருவருப்புக் கொள்ளாமலும் இருக்க வேண்டும். எமது சரீரமும் புஷ்டியாக இருக்க வேண்டும். மேலும் பல வளங்கள் அனைத்தையும் பரிபூரணமாக அளித்து நல்ல புஷ்டியைத்தருபவள் புஷ்டி லட்சுமியே.

**ஞானலட்சுமி**

வாழ்க்கையில் எல்லா சுகங்களையும் அனுபவித்தாலும் அவ்வளவு சுகங்களையும் விட நாம் ஆசைப்பட்ட பொருள்கள் யாவும் ஒரு கால கட்டத்தில் எமக்கு இருந்தால் நாம் அதற்கு பயப்படவேண்டிய அவசியமில்லை. அந்த அருளைஎமக்குஅளிப்பவள்ஞானலட்சுமியே.

**சக்திலட்சுமி**

கடவுள் அருளாலும், மகாலட்சுமியின் அருளாலும் எல்லாவித வளங்களை நாம் பெற்றிருந்தாலும் எம் உடலிலும் மனதிலும் சக்தி வேண்டும். அதேமாதிரி எல்லா காரியங்களையும் சாதிக்க வேண்டுமானால் மனோ பலம் அவசியம் தேவை. இதனை சக்தி லட்சுமியின் அருளால் அடையலாம்.

**சாந்தி லட்சுமி**

எவ்வளவு செல்வம், செல்வாக்கு எல்லாம் இருந்தாலும் ஏதோ ஒன்று மனதை உறுத்திக் கொண்டு எமது அமைதியை கெடுத்துவரும். அத்தகைய தொந்தரவு எதுவும் இல்லாமல் இருக்க சாந்தி (அமைதி) அவசியம் வேண்டும். இந்த அருளை நாமெல்லாம் சாந்தி லட்சுமியின் மூலம் அடையலாம்.

**சாம்ராஜ்ய லட்சுமி**

மனிதனுக்கு பெருமை என்பது மிக அவசியம். வீட்டில் குழந்தைகள் எம்மை மதிக்க வேண்டும். மனைவியும் பெருமை கொள்ள வேண்டும். அப்படியே நல்ல மனைவியை அடைந்ததற்கு கணவனும் பெருமை கொள்ள வேண்டும். இந்த வரத்தை அளிப்பவள் சாம்ராஜ்ய லட்சுமியே.

**ஆரோக்ய லட்சுமி**

எல்லா பெருமைகளும் இருக்கின்றன. நல்ல ஆகாரம் சாப்பிட முடியாமல் வயிற்றுவலி இருந்தால், என்ன பிரயோசனம். அந்த வியாதி, இந்த வியாதி என்று ஏற்படாமல் ஆரோக்கியமாக இருந்தால்தான், இந்த பதினான்கு லட்சுமியின் அருளைப் பெறுவதற்கு அர்த்தம் உண்டு. அந்த ஆரோக்கியத்தை அடைவதற்கு ஆரோக்ய லட்சுமியின் அருள் வேண்டும்.

**ஆதி மகாலட்சுமி**

சந்திரனுக்கு 16 கலைகள் உண்டு. அவனுக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொருகலை விருத்தியாகிறது. பௌர்ணமியன்று வெளியில் பிரகாசமாக இருக்கிறான். ஆனால் அமாவாசையன்று தனது பதினாறு கலைகளுடன் சூரியனிடம் அடக்கமாகிறான். இதை 'அமாவாசை தினம்' என்று கூறுகின்றோம். ஆதிமகாலட்சுமிக்கு அமாவாசையன்று பூஜை செய்வது மிக விசேஷம். ஆதிமகாலட்சுமி முக்கோணத்தின் நடுவில் காமேச்வரி என்ற திவ்ய நாமத்துடன் வீற்றிருந்து முக்கோண வடிவிலுள்ள யந்திரத்தில் மூன்று பக்கங்களிலும் ஐந்து லட்சுமிகளால் சூழப்பட்டு, நடுவில் ஆனந்தமாக வீற்றிருக்கிறாள். இவளது அம்சமே மற்றை பதினைந்து லட்சுமிகளாகும். இவளை பூசிக்க எல்லாவரங்களும் கிட்டும். எனவே இன்றைய வரங்களை தரும் வரலட்சுமி நாளில் 16 வகை சிறப்புக்களைத் தரும் லட்சுமியை வணங்கி வாழ்வாங்கு வாழ்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது தகுமோ இது முறையோ

வடக்கு மாகாண அமைச்சர்களை விசாரணை செய்வதற்கு, மூவர் கொண்ட குழுவை நியமிக்கவும், அவர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் மேற்கொண்டு தான் நடவடிக்கை எடுக்கவும் அனுமதி கோரி வடக்கு மாகாண சபையில், முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பிரேரணை சமர்ப்பித்திருந்தார். இந்தப் பிரேரணை மீதான விவாதம் முடிவுறாத நிலையில் சபை ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றது.

முதலமைச்சரின் பிரேரணைக்குச் சபையில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருந்தது. முதலமைச்சர் ஓர் அமைச்சர் என்ற அடிப்படையில், அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு, அவர் எவ்வாறு குழுவை நியமிக்க முடியும் என்பதும், முதலமைச்சர் என்ற அமைச்சருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு அந்தக் குழு பரிந்துரைத்தால் எவ்வாறு அது முன்னெடுக்கப்படும் என்பதன் அடிப்படையில் இந்த எதிர்ப்பு வெளியிடப்பட்டிருந்தது.

அமைச்சர் குழாமை விசாரணை செய்ய வேண்டும் என்ற விடயத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படவில்லை. மாறாக இந்தப் பிரேரணையை அமைச்சர் குழாமில் உள்ள முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் சமர்ப்பித்ததற்கும், வெளிநபர்களைக் கொண்டு விசாரணை நடத்தக் கோரியமைக்குமே எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

தமிழ் மக்களுக்கு எதிராக இராணுவம் குற்றங்களை இழைத்தது. இது தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தபோது, பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் இலங்கை அரசின் நீதிப் பொறிமுறை விசாரணை செய்யக் கூடாது என்று, காரணத்தை முன்வைத்தனர். ஏனெனில் இலங்கை அரசின் அங்கமாக இருக்கின்ற இராணுவத்தினர் மீதான குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசின் இன்னொரு அங்கமாக இருக்கின்ற நீதித்துறை விசாரணை செய்கின்ற போது அதனூடாக நீதி கிடைக்கப்பெறாது என்ற ஐயத்திலேயே பன்னாட்டு விசாரணையைக் கோரினர்.

ஆனால், மகிந்த ராஜபக்சவாகட்டும், மைத்திரியாகட்டும் எல்லோரும் பன்னாட்டு விசாரணையை நிராகரித்து, உள்ளக விசாரணைப் பொறிமுறையை வலியுறுத்துகின்றனர். வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் இதனை எதிர்க்கின்றார். குற்றம் செய்தவர்களை அவர்களே விசாரிப்பது பொருத்தமற்றது என்ற வாதத்தை முன்னிறுத்தி எதிர்க்கின்றார்.

ஆனால், வடக்கு மாகாண அமைச்சர்கள் விடயத்தில் மாத்திரம் நேர் எதிர்மாறான நிலைப்பாட்டை எடுக்கின்றார். அதாவது அமைச்சர் என்ற அடிப்படையில் க.வி.விக்னேஸ்வரனும் விசாரணைக்கு உட்படப்போகின்றவர். அப்படியிருக்கையில் அவரே விசாரணையாளர்களைத் தீர்மானிப்பதும், அவர்களின் பரிந்துரைகளைத் தானே நடைமுறைப்படுத்தப் போகின்றேன் என்பதும் எவ்வளவு நகைப்புக்கிடமானது.

தான் ஒருவன் தனது வழக்கில் நீதிபதியாக இருக்க முடியாது என்பது இயற்கை நீதி. இங்கே இயற்கை நீதியை நீதியரசராக இருந்த விக்னேஸ்வரன் மீற முற்படுவது அவரின் கடந்த கால அரச சேவை வாழ்க்கை மீதான சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

அதாவது, அமைச்சர் விக்னேஸ்வரன் இந்தப் பிரேரணையை முன்மொழிந்திருக்கின்றார். அவரேதான் விசாரணையாளர்களை நியமிக்கப் போகின்றார். அந்த விசாரணையாளர்கள் விக்னேஸ்வரனுக்குத்தான் பரிந்துரைக்கப் போகின்றனர். அமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க விசாரணையாளர்கள் பரிந்துரைத்தால், அதனை அவர் எப்படி நடைமுறைப் படுத்துவார்.




இவற்றுக்கு மேலாக விக்னேஸ்வரன் மீதான நம்பிக்கையீனம் சபையில் வெளிப்படுத்தப்பட்டது. அமைச்சர் ஐங்கரநேசனுக்கு எதிராகப் பல்வேறு ஊழல் - மோசடிக் குற்றச்சாட்டுக்கள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டன. இந்த ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும் என்று சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மறுநாள் அமைச்சர் ஐங்கரநேசனுக்கு ஆதரவாகப் பொது நிகழ்வில் முதலமைச்சர் க.விக்னேஸ்வரன் வக்காளத்து வாங்கியிருந்தார்.

இது போதாது என்று, வடக்கு மாகாண சபையின் அடுத்த அமர்வில், ஐங்கரநேசனுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட பிரேரணையை நீர்த்துப் போவதற்கு, ஒரு பிரேரணையை முதலமைச்சர் சமர்ப்பித்திருந்தார். இவ்வாறு அமைச்சர் குழாமில் உள்ள ஒரு அமைச்சருக்காக செயற்பட்ட க.வி.விக்னேஸ்வரனிடமிருந்து, அமைச்சர் குழாம் மீதான விசாரணையில் இருந்து நீதியை எதிர்பார்க்க முடியுமா?

அமைச்சர் குழாம் மீதான விசாரணையில் குறித்த அமைச்சருக்குப் பக்கச் சார்பாக விக்னேஸ்வரன் செயற்பட மாட்டார் என்பதற்கு என்ன உத்தரவாதம்? எனவே, மேற்படி பிரேரணையை முதலமைச்சர் முன்மொழிந்ததை மீளப் பெற வேண்டும். ஆனால் அமைச்சர் குழாத்தினருக்கு எதிரான விசாரணை மாகாணசபை உறுப்பினர்களை உள்ளடக்கிய தெரிவுக் குழுவினால் நடத்தப்பட வேண்டும்.

பெயார் அன் லவ்லி வாங்கி; 7 நாள் பூசினால் கலராகிடலாம்!



அப்படின்னா மறுபடி எதுக்கு பெயார் அன் லவ்லி வாங்கிறாங்க. ஏமாற்று பேர் வழிங்கடா, முடியலடா...

இந்தக் காலத்துப் பசங்க பள்ளிக்கூடத்தில 100 மீற்றர், 200 மீற்றர் எல்லாம் எங்கம்மா ஓடுறாங்க? ரீச்சரைக் கூட்டிட்டுத் தான் ஓடுறாங்க. அப்புறம் எப்படிம்மா பதக்கம் வாங்கிறது...



டி.ஜி.பி. அலுவலகத்தில் காவலர்களின் அணி வகுப்பு ஒத்திகையின் போது செல்போன்கள் திருட்டு.



நீங்கள் மட்டும் தான் ஒத்திகை பார்ப்பீங்களா, நாங்களும் பார்ப்போம் தெய்வமே

**மதுரக்காரி** @hanitha3

நம் பெற்றோருக்கு வயதாவதைப் பார்ப்பதற்கே ஒரு தைரியம் வேண்டும்.

84 49

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பேச்சில் இனிமை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். குடும்பத்தின் முக்கிய தேவையை நிறைவேற்றுவீர்கள். பணியாளர்கள், பாராட்டும் பரிசும் கிடைக்கப் பெறுவர்.

**இடபம்:** பொறுப்புடன் செயற்படுவீர்கள். நல்லவர்களின் நட்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், வருமானம் அதிகரிக்கும். நீண்ட நாள் பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவர்.

**மிதுனம்:** சிரமங்களை பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில், குறுக்கீடுகளை சரிசெய்ய முயல்வீர்கள். இலாபம் ஓரளவே இருக்கும். பெண்கள், செலவுக்காகக் கடன் வாங்க நேரிடலாம். வழிபாட்டில் ஈடுபடுவது நல்லது.

**கடகம்:** கடந்தகால உழைப்பின் பயனைப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், பணிச் சுமை ஏற்பட்டாலும் வருமானம் குறையாது. நண்பரின் உதவி கிடைக்கும். வாகனப் பயணத்தில் மித வேகம் பின்பற்றவும்.

**சிங்கம்:** பேச்சில் நேர்மை எண்ணம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் எதிர்பார்த்தபடி கிடைக்கும். இயன்ற அளவில், தான, தர்மம் செய்வீர்கள். பெண்கள், ஆடை ஆபரணம் வாங்குவர்.

**கன்னி:** நற்செயலில் ஈடுபட்டு நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். உடல் நலனில் அக்கறை தேவை. வெளியூர்ப் பயணத் திட்டத்தில், திடீர் மாறுதல் உண்டாகும்.

**துலாம்:** அன்றாடச் செயல்களில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள், சலுகை கிடைக்கப் பெறுவர். வெளியூரிலிருந்து எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும்.

**விருச்சிகம்:** உங்களின் நல்ல செயல்களை, சிலர் பரிகாசம் செய்யலாம். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள், ஆடம்பர எண்ணத்தைத் தவிர்க்கவும்.

**தனுசு:** திகைப்புத் தந்த பணியைக்கூட எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**மகரம்:** சமூகத்தில் நன்மதிப்பு உயரும். தொழில், வியாபாரத்தில், வருமானம் திருப்தியளிக்கும். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கிக் கொடுப்பீர்கள். நண்பர்களுடன், விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**கும்பம்:** சோம்பலைத் தவிர்ப்பது நல்லது. கூடுதல் உழைப்பு, தொழில், வியாபாரம், வளர்ச்சி பெற உதவும். இலாபம் சுமாராக இருக்கும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை. மாணவர்கள் படிப்பில் ஆர்வத்துடன் ஈடுபடுவர்.

**மீனம்:** செயலில் கூடுதல் கவனம் செலுத்தவும். தொழில், வியாபாரத்தில், இருக்கிற அனுகூலத்தைப் பாதுகாப்பது நல்லது. வருமானம் சுமாராக இருக்கும். உடல் நலனில் அக்கறை தேவை.

“உங்க அப்பா பெரிய ஒலிம்பிக்ஸ் ரசிகரா இருக்கலாம்... அதுக்காக தங்கத்திற்குப் பதிலா வெண்கல நகை போட்டா என்ன அர்த்தம்”

“நான் மூன்றாவதாப் பிறந்த பொண்ணுங்க, அதான் அப்படி”




# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 3 | | | 8 | |
| | 2 | 5 | 6 | | | | | 4 |
| 6 | | | 9 | 7 | | | | |
| | | 3 | | | | | 6 | |
| 7 | | 6 | | | | 1 | | 2 |
| | 1 | | | | | 4 | | |
| | | | | 9 | 6 | | | 1 |
| 1 | | | | | 7 | 8 | 2 | |
| | 4 | | | 2 | | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 1 | 2 | 7 | 6 | 8 | 5 | 3 | 4 |
| 6 | 3 | 5 | 4 | 9 | 1 | 7 | 8 | 2 |
| 7 | 4 | 8 | 3 | 2 | 5 | 1 | 6 | 9 |
| 2 | 6 | 4 | 8 | 1 | 9 | 3 | 7 | 5 |
| 5 | 9 | 1 | 2 | 7 | 3 | 8 | 4 | 6 |
| 8 | 7 | 3 | 5 | 4 | 6 | 9 | 2 | 1 |
| 3 | 8 | 6 | 9 | 5 | 4 | 2 | 1 | 7 |
| 4 | 5 | 7 | 1 | 3 | 2 | 6 | 9 | 8 |
| 1 | 2 | 9 | 6 | 8 | 7 | 4 | 5 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# விஜய் மட்டும் போதும்


இளைய தளபதி விஜய்க்கு லட்சக்கணக்கான ரசிகர்கள் உள்ளனர். அதிலும் இவருக்கு கேரளாவில் எந்தத் தமிழ் நடிகருக்கும் இல்லாத அளவுக்கு ரசிகர்கள் இருக்கின்றனர்.

இந்த நிலையில் கேரளாவில் பாலக்காட்டில் உள்ள அட்டப்பாடி என்ற பகுதியில் உள்ள கிராம மக்கள் தீவிர விஜய் ரசிகர்களாம். இவர்கள் யாருமே பள்ளிப்படிப்பை விரும்பவில்லையாம். மேலும், அரசின் எந்த ஒரு உதவியையும் வேண்டாம் என்று தொடர்ந்து மறுத்து வருகிறார்களாம்.

இவர்களின் ஒரே பொழுதுபோக்கு விஜய் படம் பார்ப்பது மட்டும் தானாம். அதனால், அந்த ஊர் உயரதிகாரிகள் விஜய்யை அழைத்து வந்து, கல்வி எவ்வளவு முக்கியம் என்பதை கூற வைக்கலாம் என்று யோசித்து வருகிறார்களாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கரட் அல்வா

## செய்முறை

முதலில் கரட்டின் தோலினை நன்றாகச் சீவி வைத்துக்கொள்ளவேண்டும். பின்னர் நன்றாகத் துருவி வைத்துக்கொண்டு, பாலில் வேகவிட வேண்டும். நன்றாகக் குழைய வெந்து கெட்டியான உடன், அதில் சீனி சேர்த்துக் கிளற வேண்டும். அது அல்வாப் பதத்திற்கு வரும் வரை கிளற வேண்டும். பின்னர் முந்திரியை நெய்யில் வறுத்துச் சேர்க்க வேண்டும். அதனுடன், ஏலக்காய்த் தூள் சேர்க்க வேண்டும். கலருக்கு ஏற்ப கேசரிப் பவுடரை தேவையான அளவு உபயோகிக்கலாம். இறக்குவதற்கு முன் நெய் சேர்க்க வேண்டும்.

இப்பொழுது சுவையான, சத்தான கரட் அல்வா தயார். இதற்கு அரை மணி நேரம் போதுமானது.

## தேவையான பொருள்கள்

கரட் - 1/4 கிலோ
சீனி - 300 கிராம்
பால் - 1/4 லீறறர்
நெய் - 50 கிராம்
முந்திரிப் பருப்பு - 10
ஏலக்காய்த் தூள் - ஒரு கரண்டி
கேசரி பவுடர் - கலருக்கு ஏற்ப




# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 900 | 700 | 500 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 300 | 300 |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 800 | 700 | 800 |
| பாரை | 550 | 600 | 500 | 800 | 700 | 600 | 500 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 1000 | – | 600 |
| சீலா | 300 | 400 | 400 | 600 | 400 | 400 | 400 |
| விளை | 658 | 500 | 400 | 600 | 500 | 450 | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 500 | 400 | 300 | 400 |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 400 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | 500 | 600 | – | – |
| ஒரா | 400 | 350 | – | – | 450 | – | – |
| திரளி | 300 | 250 | 200 | 150 | 300 | 200 | 200 |
| நகரை | 250 | 350 | – | 250 | 400 | – | 300 |
| சூடை | 150 | 250 | 100 | 200 | 200 | 100 | 200 |
| ஒட்டி | 300 | 250 | 150 | – | 300 | 400 | 300 |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 400 | 300 | 300 |
| மதனம் | 150 | 200 | 180 | 400 | 350 | – | – |
| கொய் | 100 | 150 | 60 | 70 | 100 | 200 | 100 |
| பாலை | 400 | 200 | 250 | 400 | 500 | 400 | 400 |
| வாழை | 100 | 150 | 200 | 400 | 400 | 300 | 300 |


## வீட்டுக் குறிப்பு

- மின்சாரம் தடைப்பட்டிருக்கும் போது, மெழுகுவர்த்தியை ஏற்றுவோம். மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தை அதிகரிக்க மெழுகுவர்த்திக்குப் பின்புறம் முகம் பார்க்கும் கண்ணாடியை வைக்கவும். வெளிச்சம் இருமடங்காகக் கிடைக்கும்.
- கத்தி, அரிவாள் போன்ற இரும்புப் பொருள்களில் துரு பிடித்திருந்தால், ஓர் எலுமிச்சம் பழத்தை இரண்டாக வெட்டி இவற்றில் தடவினால் துரு மறையும். அல்லது உருளைக் கிழங்கு ஒன்றை வெட்டித் துருவின் மேல் தடவினாலும் துரு மறையும்.
- சமையல் அறையில் எண்ணெய் பசையுள்ள இடத்தில் சுண்ணாம்புடன் மண்ணெண்ணெய் கலந்து அடிக்கலாம்.
- ஆணி அடிக்கும் போது, நுனியில் தேங்காய் எண்ணெய் தடவினால் சுவரில் சுலபமாக இறங்கும்
- புது வீட்டில் பெயிண்ட் அடித்த மணம் இருந்தால், ஒரு வாளி நிறைய தண்ணீரை நிரப்பி, அறைகளில் வையுங்கள் வாடை போய் விடும்.



## நாளை

ஆடி-29
சனிக்கிழமை -13.08.2016
திதி: தசமி பி.ப.03.17
நட்சத்திரம்: கேட்டை மு.இ.10.00
ராகுகாலம்: 09.05-10.35 வரை
சுபநேரம்: 03.05-04.35 வரை



# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 40 | 60 | 120 | 40 | 40 | 30 | 20 |
| கத்தரி | 80 | 60 | 100 | 80 | 60 | 60 | 90 | 40 |
| கரட் | 120 | 120 | 120 | 160 | 100–120 | 120 | 110 | 120 |
| மரவள்ளி | 100 | 90 | 80 | 80 | 80 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 50 | 40 | 40 | 30 | 50 | 10 | 100 | 40 |
| பாகல் | 120 | 100 | 200 | 20 | 120 | 80 | 240 | 100 |
| கருணைக்கிழங்கு | 150 | 100 | 120 | – | 100 | 120 | 120 | 90 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 90 | 300 | 80 | 80 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 60 | 80 | 80 | 80 | 70 | 80 | 90 | 60 |
| பூசணி | 60 | 60 | 60 | 60 | 60 | 80 | 70 | 90 |
| தக்காளி | 40 | 60 | 50 | 60 | 50 | 60 | 120 | 30 |
| வாழைக்காய் | 100 | 80 | 80 | 120 | 80 | 40 | 70 | 60 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 15–20 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 35 | 20 | 20 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 300 | 150 | 250 | 180 | 240–260 | 200 | 400 | 300 |
| புடோல் | 40 | 60 | 50 | 60 | 40–60 | 40 | 70 | 50 |
| கோவா | 120 | 100 | 160 | 140 | 100–120 | 160 | 90 | 100 |
| வெண்டி | 40 | 60 | .50 | 60 | 40–60 | 80 | 70 | 30 |
| போஞ்சி | 200 | 160 | 200 | 180 | 120 | 200 | 130 | 160 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 120 | 120 | 120 | 90 | 120 |
| தேங்காய் | 40 | 20 | 40 | 25–30 | 20–30 | 40 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 100 | 100 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 100 | 120 | 100 | 100 | 120 | 120 | 120 | 80 |
| வல்லாரை | 150 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 150 | 160 | 200 | 160 | 240 | 240 | 200 | 130 |
| இராசவள்ளி | 160 | 350 | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 150 | 120 | 120 | 80 | 120 | 120 | 200 | 100 |

## இது புதுசு

நவீன சுவர் மாட்டிகள் அறிமுகமாகியுள்ளன. அலங்காரப் பொருள்களை சுவர்ப்பகுதியில் வைக்கக் கூடிய வகையில் இந்த மாட்டிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட 2 அடி நீள, அகலத்தில் காணப்படும் இவை, ஆயிரத்து 500 ரூபாவில் இருந்து 2 அயிரத்து 500 ரூபா வரை விற்பனை செய்யப் படுகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சூழலுக்குப் பாதுகாப்பான முன்பள்ளி ஹெல்சிம் லங்காவினால் அமைப்பு

ஏழாலை


அஹுங்கம, திக்கும்புர பிரதேசத்தில் ஹொல்சிம் லங்கா நிறுவனத்தினால், அமைக்கப்பட்ட முதலாவது சூழலுக்கு பாதுகாப்பான முன்பள்ளி, 2016 ஜுன் 22ஆம் திகதி பிரதேசவாசிகளிடம் கையளிக்கப்பட்டது. இந்த அங்குரார்ப்பண நிகழ்வின்போது, இலங்கைக் கட்டடக் கலைஞர்கள் நிறுவனத்தினால் சூழலுக்குப் பாதுகாப்பான கட்டடம் எனும் சான்றிதழும் வழங்கப்பட்டது. பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் சந்திம வீரக்கொடி, இலங்கைக் கட்டடக் கலைஞர்கள் நிறுவனத்தின் தலைவர் கலாநிதி. ரொஹான் கருணாரட்ன மற்றும் ஹொல்சிம் லங்கா முகாமைத்துவத்தைச் சேர்ந்தவர்கள் இந்த நிகழ்வில் பங்குகொண்டனர்.

இலங்கையின் முதலாவது சூழலுக்குப் பாதுகாப்பான முன்பள்ளியின் நிர்மாணச் செயற்பாடுகளில் பங்கேற்பதற்கு எமக்கு வாய்ப்புக் கிடைத்ததையிட்டு நாம் மிகவும் பெருமையடைகிறோம். ஏனைய சகல சமூகக் கட்டடங்களையும் கவர்வதற்கு இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த படிமுறையாக அமைந்துள்ளதாக நாம் கருதுகிறோம் என ஹொல்சிம் லங்கா நிறுவனத்தின் வெளிவிவகார மற்றும் சமூக பொறுப்புணர்வு செயற்பாடுகளுக்கான முகாமையாளர் கிறிஷாந்த கமகே தெரிவித்தார். மாகாண சபையினால் வழங்கப்பட்டிருந்த காணியில் இந்த முன்பள்ளி அமைக்கப்பட்டுள்ளது அத்துடன், இந்தக் கட்டடம் செங்கற்களால் நிர்மாணிக்கப்பட்டதுடன், அவை முன்பள்ளிக்கு அருகில் அமைந்துள்ள பிரதேசங்களிலிருந்து பெறப்பட்டிருந்தன. இந்தக் கட்டடத்தின் மர வேலைகள் கிராமத்திலிருந்து பெறப்பட்ட மரங்களிலிருந்து பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், கூரை சூழலுக்கு பாதுகாப்பான சின்க் அலுமினியம் தகடுகள் கொண்டு 100 சதவீதம் அஸ்பெஸ் டஸ் இன்றித் தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (தி)

## சோளம் இறக்குமதிக்கு அனுமதி

கோழி இறைச்சியின் விலையில் பேணும் கட்டுப்பாட்டைப் நோக்கில், விலங்கு உணவுக்காக மாத்திரம் சோளத்தை இறக்குமதி செய்ய வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உபகுழு அனுமதிவழங்கவுள்ளது.நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் தலைமையில் கூடிய குறித்த அமைச்சரவை உபகுழு, இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டது. இதற்கமைய, தற்போது இடைத் தரகர்களிடம் இருந்து சோளத்தை கிலோ ஒன்று 52 ரூபா 50 சதத்துக்குக் கொள்வனவு செய்து, அதனை விலங்கு உணவு உற்பத்தியாளர்களுக்கு 45 ரூபா என்ற நிவாரண விலைக்கு வழங்கப்படுகிறது.

சதொச ஊடாக இந்தத் திட்டம் செயற்படுத்தப்படும் அதேநேரம், மேலதிக செலவுகளை நிதி அமைச்சு ஏற்றுக் கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டது. (து)



## இலங்கை சூரை மீன்களுக்கு பன்னாட்டு சந்தையில் கிராக்கி

இலங்கை சூரை மீன்களுக்குச் பன்னாட்டுச் சந்தையில் கிராக்கி நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டது. மீன்பிடித்துறை அமைச்சு இதனைத் தெரிவித்தது.

இலங்கையின் ஒரு கிலோ சூரை மீன் பன்னாட்டுச் சந்தையில் 20 ஆயிரம் ரூபா வரை விற்பனையாவதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், சூரை மீன்பிடித்துறையை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருப்பதாகவும் மீன்பிடித்துறை அமைச்சு தெரிவித்தது. (து)

## ஏற்றுமதி மூலம் 2400 மில்லியன் ரூபா வருமானமாக கிடைத்தது

கடந்த வருடம் கடலுணவு ஏற்றுமதி மூலம் 2400 மில்லியன் ரூபா வருமானமாக ஈட்டப்பட்டதாகக் கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் வைத்து அவர் இதனைத் தெரிவித்தார். இலங்கையில் கடற்றொழில் உற்பத்தியானது மேம்படுத்தப்படவேண்டும். அதன்மூலம் அந்நியச் செலாவணியை அதிகரிக்க முடியும் எனவும் அமைச்சர் மகிந்த அமரவீர குறிப்பிட்டார். (து)

CSE COLOMBO STOCK EXCHANGE

பங்குச் சந்தை தகவல்கள்

| 11/8/2016 | | | |
|---|---|---|---|
| www.cse.lk | | | |
| [illegible] | | இன்று | நேற்று |
| ASPI | -28.98 | 6,514.77 | 6,543.75 |
| S&P SL20 | -10.99 | 3,554.64 | 3,565.63 |
| வியாபாரப்புரள்வு | | 523,556,640 | 751,568,384 |
| உள்நாடு- கொள்வனவு | | 376,305,632 | 458,743,200 |
| விற்பனை | | 363,224,096 | 559,169,344 |
| வெளிநாடு- கொள்வனவு | | 147,250,992 | 292,825,216 |
| விற்பனை | | 160,332,528 | 192,399,040 |



| அதிகூடிய பங்குபரிமாற்றம் | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|
| எக்ஸ்போ லங்கா | EXPO.N | 7 | 11,565,678 | 81,025,616 |
| சைவ்றோன் லூப்ரிக்கன் | LLUB.N | 163 | 321,712 | 52,439,818 |
| டிஸ்டிலரீஸ் | DIST.N | 268 | 150,735 | 40,247,615 |
| ஓவர்சீஸ் ரியாலிடி | OSEA.N | 23 | 1,228,640 | 28,257,912 |
| அலுமக்ஸ் | ALUM.N | 19.9 | 1,341,420 | 26,744,939 |
| த்ரீ ஏக்கர் பாரம் | TAFL.N | 141 | 154,737 | 21,476,080 |
| சிலோன் டொபாக்கோ | CTC.N | 900 | 21,468 | 19,308,635 |
| சிலோன் கோல்டு ஸ்டோர்ஸ் | CCS.N | 644.9 | 25,963 | 16,748,272 |
| லங்கா ஐ.ஓ.சி. | LIOC.N | 37.4 | 449,538 | 16,705,250 |
| எ சி ல் பிளாஸ்டிக் | APLA.N | 228 | 64,812 | 14,801,435 |

அறிவித்தல்கள் - பங்குலாபம்
சிலோன் டுபாக்கோ கம்பனி - பங்கு ஒன்றிற்கு Rs. 16.70
ஆசியா சியாக கொம்மடிடீஸ் [illegible]
அலயன்ஸ் பைனான்ஸ் [illegible]
கருத்தரங்கு - பங்குச்சந்தையின் முதலீட்டு வியாபாரிகள்
12.08.2016 , 3.00 PM - 4.00 PM

| சந்தைக் குறிகாட்டிகள் | |
|---|---|
| கம்பனிகள் | 294 |
| [illegible] | 229 |
| [illegible] | 13.4 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்குலாப விளைவு | 3 |

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை - யாழ் கிளை 147-2/3, K.K.S Road Jaffna - 212221455

# நுட்பம்



## சீனாவின் வேகமான ரயில்

மணிக்கு 380 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்கும் விதத்திலான உலகின் அதிவேக ரயில் சேவையை சீனா அடுத்த மாதம் அறிமுகம் செய்ய உள்ளது. மத்திய சீனாவின் ஹெனான் மாகாணத்துக்கும், கிழக்கு சீனாவில்உள்ள ஜியாங்சு மாகாணத்துக்கும் இடையே இந்த அதிவேக ரயில் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த ரயில், தனது சோதனை ஓட்டத்தின் போது அதிகபட்ச வேகமான மணிக்கு 400 கிலோ மீற்றர் என்ற வேக இலக்கை எட்டியது என்று சீன அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த புதிய சேவையின் மூலம் இருமுனைகளுக்கும் இடையிலான பயணம் 80 நிமிடங்களாகக் குறைகின்றது. இதற்கு முன்னர் குறித்த பயணம் இரண்டரை மணிநேரமாக இருந்தது.


அதிவேக ரயில்களின் இயக்கத்துக்கு என சுமார் 16 ஆயிரம் கிலோமீற்றர் நீளம் கொண்ட தண்டவாள வழிதடத்தை சீனா அமைத்துள்ளது. இந்தப் பாதை வழியாக மேற்கொள்ளப்பட்ட ரயில் போக்குவரத்தின் மூலம் கடந்த வருடத்தில் மாத்திரம் சீனாவுக்கு 100 கோடி டொலர்கள் வருமானம் கிடைத்துள்ளமை முக்கிய விடயமாகும். இந்த வகையிலான அதிவேக ரயில்களை ஏனைய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து, அங்கு அறிமுகம் செய்வதற்கும் சீனா திட்டமிட்டுள்ளது.

## உயர் உணர் பிரிதிறன் கொண்ட செயற்கைக்கோள் விண்ணுக்கு

உயர் உணர் பிரிதிறன் கொண்ட படங்களை எடுக்கும் செயற்கை இடைக் கண் ராடர் கொண்ட புதிய செயற்கைக்கோள் ஒன்றை சீனா விண்ணுக்கு ஏவியுள்ளது. இந்த செயற்கைக்கோள் ஷாங்சி மாகாணத்தில் உள்ள தையூன் செயற்கைக்கோள் ஏவு தளத்தில் இருந்து நேற்றுச் செலுத்தப்பட்டுள்ளது. இந்த செயற்கைக்கோள், லோங் மார்ச் 4 சீ ரொக்கெட்டில் பொருத்தப்பட்டு விண்ணுக்கு ஏவப்பட்டுள்ளது. இது பீஜிங் நேரப்படி காலை 06.55 க்கு தனது பயணத்தை ஆரம்பித்தது- என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

சீன வான்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கழகத்தின் லோங் மார்ச் 4சீ ரொக்கெட்டின் தலைமை இயக்குநர் தெரிவித்ததாவது- எமது அனைத்து செயற்பாடுகளும் சிறந்த முறையில் இருந்தன. இந்த ரொக்கெட் சிறந்த முறையில் இயங்குகின்றது. இந்த ரொக்கெட்டில் பொருத்தப்பட்டுள்ள மூன்று இயந்திரங்கள் மற்றும் அதன் கட்டுப்பாட்டு செயற்பாடுகளில் இம்முறை மிகப் பெரிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவை எமது எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப உள்ளன- என்றார்.

இந்த செயற்கைக்கோள் அனைத்து விதவானிலை நிலவரம், அதன் 24 மணிநேர கண்காணிப்பு மற்றும் பேரழிவு எச்சரிக்கை, வானிலை முன்னறிவிப்பு, நீர் வள மதிப்பீடுகள், மற்றும் கடலோர உரிமைகள் பாதுகாப்பு போன்ற செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திரத்தின்

செயலணியின் ஏற்பாட்டில் வேலணைப் பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.இதில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

இதன்போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா தெரிவித்ததாவது:

போர் இடம்பெற்ற வடக்கு கிழக்கில் பெரியளவில் தேவைகள் உள்ளன. அதில் ஒரு சிறு தேவையை பூர்த்தி செய்த திருப்தி இன்று கிடைத்துள்ளது.

நாட்டில் சிங்கள மக்களுக்கு கிடைக்கும் சகல உரிமைகளும் எல்லா மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே அரசு நல்லிணக்கத்திற்காக முயல்கின்றது. இதற்காக அரசமைப்பு திருத்தத்திற்காகவும் பாடுபடுகின்றோம். நல்லிணக்கத்திற்காக அரசு பெரியளவில் சவாலை எதிர் கொள்கின்றது. வடக்கு மாகாண முதலமைச்சரும் போரினால் போரின்போது இடம்பெற்ற தவறுக்கு நிலைமாறு நீதியாகக் கருத்தினை முன்வைத்தார். அதற்காகவே சிறப்புச் செயலணியும் உருவாக்கப் பட்டுள்ளது.

இதன்பிரகாரம் போரின்போது இடம்பெற்ற குற்றங்களுக்கு தண்டனை வழங்கவும் நடவடிக்கை இடம்பெறும். அதேவேளை இவ்வாறான செயல்கள் மீண்டும் இடம்பெறாமல் இருப்பதனை உறுதி செய்யும் அலுவலகமே தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கச் செயலணியாகும். அதன் தலைவி நான் ஆகினும், இது ஜனாதிபதியின் கீழேயே இயங்குகின்றது.

இங்கு இடம்பெற்ற சம்பவங்களினால் உங்கள் மனங்களில் விரக்தி , கோபம் , ஆத்திரம் இருக்கும் என நம்புகின்றேன். அதற்கும் அப்பால் செல்ல வேண்டிய தேவையும் உள்ளது. இருப்பினும் இவற்றில் இருந்து உங்களால் மறக்க முடியாது என நம்புகின்றேன். இங்கு நல்லிணக்கம் உருவாக வேண்டுமானால், சிங்கள மக்கள் ஏனையவர்கள் மீது உள்ள கருத்தினை மாற்றவேண்டும். அதே போல் தமிழர்கள் தங்கள் கசப்புணர்வுகளை மாற்றி சிங்கள மக்களோடு உறவை பேண வேண்டும்.

சிங்கள மக்களில் அநேகர் தமிழர்களை நேசிக்கின்றனர். அவர்கள் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற அநீதிக்காக வெட்கமும் கவலையும் கொள்கின்றனர். இனிவரும் காலங்களில் அனைவரும் ஒளிமயமான நாட்டை நோக்கி முன்னேற ஆவன செய்ய வேண்டும். அதற்கும் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் - என்றார். (வ-101)

---

## மரண அறிவித்தல்

### திருமதி மகிழலோஜினி கமலநாதன்

நாவற்கிரி புத்தூர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் ஒட்டறுத்தகுளம், வவுனிக்குளத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகிழலோஜினி கமலநாதன் நேற்று (11.08. 2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சபாரெட்ணம் கமலநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி-மகாலட்சுமி தம்பதியின் அன்பு மகளும் சதீஸ்குமார் (பிரா ன்ஸ்), மயூரதன் (குட்டி- நிதர்ஷிகா மோட்டோர்ஸ் மல்லாவி), தினுஸ்குமார் (ஷானுஜன் மோட்டோர்ஸ் மல்லாவி), மயூரி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன் புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(12.08. 2016) வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அனிஞ்சியன்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்தஅறிவித்தலைஉற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: K.மயூரதன் (குட்டி)
K.தினுஸ்குமார்
077 2881121

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
1922
.
05
.
08



மறைவு
2016
.
07
.
13

### திருமதி அன்னம்மா கந்தையா

அன்பு மொழி பேசி எங்கள்
அனைவரையும் அரவணைத்து ஆறுதல் தந்த எம் அன்புத்தெய்வமே
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைகழல் பணிவோமே

எமது குடும்பத்தலைவி திருமதி அன்னம்மா கந்தையா அவர்கள் கடந்த (13.07.2016) அன்று இறைபதம் அடைந்தவேளை எமக்கு பலவழிகளிலும் உதவிபுரிந்த மற்றும் பற்பலவழிகளிலும் அஞ்சலி செலுத்தியதோடு ஆழ்ந்த அனுதாபங்கள் தெரிவித்த அன்பு உள்ளங்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (12.08.2016) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றாம்.

உழவர் வீதி,
தாவடி வடக்கு.


வங்கியாளர் பாலசுப்பிரமணியம் ,
பேராசிரியர் தேவராஜா ,
பரஞ்சோதி கமலேஸ்வரி

---

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை நல்லநாதன்

**(முன்னாள் தபால் திணைக்கள உத்தியோகத்தர்)**



யாழ்ப்பாணம், கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் , கரடிப்போக்கு, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை நல்லநாதன் 05.08.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு சின்னத்துரை (ஓய்வுபெற்ற சுகாதாரப் பரிசோதகர்)- சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் சர்வேஸ்வரி(கொழும்பு), சோதிநாதன்(லண்டன்), காலஞ்சென்ற பத்மநாதன் (கந்தர்மடம்), சுந்தரநாதன் (லண்டன்), சபாநாதன்(கொழும்பு), ராகினி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சிதம்பரநாதன் (கொழும்பு), சற்குணராணி(லண்டன்), கமலாம்பிகை (கந்தர்மடம்), அரியமலர்(லண்டன்), பவானி(கொழும்பு), ஜெயக்குமார்(லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் வாகுலேயன், பிரபாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஸ்கந்தகுமார், பிரிந்தன், ஹரிகரன், ஜனார்த்தனன்,ஆரணி, துஷாந்தன், ஷாமினி,யசோதினி, ஹம்சவாகினி ஆகியோரின் சிறிய தந்தையும் சியாமளன், யதுகுலன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.08.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு இல.197, பலாலி வீதி, கந்தர் மடம் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(கே/126)(12.18)


---

## மரண அறிவித்தல்

### கனகசபை லோகநாதன்

**(யப்பான் ஜுவல்லர்ஸ் யாழ்ப்பாணம்)**

(George Steuart & Co Colombo Director (Former),
(World Bank - முன்னாள் மூத்த ஆலோசகர் )



காரைநகரைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கன்னாதிட்டி மற்றும் கொழும்பு ஆகிய இடங்களையும் தற்போது அமெரிக்காவில் வசித்து வந்தவருமான கனகசபை லோகநாதன் 08.08.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்பிள்ளை கனகசபை (யப்பான்)- பொன்னம்மா தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை (பிறண்டியர்)- சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், நகுலாம்பிகையின் (குஞ்சு) அன்புக் கணவரும், ரவீந்திரன், ராதா, ராஜேந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சமீரா, ஆர்த்திகா ஆகியோரின் அன்பு மாமனும், கீதாஞ்சலி, ஆனந்த், நிக்கில் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், ஜெயலக்சுமியின் (தேவி) அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (14.08.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு ஆரம்பமாகி அவரின் பூதவுடல் பிற்பகல் 2.00 மணிக்கு Maryland USA இல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6746, Surreywood lane,
Bethesda, Maryland,
20817 USA.

தகவல்:
மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தொடர்பு: வே. அரியரட்ணம் (மைத்துனர்)
யாழ்ப்பாணம். 0094773946341 (f.24914) (13.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

கோண்டாவில் வடக்கு கோண்டாவிலைச் சேர்ந்த மாரிமுத்து அமிர்தலிங்கம் ஆகிய எனது 362282438V எனும் இலக்கம் கொண்ட தேசிய அடையாள அட்டை திருநெல்வேலி சந்திக்கும் கோண்டாவில் டிப்போ இடையில் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

மாரிமுத்து அமிர்தலிங்கம்
கோகுல வீதி, கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்
077 2169713

## உடனே

மாறும் சுகாதார அமைச்சர் கோரியுள்ளார். இந்த இடங்களில் கையளிக்க முடியாதவர்கள் யாழ்ப்பாணம் பண்ணையிலுள்ள சுகாதார அமைச்சில் நேரடியாகக் கையளிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். முன்னாள் போராளிகள் விச ஊசி ஏற்றப்பட்டமையினால் உயிரிழப்பதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதனடிப்படையிலேயே மேற்படி நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (வ-5)

## அமளி

குள் நுழைந்த மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர்கள், அங்கு ஒவ்வொருவராக செல்பி எடுக்கொண்டனர். அவர்கள் செல்பி எடுப்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது அலைபேசியில் படம் எடுத்தனர்.

இதனால் நாடாளுமன்றத்தின் நடுவே பெரும் அமளிதுமளி ஏற்பட்டது. (வ)

## பதவி வெற்றிடம்

இல. 32 ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

BILL CLERK - 2(MALE/FEMALE)
STORE KEEPER - 2 (MALE/FEMALE)
(5years experience)
RECEPTIONIST - 1 (FEMALE)
ASSISTANT ACCOUNTANT - 2 (MALE/FEMALE)

பின்வரும் பதவிகளுக்கு தகைமையுடையோர் எதிர்வரும் சனிக்கிழமை (13.08.2016) காலை 11.00 மணியளவில் உங்களது கல்விச் சான்றிதழ்களுடன் நேர்முகத்தேர்விற்குச் சமுகமளிக்கவும், கணினி அறிவு உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

குறிப்பு : குறைந்தது 2 வருட முன்அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

தொலைபேசி - 021 2227028

## தேவை

ஆனைக் கோட்டையில் இயங்கும் கட்டட ஒப்பந்த நிறுவனம் ஒன்றிற்கு மேசன் மற்றும் கூலி வேலை செய்வதற்கு ஆள்கள் தேவை.

தொடர்பு:021 4927249

## ஊர்கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு

நாள், வார நல்ல இன ஊர்க்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உள்ளன.

077 2453673

## காணி விற்பனைக்கு

கிளுவானை றோட், கோப்பாயில் அமைந்துள்ள 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

077 7350728

## விநியோகஸ்தர்கள் தேவை

கொழும்பிலிருந்து வெளிவரும் தேசிய பத்திரிகையின் வாரப்பத்திரிகையை ஞாயிறு அதிகாலையில் விநியோகிப்பதற்கு (வடமராட்சி பருத்தித்துறை நகர்ப்பகுதியில் இருந்து 40 இற்கு மேற்பட்ட கடைகளிற்கும் யாழ் நகரப்பகுதியில் இருந்து 50 இற்கு மேற்பட்ட கடைகளிற்கும் விநியோகம் செய்ய) விநியோகஸ்தர்கள் உடன் தேவை. யாழ்ப்பாணம், வடமராட்சியைச் சேர்ந்தவர்களாக இருப்பதுடன் சொந்தமாக மோட்டார் வண்டி வைத்திருப்பவர்கள் விரும்பத்தக்கது. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: 0714273035

## விசேஷட வைத்திய நிபுணர்களின் சேவை

1. காது, மூக்கு, தொண்டை (ENT) மற்றும் தலை கழுத்து பகுதிகளில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு சிறப்பு தேர்ச்சி பெற்ற விசேஷட காது மூக்கு தொண்டை (ENT) சத்திரசிகிச்சை நிபுணர்.
2. முகத்தில் ஏற்பட்ட தளம்புகளை அகற்றி முக அழகை சீரமைப்பதற்கும் இளமை தோற்றத்தை மேம்படுத்துவதற்கும் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை நிபுணர்
3. முட்டுவலி, முட்டுவாதம் (ஆர்க்கிரைட்டிஸ்) மற்றும் மூட்டுக்களில் ஏற்படும் சகலவிதமான பிரச்சினைகளுக்கு சிறப்பு தேர்ச்சி பெற்று விசேஷட மூட்டு வாத வைத்திய நிபுணர்
4. மற்றும் தோல் வைத்திய நிபுணர்கள், குழந்தை வைத்திய நிபுணர்கள், சத்திரசிகிச்சை நிபுணர்கள், பொது வைத்திய நிபுணர்கள், மார்பு நோய் சிறுநீரக நோய் வைத்திய நிபுணர்கள், மகப்பேற்று பெண்நோயியல் வைத்திய நிபுணர், நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர்கள்
5. சலரோகம் (நீரிழிவு) மற்றும் கோமோர்ன்ஸ்களினால் (தைரிராய்ற் ) ஏற்படும் பிரச்சினைகளுக்கு ஆலோசனை பெற சிறப்பு தேர்ச்சி பெற விசேட நீரிழிவு கோமோர்ன்ஸ் வைத்திய நிபுணர்
6. முட்டு(Wheezing) அஸ்த்மா (Asthma), சளி, தீராத இருமல் வியாதிகள், நியுமோனியா (Pneumonia) மற்றும் மார்பு சம்மந்தமான சகல வியாதிகளுக்கும் விசேட தேர்ச்சி பெற்ற மார்பு நோய் நிபுணர்
7. தொலைபேசியில் பதிவுகளை மேற்கொள்ள அழையுங்கள்

T.P : 021 2213668, 021 320 2300, 077 0457976
றோயல் மெடிகல் சென்ரர்
(யாழ். போதனா வைத்தியசாலை OPD எதிரில்)

## நீங்கா நினைவில் 24 ஆண்டுகள்



துளிராய்
10 . 07 . 1982

விதையாய்
06 . 08 . 1992

### செல்வி சர்விழி (கிளி) தம்பிராசா

திதி: நவமி (12.08.2016)

எல்லாம் வல்ல இறைவா!
எங்கும் நிறைந்த இறைவா!!
காக்கும் கடவுளல்லவா நீ?
என் கடைசி மகள் கிளியின் மேல்
கண்வைத்த காரணம் என்ன?
கணப்பொழுதில் கடந்துவிட்ட 24 வருடங்கள்
எம் மனதில் எஃகுவாக படிந்துவிட்டனவே
இத்தனை வருடமென்ன எத்தனை வருடம் கடந்தாலும்
எங்கள் துயரம் ஆறாது - மாறாது

கோட்டைக்காடு,
மல்லாகம்.

என்றும் நினைவுடன்
தம்பிராசா குடும்பத்தினர்.

## நகராட்சி மன்றம் சாவகச்சேரி பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்

எமது நகராட்சி மன்றத்துக்கு சொந்தமான பாவனைக்கு உதவாத பின்வரும் பொருள்கள் (19.08.2016) ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நகராட்சி மன்ற முன்றலில் ஏல விற்பனை செய்யப்படும். ஏலத்தில் பொருள்களைப் பெற்றுக்கொள்பவர்கள் ஏலத் தொகையுடன் VAT.NBT சேர்த்து செலுத்தி பொருட்களை உடன் அப்புறப்படுத்த வேண்டும்.

பொருள்கள் விவரம்
1. உருக்கு மேசைகள்
2. இலத்திரனியல் மற்றும் கணினியுடன் தொடர்பான பொருள்கள்
3. பிளாஸ்ரிக், இரும்பு பொருள்கள்

மேலதிக விவரங்களை அலுவலக அறிவித்தல் பலகையில் பார்வையிடமுடியும்.
ஏல விற்பனை தொடர்பாக நகராட்சி மன்றத்தின் முடிவே இறுதியானது

செயலாளர்.
நகராட்சி மன்றம், சாவகச்சேரி.

## பெறுகை அறிவித்தல்

### வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

01. தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன
02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது
03. பெறுகைக்கு தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் பெறுகைதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
04. பெறுகைதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் அலுவலக நாள்களில் காலை 09.00 மணி முதல் மாலை 15.00 மணி வரை, 12.08.2016 ஆம் திகதி தொடக்கம் 31.08.2016 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
05. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் ஆங்கிலமொழியில் மட்டும் உள்ள பெறுகை ஆவணங்களை கே.கே.எஸ் வீதி சுன்னாகத்தில் அமைந்துள்ள வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் 12.08.2016 தொடக்கம் 31.08.2016 ஆம் திகதி வரை அலுவலக நாள்களில் மு.ப 9.00 மணி முதல் 15.00 மணி வரை மீளளிக்கப்படாத பணமாக ரூபா.2000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். .
06. பெறுகை ஆவணங்களின் மூலப்பிரதி, இணைப்பிரதி என்பனவற்றை 01.09.2016 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். பெறுகைதாரர்கள் வேலைக்கான பெறுகை விவரத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
07. பெறுகை தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 24.08.2016 ஆம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்
08. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமைவதுடன் குறித்த தொகை அலுவலகத்தில் பணமாகச் செலுத்தப்படவேண்டும்
09. கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது

| இல | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (Vat, Tar நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | பூதவராயர் வீதி புனரமைப்பு | 5.26 | 03 மாதம் | C8 | 53,000.00 |
| 2 | மயிலங்காடு கொலணி வீதி மீள்புனரமைப்பு | 1.41 | 03 மாதம் | C9 | 14,000.00 |
| 3 | வட்டுவினி 1ம் குறுக்கு வீதி மீள்புனரமைப்பு | 0.69 | 02 மாதம் | C9 | 7,000.00 |
| 4 | சபாபதிப்பிள்ளை குறுக்கு வீதி மீள்புனரமைப்பு | 0.61 | 02 மாதம் | C9 | 7,000.00 |
| 5 | கற்பொக்கனை பிள்ளையார் வீதி மீள்புனரமைப்பு | 0.74 | 02 மாதம் | C9 | 8,000.00 |
| 6 | களவியாவத்தை வீதி மீள்புனரமைப்பு | 0.95 | 02 மாதம் | C9 | 10,000.00 |
| 7 | வண்ணாகடவை ஒழுங்கை மீள்புனரமைப்பு | 0.77 | 02 மாதம் | C9 | 8,000.00 |


தி.சுதர்சன்
தவிசாளர்
பிரதேசசபை பெறுகைக்குழு
வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சபாரத்தினம் தர்மரத்தினம்

**(ஓய்வு பெற்ற இலங்கை போக்குவரத்துச்சபை நடத்துனர், எழுதுவினைஞர், தலைவர் அல்வாய் சமாணந்துறை, ஆலடிப்பிள்ளையார் ஆலயம்)**



**பிறப்பு**
**1949 . 08 . 13**

**இறப்பு**
**2016 . 08 . 11**

அல்வாய் தெற்கு காலகேந்திராவைச் சேர்ந்த சபாரட்ணம் தர்மரத்தினம் (11.08.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கலாவதியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் -தர்மவதி தம்பதி யரின் ஏகபுத்திரனும் காலஞ் சென்ற வர்களான பாலசிங்கம் - சாரதாமணி தம்பதியரின் மருமகனும் காலஞ் சென்ற வர்களான நமசிவாயம், மகேஸ்வரி மற்றும் தணிகாசலம், இராஜேஸ்வரி, நவரத்தினம், தவமணி ஆகியோரின் பெறாமகனும் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை, நல்லம்மா, செல்வராசா, சரஸ்வதி ஆகியோரின் அன்புமருமகனும் சாரதாதேவி - விஜயநாதன், பா.வெற்றிவேல் (ஓய்வு பெற்ற அதிபர்), பா.மணிவர்ணன் (பிரதம எழுதுவினைஞர் கரவெட்டி பிரதேசசபை), பெ. அட்சயலிங்கம் (ஆசிரியர்), சி.கதிர்காமநாதன் (வங்கி உத்தியோகத்தர்) ஆகியோரின் மைத்துனரும் அ.விஜயநாதன் (ஓய்வு பெற்ற அதிபர்) அவர்களின் சகலனும் வெற்றிவேல் - ரதி, மணிவர்ணன், சுசிகலா ஆகியோரின் சகோதரனும் வி. செந்தூரன் (விரிவுரையாளர் வவுனியா பல்கலைக்ககழகம்), வி.குமரன் (பொறியியலாளர் லண்டன்), வி.துவாரகள் (அபிவிருத்தி உத்தியோகத்தர் மாவட்டச்செயலகம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் சிறிய தந்தையும் ராதிகா, செந்தூரன் (சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்) நிருத்திகா, லிங்கனதாஸ் (முகாமைத்துவ உதவியாளர் நகரசபை பருத்தித்துறை), வெ. துஷ்யந்தன் (DD தொலைக்காட்சி), வெ. சிந்துஜன் (யாழ். பல்கலைக்கழக புகுமுக மாணவன்), ம. ஹீர்த்தனா (வவுனியா பல்கலைக்கழக மாணவி), ம.கேசவன், ம.ஆராதனா ஆகியோரின் அன்புமாமனாரும் ந.யோகரத்தினம் (வங்கி உத்தியோகத்தர்), த. இராஜேஸ்வரன் (வங்கி உத்தியோகத்தர்) த.இராஜவரோதஜன், கனகரத்தினம், விஜயராஜா, ச.அழகரத்தினம், ந. நவராசா (லண்டன்), உமாகதிர்காமநாதன் ஆகியோரின் சகோதரனும் ஆருஷா, நித்தியவாரிதன், ஆகாஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2016) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் பங்குவேம்பட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கலாகேந்திரா**
**அல்வாய் தெற்கு, அல்வாய்.**

தகவல்:
கலாவதி (மனைவி),
வி.செந்தூரன், வி.குமரன், வி.துவாரகன் (பிள்ளைகள்)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

**தோற்றம்**
**17 . 05 . 1943**



**மறைவு**
**14 . 07 . 2016**

## பொன்னம்பலம் பொன்னுத்துரை

**(சோதிடர் அ.பொ. பொன்னுத்துரை)**

**அழகான தேன்கூட்டில் அனல் வீழ்ந்ததோ!**
**நல்ல வளமான பூங்காற்று புயலானதோ?**
**எழில் வீசு பொழில் மீது இடி வீழ்ந்ததோ**
**நாம் எதிலியாய்த் தவிக்கின்ற நிலை வந்ததோ**
**ஏங்கி ஏங்கி கண்ணீரில் மிதக்கின்றோம்**
**எம் கண்ணீர் துடைக்க நீங்கள்**
**வரமாட்டீர்களா அப்பா!**


சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய்/

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## இராசா சிங்கராசா

**தோற்றம்**
**07 . 08 . 1920**



**மறைவு**
**10 . 08 . 2016**

ஏழாலை மேற்கைப்பிறப்பிடமாகவும், ஏழாலை தெற்கு களவாவோடையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசா சிங்கராசா நேற்று (11.08.2016) வியாழக் கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா - அன்னமுத்து தம்பதியரின் மகனும் தங்கச்சிப்பிள்ளை யின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, செல்லையா, இராசம்மா, பாக்கியம் மற்றும் சரஸ்வதி ஆகியோரின் சகோதரனும் சுசிலா, உதயசீலன், உதயச்சந்திரன் காலஞ்சென்ற மனோ ரஞ்சி ஆகியோரின் தந்தையும் சாந்தகுமார், காஞ்சனா, சிவ்கௌரி ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2016) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக காடகடம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஏழாலை தெற்கு,**
**களவாவோடை.**
**077 7789974**

**தகவல்:**
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## இராசப்பு அன்ரனி குருஸ்

**பிறப்பு**
**09 . 04 . 1950**



**இறப்பு**
**08 . 08 . 2016**

யாழ். நவாலி தெற்கைப்பிறப்பிடமாகவும் சுவிஸ் Aarau ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இராசப்பு அன்ரனி குருஸ் அவர்கள் (08.08.2016) திங்கட்கிழமை அன்று இலங்கையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசப்பு - கர்த்தரீனம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான முத்துராசா - ஞானம்மா தம்பதியரின் அன்புமருமகனும் சுசிலா வின் அன்புக்கணவரும் மீரா, சாரு ஆகியோரின் அன்புத்தந்தையும் யேசுதாசன் (இலங்கை), அருள்நேசன் (ஜேர்மனி), மேரிபொலின் (இலங்கை) காலஞ்சென்ற செலின், மேரி சாலினி (பிரான்ஸ்), பிறேமானந் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரரும் கண்ணின் அன்பு மாமனும் ஜெயரட்ணம் (இலங்கை), ஜெயநாதன் (இலங்கை) காலஞ்சென்ற மணி, றாணி (இலங்கை), ஜெயலிங்கம்(பிரான்ஸ்), மலர் (இலங்கை), மனோகரன் (பிரான்ஸ்), பவுன் (இலங்கை), ஜெயவதி (இலங்கை), அப்புகாத்து (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கிரிஷ் றியா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் (12.08.2016) வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நவாலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நவாலி தெற்கு, மானிப்பாய்.**

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் சுந்தரலிங்கம்



மண்கும்பான் மேற்கைப் பிறப்பிடமாகவும் பொற்பதி வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம் பலம் சுந்தரலிங்கம் நேற்று (11.08.2016) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென் றவர்களான கணபதிப்பிள்ளை-இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் தங்கத்துரை (கனடா), காலஞ்சென்றவர்களான சின் னம்மா, பூமணி மற்றும் ராசரெத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற ஜெயவதனி மற்றும் ஜெயகௌரி, ஜெயராணி, துஸ்யந்தன், பிரியந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுதர்சன், அகிலன், யசோ ஆகியோரின் அன்பு மாமனாரும் பாலசுப்பிரமணி யம் (பிரான்ஸ்), அன்னலெட்சுமி,லீலாவதி, மகாலட் சுமி ஆகியோரின் மைத்துனரும் டதுசன், சரணிகா, சண் ஜிதா,சயானி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2016) வெள்ளிக்கிழமை பி.ப.2 மணிக்கு கொக்குவிலில் உள்ள இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பொற்பதி வீதி,**
**கொக்குவில்.**


**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்வின், சகா சதம் தீவுகளும் தக்க பதிலடி

மேற்கிந்தியத் தீவுகளுக்கும், இந்தியாவுக்கும் இடையில் நடைபெற்றுவரும் மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றுமுன்தின இரண்டாம் நாளில் இந்தியாவின் முதல் இன்னிங்ஸ் 353 ஓட்டங்களில் முடிவு கண்டதுடன், பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிவரும் மேற்கிந்தியத் தீவுகள் நாள் முடிவில் 107-1 என்ற நிலையில் உள்ளது.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா முதல் நாள் முடிவில் 234-5 என்றிருந்தது.
அஸ்வின் 75 ஓட்டங்களுடனும், சகா 46 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காகக் களமிறங்கினர். இணைப்பாட்டம் இரண்டாம் நாளிலும் நீடித்தது. இருவரும் சதத்தைப் பதிவுசெய்தனர். 213 ஓட்டங்கள் பகிரப்பட்ட பின்னர் 104 ஓட்டங்களுடன் சகாவை வீழ்த்தினார் அறிமுக வீரர் ஜோசெப். இணைப்பாட்டம் பிரிக்கப்பட்டதுதான் தாமதம், பின்வரிசை கடகடவென சரிந்து முடிந்தது. அஸ்வினும் 118 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இந்தியா முதல் இன்னிங்ஸுக்காக 353 ஓட்டங்களைக் குவித்தது.
பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகளின் சார்பாக ஜோசெப், கும்மின்ஸ் இருவரும் தலா மூன்று இலக்குகளையும், சேஸ், கபிரியேல் இருவரும் தலா இரு இலக்குகளையும் வீழ்த்தினர்.
பதிலுக்குக் களமிறங்கிய தீவுகளுக்கு ஆரம்ப வீரர்களான பிரீத்வைட், ஜோன்சன் இணை சிறப்பான ஆரம்பத்தை வழங்கியது.
இணைப்பாட்டமாக 59 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த நிலையில், ரண்அவுட் செய்யப்பட்டார் ஜோன்சன். இணைந்தார் பிராவோ. பிறிதொரு இலக்கை இழக்காமல் தாக்குப் பிடித்தது தீவுகள். நாள் முடிவில் அந்த அணி 107-1 என்றுள்ளது. பிரீத்வைட் 53 ஓட்டங்களுடனும், பிராவோ 18 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)





# ஆஸிக்கு வெள்ளையடித்து திருப்பியனுப்ப வேண்டும்

## சனத் ஜெயசூரியவின் ஆசை இது

ஆஸ்திரேலிய அணிக்கு இலங்கை வெள்ளையடித்து திருப்பியனுப்ப வேண்டும் என்று தெரிவித்தார் இலங்கை அணியின் தலைமைத் தேர்வாளரான சனத் ஜெயசூரிய.
இலங்கை-ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர், தற்போது நடைபெற்று வருகிறது. முடிவடைந்த முதலிரு ஆட்டங்களிலும் இலங்கை வெற்றி பெற்று 2:0 என்று முன்னிலையில் உள்ளது. மூன்றாவது ஆட்டம் நாளை ஆரம்பமாகிறது. இந்த நிலையிலேயே சனத் இவ்வாறு தெரிவித்தார்.
2:0 என்ற கணக்கில் நாம் முன்னிலை வகிப்போமென எவரும் நினைத்திருக்கவில்லை. மாறாக ஆஸ்திரேலியா 2:0 என முன்னிலை வகிக்குமெனவே பலரும் எண்ணினர். பலரது எண்ணங்களைத்தவிடு பொடியாக்கியுள்ளோம். இந்தத் தொடரை 3:0 என நாம் வெல்ல முடியுமாயின், அது வரலாறாகும். மிகப் பெரிய சந்தர்ப்பமொன்று எங்களுக்குக் கிடைத்துள்ள தென்பதை, எங்கள் வீரர்கள் உணர்வார்களென நான் நம்புகிறேன். கொழும்பில் (மூன்றாவது டெஸ்ட்டில்) ஆஸியை வீழ்த்தி வெள்ளையடிக்க வேண்டும் என சனத் மேலும் தெரிவித்தார்.
இதே கருத்தை இலங்கை அணியின் முன்னாள் வீரரான அரவிந்த டி சில்வா நேற்றுமுன்தினம் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)


# கோக்லியை வீழ்த்தியமை திருப்தி

## ஜோசெப் தெரிவிப்பு

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகளில் அறிமுகமான வேகப்பந்து வீச்சாளரான ஜோசெப், தனது முதலாவது இலக்காக கோக்லியை வீழ்த்தியமை மகிழ்ச்சி தருவதாகத் தெரிவித்தார்.
தீவுகளுக்காக விளையாட வேண்டுமென்பது எனது கனவு. அது தற்போது நிறைவேறியுள்ளது. அதிலும் எனது முதலாவது இலக்காக கோக்லியை வீழ்த்தியமையானது மேலும் திருப்தி தருகிறது.
கோக்லியை ஆட்டமிழக்கச் செய்த பிற்பாடு எந்த வீரருக்கும் என்னால் பந்துவீச முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என ஜோசெப் மேலும் தெரிவித்தார். (ம)

# கலைமதி அணி போராடி வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. 13
மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் கலைமதி அணி போராடி வெற்றிபெற்றது. யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கு இடையில் இந்தத் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில், ஊறெழு றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் முடிவில் இரு அணிகளும் தலா மூன்று கோல்களைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 5:4 என்ற கோல் கணக்கில் வென்றது கலைமதி அணி. (ம-23)




# கோக்லிதான் சிறந்தவராம்

நிகழ்கால கிரிக்கெட் உலகின் சிறந்த வீரர் கோக்லியே, எனப் புகழாரம் சூட்டியுள்ளார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரரான ஹைடன். தமிழ்நாடு பிரீமியர் லீக் தொடருக்காக இந்தியா வந்துள்ள ஹைடன், நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.
நிகழ்கால கிரிக்கெட் உலகின் சிறந்த வீரராக என்முன் இரு தெரிவுகள் உள்ளன. ஒருவர் கோக்லி, மற்றொருவர் ஸ்ரீவ் சிமித். இந்த வருடத்தின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஸ்ரீவ் சிமித்தைவிட, கோக்லி சிறந்தவர் என்று சந்தேகமின்றிக் குறிப்பிட முடியும். ஏனெனில் கோக்லி சதங்களாகக் குவிக்கிற அதேநேரம், சிமித் தடுமாற்றம் காட்டுகிறார்.
ஆனால், சிமித் போர்முக்குத் திரும்பினால் இருவரையும் சிறந்தவர்கள் என ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என ஹைடன் மேலும் தெரிவித்தார். (ம)

# சிம்பாப்வேக்கு எதிரான டெஸ்டில் வெள்ளையடித்தது நியூசிலாந்து


சிம்பாப்வேக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியது வில்லியம்சனின் தலைமையிலான நியூசிலாந்து.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, 582-4 என்ற நிலையிலிருந்தபோது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது. அதிகபட்சமாக லாதம் 136 ஓட்டங்களையும், ரெய்லர் ஆட்டமிழக்காமல் 124 ஓட்டங்களையும், வில்லியம்சன் 113 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சிம்பாப்வேயின் சார்பாக திரிபானொ, நியம்பு, கிரீமர் ஆகியோர் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய சிம்பாப்வே, 362 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக எர்வின் 146 ஓட்டங்களையும், மூர் 71 ஓட்டங்களையும், சிப்கபா 60 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் நியூசிலாந்தின் சார்பாக சொட்கி 4 இலக்குகளையும், சான்னெர், வாக்நெர் இருவரும் தலா இரு இலக்குகளையும், சௌத்தி, போல்ட் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
220 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த நியூசிலாந்து, 166-2 என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக வில்லியம்சன் ஆட்டமிழக்காமல் 68 ஓட்டங்களையும், ரெய்லர் ஆட்டமிழக்காமல் 67 ஓட்டங்களையும் பெற்றனர்.
387 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய சிம்பாப்வே 132 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து சுருண்டது. 254 ஓட்டங்களால் வெற்றிபெற்ற நியூசிலாந்து தொடரையும் 2:0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டோனி பட ரெய்லர் நேற்று வெளியானது

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் டோனியின் வாழ்க்கையைப்பற்றி தயாரிக்கப்பட்டுள்ள படத்தின் ரெய்லர் நேற்று வெளியிடப்பட்டது.
ரெயில் நிலையத்தில் நுழைவுச் சீட்டு பணியாளராக இருந்தது முதல் இந்திய அணியின் தலைவராக வந்தது வரை டோனியின் வாழ்க்கையில் இடம்பெற்ற அத்தனை சுவாரஸ்யமான சம்பவங்களும் இந்தப் படத்தில் இடம்பிடித்துள்ளன. எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி படம் திரைக்கு வரவுள்ள நிலையில், குறித்த படத்தின் ரெய்லர் நேற்று வெளியிடப்பட்டது. 35 ஆயிரம் ரசிகர்கள் மத்தியில், டோனி குறித்த ரெய்லரை வெளியிட்டு வைத்தார். (ம)






# தேசியமட்ட கூடைப்பந்தாட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் இரண்டாமிடம்

யாழ்ப்பாணம், ஓக. 12
இலங்கை பாடசாலைகளின் கூடைப்பந்தாட்ட சம்மேளனம் தேசிய மட்டத்தில் நடத்திய கூடைப் பந்தாட்டத் தொடரில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வ தேசப் பாடசாலை இரண்டாம் இடத்தைப் பெற்றது.
வென்னப்புவவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணியை எதிர்த்து கொழும்பு சென். ஜோசெப் கல்லூரி அணி மோதியது. இதில் 61:52 என்ற புள்ளிகள் அடிப்படையில் சென். ஜோசெப் சம்பியனானது.
பாடசாலைகளுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டத் தொடரில், யாழ். மாவட்டப் பாடசாலையொன்று தேசியமட்டத்தில் இரண்டாவது இடத்தைப் பிடிப்பது இதுவே முதல் தடவை. ஏஞ்சல் தனது அரையிறுதியில் லைசியம் சர்வதேச பாடசாலை அணியை 61:42 என்ற புள்ளிகள் அடிப்படையில் வீழத்தியே இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)

## நசரேத் - ஐயனார் ஆட்டம் சமநிலை

யாழ்ப்பாணம், ஓக. 12
மெலிஞ்சிமுனை இருதயராஜா வி.கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற புங்குடுதீவு நசரேத், துறையூர் ஐயனார் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சம நிலையில் முடிந்தது.
இருதயராஜாவின் மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில், நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் முடிவில் இரு அணியினரும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்த நிலையில் ஆட்டம் சமநிலை கண்டது. (ம-23)

## இன்றைய மோதல்கள்

வொலிகிங்ஸ் வி.கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி அணி மோதவுள்ளது. இரவு 7.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில், ஆவரங்கால் மத்திய அணியை எதிர்த்து மல்லாகம் நியூவொரியஸ் அணி மோதவுள்ளது. இரவு8.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சண்டிலிப்பாய் வசந்தசிறி அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி அணி மோதவுள்ளது. (ம-23)

## தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் நியூசிலாந்து தன்னை நிரூபிக்கவேண்டும்

*மக்கலம் தெரிவித்தார்*



தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில்நியூசிலாந்து அணி தன்னை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளதாக அந்த அணியின் முன்னாள் தலைவர் மக்கலம்தெரிவித்தார்.
சிம்பாப்வேக்கு எதிரான டெஸ்ட் தொடரில் நியூசிலாந்து 2:0 என்று வெற்றிபெற்றமை பாராட்டப்பட வேண்டியதொன்று. ஆனால் அந்த வெற்றியை அவர்கள் (வீரர்கள்) ஆகச்சிறந்த வெற்றியென்று எடுத்துவிடக்கூடாது. டெஸ்ட் தொடரில் 10 ஆவது இடத்தில் உள்ள அணிதான் சிம்பாப்வே என்பதை அவர்கள் நினைவில் கொள்ளட்டும். நியூசிலாந்து அணி, ஒருநாள், ரி-20 ஆட்டங்களில் சிறப்பாகவே செயற்பட்டுள்ளது. அந்த அணி டெஸ்ட் ஆட்டங்களில் தன்னை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. தென்னாபிரிக்காவுக்கு எதிராக எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இரு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரை சிறப்பான வாய்ப்பாக எடுத்துக்கொண்டு வீரர்கள் தம்மை நிருபிக்க வேண்டும் என மக்கலம் மேலும் தெரிவித்தார். (ம)

# பெண்கள் பிரிவு ஹொக்கி ஜேர்மன் அபார வெற்றி




ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் பிரிவு ஹொக்கி ஆட்டமொன்றில் தென்கொரியாவை மிக இலகுவாக ஊதித் தள்ளியது ஜேர்மனி.
இந்த இரு அணிகளும் 'ஏ' பிரிவில் இடம்பிடித்துள்ளன. 2:0 என்ற கோல் கணக்கில் ஜேர்மனி, தென்கொரியாவை வீழ்த்தியது. ஏனைய ஆட்டங்களில் அமெரிக்கா, ஆர்ஜென்ரீனாவை 2:1 என்ற கோல் கணக்கிலும், நெதர்லாந்து, சீனாவை 1:0 என்ற கோல் கணக்கிலும் வீழ்த்தின. (ம-ரி4)

## மகாத்மா அணி சம்பியன்

யாழ்ப்பாணம், ஓக. 12
அரியாலை சனசமூக நிலையத்தின்67ஆவதுஆண்டுநிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில் (ஓவர்கேம்) மகாத்மா அணி சம்பியனானது.
அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணிக்கு இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில், அரியாலை சனசமூக நிலைய அணியை எதிர்த்து மகாத்மா அணி மோதியது. இதில் மகாத்மா அணி 23:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## மீண்டும் வந்தார் குல் பாக். அணி அறிவிப்பு

பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளரான உமர் குல், நீண்ட இடைவெளியின் பின்னர் மீண்டும் ஒருநாள் ஆட்டங்களுக்கான அணியில் இடம்பிடித்தார்.
இங்கிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகின்ற நிலையில் அடுத்ததாக ஒருநாள் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கான அணியிலேயே குல் மீண்டும் இணைந்தார்.
ஒருநாள் ஆட்டங்களுக்கான பாகிஸ்தான் அணி - அசார் அலி (தலைவர்), சர்ஜீல் கான், சமி அஸ்லாம், கபீஸ், பாபர் அஸாம், மலிக், சர்பிராஸ் அகமட், ரிஸ்வான், மொகமட் ஆமிர், வகாப் ரியாஸ், உமர் குல், ஹஸன் அலி, இமாட் வசீம், யசீர் சா, மொகமட் நவாஸ் (ம)

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
GS, சமுர்த்தி
சனி 1.00pm-5.00pm
வடமாகாண ஆசிரியர்
சனி 1.00pm-5.00pm
அடுத்தவாரம் முதல்பிரதி
ஞாயிறு 9.30-3.00
வடமாகாண சனசமூக/ நன்நடத்தை உத்தியோகத்தர்
சனி 1.00pm-5.00pm
SLTES
ஞாயிறு 9.30am- 3.00pm
இறைவரி உத்தியோகத்தர்
சனி 12.00-4.00
D.O.M.A.G.S EB EXAM
சனி, ஞாயிறு 9.00am-12.00pm
கணக்காய்வாளர்
சனி, ஞாயிறு 9.00am-4.00pm
T.P 0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

போட்டிப் பரீட்சை விசேட கருத்தரங்குகள்
ஆரம்பம்
14/08/2016
(Sun 9.00am-4.00pm)
தொடர்ந்து பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்
விரிவுரையாளர்
P. உமாசங்கர்
P. கமல்தாசன்
மற்றும் துறைசார் விரிவுரையாளர்
நாவலர் கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.
T.P 077 4696695
077 5265344
071 8130390
முழுமை நேர அட்டவணை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுங்கள்.

மணமகள் தேவை
யாழ் இந்த கௌரவ குடும்பம் 1978 இல் பிறந்த கனடா(citizen) உள்ள உதயத்து செவ்வாய் கார்த்திகை நட்சத்திரம், பாவம் 41, உயரம் 6' உள்ள நற்பண்புள்ள மணமகனுக்கு அழகான, உயரமான மணமகளை பெற்றோர் உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ எதிர்பார்க்கின்றனர்.
077 828 0704, 021 226 2336

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1287
சீட்டிழுப்பு திகதி 2016.08.11
வெற்றி இலக்கங்கள்
07 36 41 59 B
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 21,731,780/=

SUPER BALL
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 535
சீட்டிழுப்பு திகதி 2016.08.11
வெற்றி இலக்கங்கள்
35 45 58 71 V
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 45,125,700/=

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
அரச, தனியார் ஊழியர்கள் மற்றும் தொழில்தேடுவோருக்கானது
ஷாம்சனின் நேரடி உரையாடற்பயிற்சி முறைமான ஆங்கில பாடநெறி
சனி, ஞாயிறு பிரிவு ஆரம்பம் 13.08.2016 சனிக்கிழமை
மாலை 03.00 - 05.00
3 மாதங்களில் நீங்கள் சுயமாக ஆங்கிலம் பேசுவதற்கான 100 வீத பிரக்டிகல் பேச்சுப்பயிற்சி
பாடப்புத்தகங்கள் சான்றிதழ், Video DVD, அனைத்தும் இலவசம்.
SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486



# நிலுக்க கருணாரத்ன ரியோவில் ஏமாற்றம்

ரியோ ஒலிம்பிக் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு பூப்பந்தாட்டத் தொடரில் முதல் சுற்றுடன் வெளியேறினார் இலங்கையின் நிலுக்க கருணாரத்ன.
நேற்று இரவு நடைபெற்ற (இலங்கை நேரப்படி) குறித்த ஆட்டத்தில் நிலுக்க கருணாரத்னவை எதிர்த்து சீனாவின் சின் லோங் மோதினார். ஆரம்பம் முதல் சின் லோங், பெரும் ஆதிக்கம் செலுத்தினார். முடிவில் அவர் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று நிலுக்க கருணாரத்னவை வெளியேற்றினார். (ம)

## காலிறுதியில் பிரேஸில்

ரியோ ஒலிம்பிக் தொடரில் கால்பந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில் பிரேஸில் காலிறுதிக்குத் தகுதி பெற்றது.



பிரேஸில் அணி தனது பிரிவில், தென்னாபிரிக்கா, ஈராக் அணிகளுக்கு எதிராக கோல்களைப் பதிவு செய்யாமல் சமன் செய்தது. இதனால் நேற்று இடம்பெற்ற டென்மார்க் அணிக்கு எதிரான ஆட்டத்தில் சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்த வேண்டும் என்ற இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டது. இந்த ஆட்டத்தில் சரிவிலிருந்து மீண்ட பிரேஸில் 4:0 என்ற கோல் கணக்கில் டென்மார்க்கை வீழ்த்தி காலிறுதிக்குத் தகுதி பெற்றது. எதிர்வரும் 14 ஆம் திகதி பிரேஸின் தனது காலிறுதியில் கொலம்பியாவை எதிர்க்கிறது. (ம)

## தங்கத்தை குறிவைக்கிறது நியூசிலாந்து ரக்பி அணி



ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ரக்பி ஆண்கள் பிரிவு ஆட்டமொன்றில் கென்யாவை இலகுவாக வீழ்த்தியது நியூசிலாந்து.
இந்த ஆட்டத்தின் ஆரம்பம் முதல் பெரும் ஆதிக்கம் செலுத்திய நியூசிலாந்து 28:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. ரக்பி பிரிவில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் ஆகச் சிறந்த வெற்றியாக இது பதிவானது. மற்றொரு ஆட்டமொன்றில் ஆஸ்திரேலியா, ஸ்பெய்னை 26:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வீழ்த்தியது. கடந்த பல மாதங்களாக நியூசிலாந்து ரக்பி அணி பன்னாட்டு ஆட்டங்களில் ஆகச் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தி வருவதால் ரியோ ஒலிம்பிக் தொடரில் அந்த அணிக்குத் தங்கப் பதக்கம் கிடைக்க அதிக வாய்ப்புக்கள் உள்ளதாகக் கருதப்படுகிறது. இதற்கேற்றால் போல் நியூசிலாந்து ரக்பி சம்மேளனம் தமக்குத் தங்கம் கிடைக்கும் என்றும் நம்பிக்கை தெரிவித்தது. (ம)

## தங்கத்தை வெல்வது யார்? நடால், முர்ரே கடும் போட்டி

ரியோ ஒலிம்பிக் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு ரென்னிஸ் ஆட்டத்தில் தங்கப்பதக்கத்தை வெல்வது யார் என்பதில் நடால், முர்ரே இடையே கடும் போட்டி நிலவுகிறது.
ரியோ ஒலிம்பிக் தொடர் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே நட்சத்திர வீரரான சுவிட்சர்லாந்தின் பெடரர் தொடரிலிருந்து விலகினார். இதனால் தங்கப்பதக்கத்தை வெல்லும் போட்டி நடால், ஜோகோவிக், முர்ரே ஆகியோருக்கு இடையிலான மும்முனைப் போட்டியாகப் பார்க்கப்பட்டது. ஆனால், பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளவரும் பல கிண்ணங்களை அடுக்கி வைத்திருப்பவருமான ஜோகோவிக் தொடரிலிருந்து முதல் சுற்றுடன் வெளியேற்றப்பட்டுள்ள நிலையில் நடால், முர்ரே இருவருக்கும் இடையிலான இருமுனைப் போட்டியாக தங்கப் பதக்கத்துக்கான போட்டி மாறியுள்ளது. விம்பிள்டன் தொடரைக் கைப்பற்றி முர்ரே சிறந்த போர்மில் உள்ளார். காயம் காரணமாக கடந்த பல மாதங்களாக ஓய்விலிருந்த நிலையில் அதிலிருந்து மீண்டு வந்து மிரட்டிக் கொண்டிருக்கிறார் நடால். மொத்தத்தில் இருவரும் ஆகச் சிறந்த போர்மில் உள்ளனர். ரியோ ஒலிம்பிக் தொடரின் முதல் சுற்றுக்களில் இருவரும் வெற்றிபெற்றுள்ளனர். ரியோ ஒலிம்பிக் தொடருடன் ரென்னிஸ் உலகை ஆட்டிப் படைக்கப்போவது யார்? என்பது இன்னும் சில நாள்களில் தெரிந்துவிடும். (ம)



## இங்கிலாந்து விழும் மிஸ்பா தெரிவித்தார்

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் பாகிஸ்தான் வெற்றி பெறும் எனத் தெரிவித்தார் அந்த அணியின் தலைவரான மிஸ்பா உல் ஹக்.
தொடரில் நான்கு டெஸ்ட் ஆட்டங்கள். முதல் மூன்று ஆட்டங்களின் முடிவில் இங்கிலாந்து 2:1 என்று முன்னிலையில் உள்ளது. இதனால் தற்போது நடைபெற்று வரும் ஆட்டத்தில் வெற்றிபெற்று தொடரை 2:2 என்று சமன்செய்ய பாகிஸ்தான் முனைப்புக் காட்டும் என்று எதிர்பார்க்கையிலேயே மிஸ்பா இவ்வாறு தெரிவித்தார்.
இது எங்களுக்கு மிகவும் முக்கியமான டெஸ்ட். இந்தத் தொடரை நாங்கள் வென்றால் எனக்கு மட்டுமல்ல, அணிக்கும் மிகவும் நல்ல மனஉறுதியாக இருக்கும். சொந்த மண்ணில் இங்கிலாந்து அணியினர் நம்பிக்கையுடன் அபாரமாக விளையாடுவார்கள். ஆனால், எந்தவொரு சூழ்நிலையில் இருந்தும் திரும்ப முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். ஏனென்றால், இது எங்களுக்கு வாழ்வா? சாவா? ஆட்டம். ஆகவே, நாங்கள் மிகவும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவோம் என மிஸ்பா மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.